रजिस्ट्री सं० डी-221

Registered No. D-221
பதிவு எண், டி-221

भारत का राजपत्र
The Gazette of India
இந்திய அரசிதழ்

असाधारण
EXTRAORDINARY
சிறப்பிதழ்

भाग XV खण्ड 1
Part XV Section 1
பகுதி XV பிரிவு 1

प्राधिकार से प्रकाशित
PUBLISHED BY AUTHORITY
அதிகாரத்துடன் வெளியிடப்பெற்றது

सं 1] नई दिल्ली, मंगलवार, 16 अप्रैल, 1985/26 चैत्र, 1907, शक [खण्ड II

No. 1] New Delhi, Tuesday, 16th April 1985 [Vol II]

எண். 1] புது தில்லி, 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் தேதி, செவ்வாய்க்கிழமை [தொகுதி II]

Ministry of Law and Justice

(Legislative Department)

New Delhi, the 16th April 1985

சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

(சட்டத்துறை)

புது தில்லி, 16 ஏப்ரல், 1985

1872 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் (சட்ட எண் 9/1872) தமிழாக்கம் குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகிறது. 1973 ஆம் ஆண்டு அதிகாரமுறை மொழிபெயர்ப்புகள் (மையச் சட்டங்கள்) சட்டத்தின் (சட்ட எண் 50/1973) 2 ஆம் பிரிவின் (அ) கூறின்படி இதுவே தமிழில் அதிகாரமுறை மொழிபெயர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும்.

The translation in Tamil of the Indian Contract Act, 1872 (Act No. 9 of 1872) is hereby published under the authority of the President and shall be deemed to be the authorised translation there of in Tamil under clause (a) of Section 2 of the Authorised Translation (Central Laws) Act, 1973 (Act No. 50 of 1973).

1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம்

(சட்ட எண் 9/1872)[1]

[1872, ஏப்ரல் 25]

ஒப்பந்தங்கள் பற்றிய சட்டத்தின் சில பகுதிகளை வரையறுப்பதும் திருத்துவதும் உகந்ததாக இருப்பதால், இதன்மூலம் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுகிறது:— முகப்புரை.

முன்னுரை

1. இந்தச் சட்டம் 1872 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு

---

1. இந்தியாவிற்காகத் தனித்தியங்கும் சட்டத் தொகுப்பு ஒன்றை ஆயத்தம் செய்வதற்காக அமர்த்தப்பட்ட மாட்சிமை தங்கிய அரசியாரின் ஆணையர்களின் அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப் பட்டதும், 1866 சூலை 6 தேதியிடப்பட்டதுமான சட்ட முன் வடிவின் நோக்கங்கள் மற்றும் காரணங்களுக்கான விவர அறிக்கைக் காக 1967 ஆம் ஆண்டு இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பக்கம் 34ஐப் பார்க்க; ஆய்வுக் குழுவின் அறிக்கைக்காக 1872 மார்ச்சு 28 தேதி யிடப்பட்ட மேற்படி அரசிதழின் சிறப்பிதழைப் பார்க்க; மன்றத்தில் நடந்த கலந்தாய்வுகளுக்காக 1867 ஆம் ஆண்டு மேற்படி அரசிதழின் துணை இதழ் பக்கம் 1064 ஐப் பார்க்க; 1871 ஆம் ஆண்டு மேற்படி அரசிதழின் பக்கம் 313 மற்றும் 1872 ஆம் ஆண்டு மேற்படி அரசிதழின் பக்கம் 527ஐப் பார்க்க.

1882 ஆம் ஆண்டு சொத்து உரிமைமாற்றம் சட்டத்தின் (4/1882) எந்த அத்தியாயங்களும் பிரிவுகளும் ஒப்பந்தங்கள் தொடர்பாக நடைமுறையில் உள்ளனவோ அந்த அத்தியாயங்களும் பிரிவுகளும் அந்தச் சட்டம் நடைமுறையிலுள்ள இடங்களில் இந்தச் சட்டத்தின் பகுதியாக எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும்—1882 ஆம் ஆண்டு 4 ஆம் சட்டத்தின் 4 ஆம் பிரிவைப் பார்க்க.

இந்தச் சட்டமானது, 1941 ஆம் ஆண்டு பேரார் சட்டங்கள் சட்டத்தால் (4/1941) பேராருக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது; 1963 ஆம் ஆண்டு 6ஆம் ஒழுங்குமுறைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினாலும் I ஆம் இணைப்புப்பட்டியலினாலும் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலிக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது; 1963 ஆம் ஆண்டு 11 ஆம் ஒழுங்குமுறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினாலும் இணைப்புப்பட்டியலினாலும் கோவா, டாமன் மற்றும் டையூவுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது; 1965 ஆம் ஆண்டு 8 ஆம் ஒழுங்குமுறைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவினாலும் இணைப்புப் பட்டியலினாலும் லட்சத்தீவு, மினிக்காய் மற்றும் அமின்திவி தீவுகளுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது; 1968 ஆம் ஆண்டு 26 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவினாலும் இணைப்புப்பட்டியலினாலும் பாண்டிச்சேரிக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது; மற்றும் இந்தச் சட்டம்-சொந்தால் பர்கானாக்களில் 1899 ஆம் ஆண்டு சொந்தால் பர்கானாக்கள் நீதி மற்றும் சட்டங்கள் ஒழுங்குமுறைச் சட்டத்தின் (3/1899) 3 ஆம் பிரிவினால் திருத்தப் பட்டவாறான, சொந்தால் பர்கானாக்கள் நிலவரித்திட்ட (settlement) ஒழுங்குமுறைச் சட்டத்தின் (3/1872) 3 ஆம் பிரிவைப் பார்க்க.

பந்த் பிப்லோடாவில்—1929 ஆம் ஆண்டு பந்த் பிப்லோடா சட்டங்கள் ஒழுங்குமுறைச் சட்டத்தின் (1/1929) 2 ஆம் பிரிவைப் பார்க்க.

இது 1874ஆம் ஆண்டு பட்டியல் மாவட்டங்கள் சட்டத்தின் (14/1874) 3(அ) பிரிவின்படியான அறிவிக்கை வாயிலாக—

ஆக்ரா மாகாணத்தின் தாரையில் நடைமுறைக்கு வந்திருப்பதாக விளம்பப்பட்டிருக்கிறது.—1876 ஆம் ஆண்டு இந்திய அரசிதழ், பகுதி I, பக்கம் 505 பார்க்க.

அளாவுகை மற்றும் தொடக்கம்.

இது, [1][ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக] இந்தியா முழுவதையும் அளாவிநிற்கும்; மேலும், இது 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

காப்புரை.

[2]*** இதில் அடங்கியுள்ள எதுவும், இதன்மூலம் வெளிப்படையாக நீத்தறவு செய்யப்படாத இயற்றுச் சட்டம் (Statute), செய்சட்டம் (Act) அல்லது ஒழுங்குமுறைச்சட்டம் (Regulation) ஏதொன்றின் வகைமுறைகளையுமோ, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாததாய் இராத வாணிக வழக்காறு அல்லது வழக்கம் எதையுமோ, ஒப்பந்தம் ஏதொன்றின் அடைவு (incident) எதையுமோ ஊறுபடுத்துதல் ஆகாது.

பொருள்கோளுக்கான வகைமுறை.

2. மாறுபட்ட கருத்து தறுவாயிலிருந்து தோன்றினாலன்றி, இந்தச் சட்டத்தில், பின்வரும் சொற்களும் சொற்றொடர்களும் பின்வரும் பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றன:—

(அ) ஓர் ஆள் மற்றொருவரிடம் தாம் எதனையும் செய்ய அல்லது செய்யாது தவிர்க்க விரும்புவதை, அத்தகைய செய்கைக்கு அல்லது தவிர்ப்புக்கு அந்த மற்றையவரின் இசைவளிப்பைப் பெறும் நோக்கத்தோடு தெரிவிக்கின்றபோது, அவர் தெரிப்பு (proposal) ஒன்று வழங்குவதாகச் சொல்லப்படுவார்;

(ஆ) தெரிப்பு வழங்கப்பட்ட ஆள் அதற்குத் தமது இசைவளிப்பைத் தெரிவிக்கும்போது அந்தத் தெரிப்பு ஏற்றுக்கொள்ளப்படுவதாகச் சொல்லப்படுகிறது. தெரிப்பானது ஏற்றுக்கொள்ளப்படும்போது, வாக்குறுதி (promise) ஆகிவிடுகிறது;

(இ) தெரிப்பு வழங்கும் ஆள், ''வாக்குறுதிதருநர்'' எனப்படுவார்; மற்றும் அந்தத் தெரிப்பை ஏற்றுக்கொள்ளும் ஆள், ''வாக்குறுதிபெறுநர்'' எனப்படுவார்;

(ஈ) வாக்குறுதிதருநரின் விருப்பத்தின் பேரில், வாக்குறுதிபெறுநரோ, வேறு ஆள் எவருமோ ஏதாவது ஒன்றைச் செய்திருக்கின்றபோது அல்லது

இது ஆசாரிபாத், லோகர்தாகா மற்றும் மன்பூம் மாவட்டங்களில் மற்றும் தால்பூம் பர்கானாவில் மற்றும் சிங்பூம் மாவட்டத்திலுள்ள கோல்ஹானில் நடைமுறைக்கு வந்திருப்பதாக விளம்பப்பட்டிருக்கிறது—1881 ஆம் ஆண்டு இந்திய அரசிதழ் பகுதி I பக்கம் 504 ஐப் பார்க்க.

லோகர்தாகா மாவட்டமானது, 1894 ஆம் ஆண்டில் பிரிவினை செய்யப்பட்ட இப்போதைய பல்மாவ் மாவட்டத்தை அந்தச் சமயத்தில் உள்ளடக்கியிருந்தது.

லோ ர்தாகா மாவட்டம் இப்போது ராஞ்சி மாவட்டம் என்று வழங்கப்பெறுகிறது – 1899 ஆம் ஆண்டு கல்கத்தா அரசிதழ் பகுதி I பக்க 44ஐப் பார்க்க.

1. ''இ பகுதி மாநிலங்கள் நீங்கலாக'' என்பதற்குப் பதிலாக 1951 ஆம் ஆண்டு 3 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவினாலும் இணைப்புப் பட்டியலினாலும் அமைக்கப்பட்டது.

2. ''இதற்கான இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட செய்சட்டங்கள் அதன் 3 ஆம் பத்தியில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு நீத்தறவு செய்யப்படுகின்றன. ஆனால்'' என்னும் சொற்கள் 1914 ஆம் ஆண்டு 10 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவினாலும் II ஆம் இணைப்புப்பட்டியலினாலும் நீத்தறவுசெய்யப்பட்டன.

செய்யாது தவிர்த்திருக்கின்றபோது, அல்லது செய்கின்றபோது அல்லது செய்யாது தவிர்க்கின்ற போது, அல்லது செய்ய அல்லது செய்யாது தவிர்க்க வாக்குறுதி தருகின்றபோது, அத்தகைய செய்கை அல்லது தவிர்ப்பு அல்லது வாக்குறுதி மேற் சொன்ன வாக்குறுதிக்கு மறுபயன் (consideration) எனப்படும் ;

(உ) வாக்குறுதி ஒவ்வொன்றும், ஒன்றுக்கொன்று மறு பயனாக அமைகிற வாக்குறுதிகளின் தொகுதி ஒவ்வொன்றும் ஓர் உடன்பாடாகும்;

(ஊ) ஒன்றுக்கொன்று மறுபயனாக அல்லது மறுபயனின் ஒரு பகுதியாக அமைகிற வாக்குறுதிகள், ஒன்றுக் கொன்றான வாக்குறுதிகள் எனப்படும்;

(எ) சட்டத்தின்மூலம் செயற்படுத்தத்தக்கதாயிராத ஓர் உடன்பாடு, செல்லாதது எனப்படும்;

(ஏ) சட்டத்தின் மூலம் செயற்படுத்தத்தக்கதாயுள்ள ஓர் உடன்பாடு, ஓர் ஒப்பந்தமாகும்;

(ஐ) தரப்பினர்களில் ஒருவருடைய அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்களுடைய தெரிவின்பேரில் சட்டத் தின் மூலம் செயற்படுத்தத்தக்கதாய், ஆனால் மற்றையவருடைய அல்லது மற்றையவர்களுடைய தெரிவின்பேரில் அல்லாததாய் உள்ள ஓர் உடன் பாடு, செல்லாததாக்கத்தக்கதோர் ஒப்பந்த மாகும்;

(ஒ) சட்டத்தின் மூலம் செயற்படுத்தத்தக்க நிலை அற்றுப் போகின்ற ஓர் ஒப்பந்தமானது, அது செயற்படுத்தத்தக்க நிலை அற்றுப்போகின்ற போது செல்லாததாகிவிடுகிறது.

அத்தியாயம் I

தெரிப்புகளைத் தெரிவித்தல், ஏற்றல் மற்றும் பின்னறவு செய்தல் பற்றி

தெரிப்புகளைத் தெரிவித்தலும், ஏற்றலும், பின்னறவுசெய்தலும்

3. தெரிப்புகளைத் தெரிவித்தலும், தெரிப்புகளை ஏற்றலும், தெரிப்புகளையும் ஏற்புகளையும் பின்னறவுசெய்தலும், முறையே, தெரிப்பு வழங்குகின்ற, ஏற்றுக்கொள்கின்ற அல்லது பின்னறவுசெய்கின்ற தரப்பினர், எந்தச் செய்கையால் அல்லது விடுகையால் அத்தகைய தெரிப்பை, ஏற்பை அல்லது பின்னறவைத் தெரிவிக்கக் கருதுகிறாரோ அல்லது எந்தச் செய்கை அல்லது விடுகை அதனைத் தெரிவிக்கிற விளைவைக் கொண்டிருக்கிறதோ அந்தச் செய்கை அல்லது விடுகை எதனாலும் செய்யப்பட்டவையெனக் கொள்ளப்படுகின்றன.

தெரிவிப்பு எப்போது முடிவடைகிறது.

4. ஒரு தெரிப்பைத் தெரிவித்தலானது, எந்த ஆளுக்கு அது செய்யப்படுகிறதோ அந்த ஆளுக்கு அது தெரியவருகிறபோது முடிவடைகிறது.

ஓர் ஏற்பைத் தெரிவித்தலானது,—

அது ஏற்குநரின் ஆளுகைக்கு அப்பாற்பட்டதாகும் வகையில், தெரிப்புத்தருநருக்கு அனுப்பு வழியொன்றில் சேர்ப்பிக்கப்படுகிறபோது, தெரிப்புத் தருநருக்கு எதிராகவும்,

அது தெரிப்புத் தருநருக்குத் தெரியவருகிறபோது, ஏற்குநருக்கு எதிராகவும்

முடிவடைகிறது.

பின்னறவுசெய்தலைத் தெரிவித்தலானது,—

அதைச் செய்பவரின் ஆளுகைக்கு அப்பாற்பட்டதாகும் வகையில், எந்த ஆளுக்கு அது செய்யப்படுகிறதோ அந்த ஆளுக்கு அது அனுப்பு வழியொன்றில் சேர்ப்பிக்கப்படுகிறபோது, அதைச் செய்யும் ஆளுக்கு எதிராகவும்,

எந்த ஆளுக்கு அது செய்யப்படுகிறதோ அந்த ஆளுக்கு அது தெரியவருகிறபோது, அந்த ஆளுக்கு எதிராகவும் முடிவடைகிறது.

எடுத்துக்காட்டுகள்.

(அ) ஒரு வீட்டை ஒரு குறிப்பிட்ட விலைக்கு 'ஆ' என்பவருக்கு விற்பதற்காக 'அ' என்பவர் கடிதம் மூலம் தெரிப்பு வழங்குகிறார். அக் கடிதத்தை 'ஆ' பெறுகிறபோது தெரிப்பைத் தெரிவித்தலானது முடிவடைகிறது.

(ஆ) அஞ்சல் வழி அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் 'அ' என்பவரது தெரிப்பை 'ஆ' என்பவர் ஏற்கிறார்.

அந்த ஏற்பைத் தெரிவித்தலானது அஞ்சலில் அது இடப்படுகிற போது 'அ' வுக்கு எதிராகவும், அக் கடிதம் 'அ' வினால் பெறப் படுகிறபோது 'ஆ' வுக்கு எதிராகவும் முடிவடைகிறது.

(இ). 'அ' என்பவர் தமது தெரிப்பைத் தந்தி மூலம் பின்னறவு செய்கிறார். அந்தப் பின்னறவானது அந்தத் தந்தி அனுப்பப்படு கிறபோது 'அ' வுக்கு எதிராக முடிவடைகிறது. அதை 'ஆ' என்பவர் பெறுகிறபோது அது 'ஆ' வுக்கு எதிராக முடிவடைகிறது.

'ஆ' தமது ஏற்பைத் தந்தி மூலம் பின்னறவு செய்கிறார். 'ஆ' பின்னறவு செய்வதானது அந்தத் தந்தி அனுப்பப்படுகிறபோது 'ஆ' வுக்கு எதிராகவும், அது 'அ' வைச் சென்றடைகிறபோது, 'அ' வுக்கு எதிராகவும் முடிவடைகிறது.

தெரிப்புகளையும் ஏற்புகளையும் பின்னறவு செய்தல்.

5. தெரிப்பு ஒன்று, அதன் ஏற்பைத் தெரிவித்தலானது தெரிப்புத்தருநருக்கு எதிராக முடிவடைவதற்கு முன்பு எந்த நேரத்திலும் பின்னறவு செய்யப்படலாம்; ஆனால் அதற்குப் பிற்பாடு அன்று.

ஏற்பு ஒன்று, அந்த ஏற்பைத் தெரிவித்தலானது ஏற்குநருக்கு எதிராக முடிவடைவதற்கு முன்பு எந்த நேரத்திலும் பின்னறவுசெய்யப்படலாம்; ஆனால் அதற்குப் பிற்பாடு அன்று.

எடுத்துக்காட்டு.

அஞ்சல்வழி அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தின் மூலமாக 'ஆ' என்பவருக் குத்தகை வீட்டை விற்பதாக 'அ' என்பவர் தெரிப்பு வழங்குகிறார்.

அஞ்சல்வழி அனுப்பப்பட்ட ஒரு கடிதத்தின் மூலமாக 'ஆ' அந்தத் தெரிப்பை ஏற்கிறார்.

'ஆ' அவரது ஏற்புக் கடிதத்தை அஞ்சலில் இடுவதற்கு முன்பு, எந்த நேரத்திலும் அல்லது இடும் கணத்தில் 'அ' தம் தெரிப்பைப் பின்னறவு செய்யலாம்; ஆனால் அதற்குப் பிற்பாடு அன்று.

ஏற்பைத் தெரிவிக்கும் கடிதம் 'அ' வை அடைவதற்கு முன்பு எந்த நேரத்திலும் அல்லது அவரை அடைகின்ற கணத்தில் 'ஆ' தம் ஏற்பைப் பின்னறவுசெய்யலாம்; ஆனால் அதற்குப் பிற்பாடு அன்று.

பின்னறவு எவ்வாறு செய்யப்படுகிறது.

6. ஒரு தெரிப்பு—

(1) பின்னறவு செய்தலைப் பற்றிய அறிவிப்பைத் தெரிப் புத்தருநர் மற்றத் தரப்பினருக்குத் தெரிவிப்பதால்,

(2) அந்தத் தெரிப்பில் அதை ஏற்பதற்குக் குறிக்கப் பட்ட காலம் கழிந்து போவதால் அல்லது காலம் எதுவும் அவ்வாறு குறிக்கப்படவில்லை என்றால் ஏற்பு தெரிவிக்கப்படாமலேயே ஒரு தகவான காலஅளவு கழிந்து போவதால்,

(3) ஏற்குநர், ஏற்புக்கான முன் வரைக்கட்டினை நிறை வேற்றத் தவறுவதால், அல்லது

(4) அதை ஏற்பதற்கு முன்பு, தெரிப்புத்தருநரின் இறப்பு அல்லது பித்துநிலை பற்றிய செய்தி ஏற்குநருக்குத் தெரியவந்தால், தெரிப்புத்தருநரின் இறப்பினால் அல்லது பித்து நிலையினால் பின் னறவுசெய்யப்படுகிறது.

ஏற்பானது முழுமையானதாக இருத்தல் வேண்டும்.

7. ஒரு தெரிப்பை ஒரு வாக்குறுதியாக மாற்றுவதற்கு, அதன் ஏற்பு—

(1) முழுமையானதாகவும், மட்டுப்படுத்தப்படாததாகவும் இருத்தல் வேண்டும் ;

(2) எந்த முறையில் அந்தத் தெரிப்பு ஏற்கப்பட வேண்டும் என அது விதித்தாலன்றி, வழக்கமானதும் தகவானதுமான ஏதாவதொரு முறையில் இயம்பப்படுதல் வேண்டும். அந்தத் தெரிப்பானது, அது இத்தகைய முறையில் ஏற்கப்படவேண்டுமென்று விதித்திருந்து அத்தகைய முறையில் அந்த ஏற்பு செய்யப்படவில்லை என்றால் தெரிப்புத்தருநர் அந்த ஏற்பு அவருக்குத் தெரிவிக்கப்பட்டதற்குப் பிறகு ஒரு தகவான கால அளவுக்குள் வேறு முறையில்லாமல் விதித்திருக்கிற முறையிலேயே ஏற்கப்படுதல் வேண்டும் என வற்புறுத்தலாம்; ஆனால் அவர் அவ்வாறு செய்யத் தவறினால், அவர் அந்த ஏற்பை ஏற்கிறவர் ஆவார்.

வரைக்கட்டுகளை நிறைவேற்றுவதன் மூலம் அல்லது மறு பயனைப்பெற்றுக் கொள்வதன் மூலம் ஏற்பு.

8. ஒரு தெரிப்பின் வரைக்கட்டுகளை நிறைவேற்றுவது, அல்லது ஒரு தெரிப்போடு வழங்கப்படலாகும் ஒன்றுக்கொன்றான வாக்குறுதிக்குரிய மறுபயன் எதையும் ஏற்பது, அந்தத் தெரிப்பினை ஏற்பதாகும்.

வெளிப்படையான மற்றும் உட்கிடையான வாக்குறுதிகள்

9. வாக்குறுதி எதற்குமான தெரிப்பு அல்லது ஏற்பு, எந்த அளவுக்குச் சொற்களால் வழங்கப்படுகிறதோ அந்த அளவுக்கு அந்த வாக்குறுதி வெளிப்படையானது என்று சொல்லப்படுகிறது. அத்தகைய தெரிப்பு அல்லது ஏற்பு என்பது சொற்களால் அல்லாமல் எந்த அளவுக்கு வேறு வகையில் வழங்கப்படுகிறதோ அந்த அளவுக்கு அந்த வாக்குறுதி உட்கிடையானது என்று சொல்லப்படுகிறது.

அத்தியாயம் II

ஒப்பந்தங்கள், செல்லாததாக்கத்தக்க ஒப்பந்தங்கள் மற்றும் செல்லாததாக உள்ள உடன்பாடுகள் பற்றி.

10. எல்லா உடன்பாடுகளும், அவை சட்டப்படியமைந்த மறுபயனுக்காக, சட்டப்படியமைந்த நோக்கத்தோடு, ஒப்பந்தம் செய்துகொள்வதற்குத் தகுதிவாய்ந்த தரப்பினர்களால், அவர்களின் தன்னியல்பான இசைவுடன் செய்யப்பட்டிருந்து, இதன்மூலம் வெளிப்படையாகச் செல்லாதவையானவை என்று விளம்பப்படாதவையாக இருக்குமானால், ஒப்பந்தங்களாகின்றன. என்னென்ன உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் ஆகும்.

[1][இந்தியா]வில் நடைமுறையிலிருப்பதும் இதன்மூலம் வெளிப்படையாக நீத்தறவு செய்யப்படாததுமான எந்தச் சட்டம், ஒப்பந்தம் எதுவும் எழுத்து வடிவில் செய்யப்பட வேண்டுமென்று அல்லது சான்றாளர்கள் முன்னிலையில் செய்யப்படவேண்டுமென்று வேண்டுறுத்துகிறதோ அந்தச் சட்டம் எதையும், அல்லது ஆவணங்களைப் பதிவு செய்தல் பற்றிய சட்டம் எதையும், இதில் அடங்கியுள்ள எதுவும் ஊறுபடுத்துதல் ஆகாது.

11. தாம் உட்பட்டவராயிருக்கிற சட்டத்தின்படி உரிய வயது அடைந்தவராயும், சீர்மனமுடையவராயும், தாம் உட்பட்டவராயிருக்கிற சட்டம் ஏதொன்றின்படியும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்குத் தகுதிக்கேடுற்றிராதவராயும் உள்ள ஒவ்வோர் ஆளும் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியுடையவராவார். ஒப்பந்தம் செய்துகொள்ளத் தகுதியுடையவர் யாவர்.

12. ஓர் ஆள் ஒப்பந்தமொன்றைச் செய்கிற நேரத்தில், அதைப் புரிந்து கொள்ளும் திறனுடையவராயும், அதனால் அவருடைய நலன்கள் பொறுத்து ஏற்படும் விளைவு பற்றிப் பகுத்தறிவுக்குகந்த முடிவுக்கு வருகிற திறனுடையவராயும் இருப்பாரானால், ஒப்பந்தம் செய்வதைப் பொறுத்து அவர் சீர்மனம் உடையவராயிருப்பதாகச் சொல்லப்படுவார். ஒப்பந்தம் செய்தல் பொறுத்து சீர்மனம் யாது.

பொதுவாகச் சீர்கேடுற்ற மனம் உடையவராக, ஆனால் சிற்சில சமயங்களில் சீர்மனம் கொண்டிருப்பவராக உள்ள ஓர் ஆள், சீர்மனம் உடையவராக இருக்கும்போது ஒப்பந்தம் செய்யலாம்.

பொதுவாகச் சீர்மனம் உடையவராக, ஆனால் சிற்சில சமயங்களில் சீர்கேடுற்ற மனம் கொண்டிருப்பவராக உள்ள ஓர் ஆள், அவர் சீர்கேடுற்ற மனம் கொண்டிருக்கும்போது ஒப்பந்தம் செய்தலாகாது.

எடுத்துக்காட்டுகள்.

(அ) இடையிடையே சீர்மனம் உடையவராக உள்ள பித்தர் காப்பக நோயாளி ஒருவர் அந்த இடை நேரங்களின்போது ஒப்பந்தம் செய்யலாம்.

---

1. 1950 ஆம் ஆண்டு ஏ. ஓ. (A.O) வினால் " அந்த மாகாணங்கள் " என்பதற்குப் பதிலாக அமைக்கப்பட்ட " இ பகுதி மாநிலங்கள் மற்றும் இ பகுதி மாநிலங்கள்" என்பனவற்றிற்குப் பதிலாக, 1951 ஆம் ஆண்டு 3 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் இணைப்புப் பட்டியலினால் அமைக்கப்பட்டது.

(ஆ) நல்லறிவுடைய எந்த மனிதர் காய்ச்சலினால் பிதற்று நிலையிலிருக்கிறாரோ அல்லது ஒப்பந்தமொன்றின் வரையீடுகளைப்புரிந்து கொள்ளவோ, அதனால் அவருடைய நலன்களைப் பொறுத்து ஏற்படும் விளைவைப்பற்றி பகுத்தறிவுக்குகந்த முடிவுக்கு வரவோ முடியாத அளவுக்கு குடிவெறியிலிருக்கிறாரோ அந்த மனிதர் ஒருவர், அத்தகைய பிதற்றுநிலை அல்லது குடிவெறி நீடித்திருக்கின்றபோது ஒப்பந்தம் செய்ய முடியாது.

"இசைவு" என்பதற்குப் பொருள்வரையறை.

13. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள், ஒரே பொருளைக் குறித்து ஒரே கருத்தில் உடன்படும்போது, இசைவதாகச் சொல்லப்படுவர்.

"தன்னியல்பான இசைவு" என்பதற்குப் பொருள்வரையறை.

14. இசைவானது, அது—

(1). 15 ஆம் பிரிவில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான வலுக்கட்டாயத்தினால், அல்லது

(2). 16 ஆம் பிரிவில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான தகாத செல்வாக்கினால், அல்லது

(3). 17 ஆம் பிரிவில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான மோசடியினால், அல்லது

(4). 18 ஆம் பிரிவில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான திரித்துக் கூறுகையினால், அல்லது

(5). 20, 21, 22 ஆகிய பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, தவற்றினால்

விளைவிக்கப்பட்டிராதபோது, தன்னியல்பானது என்று சொல்லப்படும்.

இசைவானது, அத்தகைய வலுக்கட்டாயம், தகாத செல்வாக்கு, மோசடி, திரித்துக்கூறுகை, அல்லது தவறு இருந்தாலொழிய அளிக்கப்பட்டிருந்திருக்காது என்றுள்ளபோது, அது அவ்வாறு விளைவிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

"வலுக்கட்டாயம்" என்பதற்குப் பொருள்வரையறை.

15. "வலுக்கட்டாயம்" என்பது, ஆள் எவரையும் உடன்பாடு ஒன்றில் ஈடுபடச் செய்யும் கருத்தோடு எந்த ஆளுக்காயினும் ஊறு விளைவிக்கும் வகையில், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தினால் தடை செய்யப்பட்டிருக்கிற செயல் (45/1860) எதையும் செய்தல் அல்லது செய்யப்போவதாக அச்சுறுத்தல் அல்லது சொத்து எதையும் சட்டமுரணாக இருத்திவைத்தல், அல்லது இருத்தி வைக்கப்போவதாக அச்சுறுத்தல் ஆகும்.

விளக்கம்.—வலுக்கட்டாயம் கையாளப்படுகிற இடத்தில் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டம் நடைமுறையில் (45/1860) இருக்கிறதா இல்லையா என்பது ஒரு பொருட்டன்று.

எடுத்துக்காட்டு.

ஆழ்கடலிலுள்ள ஆங்கிலேயக் கப்பல் ஒன்றில் இருக்கிற 'அ' என்பவர் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின்படி குற்றமுறு மிரட்டலாகும் (45/1860) செயல் ஒன்றைச் செய்வதன் மூலம் 'ஆ' என்பவரை ஓர் உடன்பாட்டை எழுதிக்கொடுக்கும்படி செய்கிறார்.

பிற்பாடு 'அ', 'ஆ' மீது ஒப்பந்த மீறுகை செய்ததாகக் கல்கத்தாவில் வழக்கிடுகிறார்.

'அ' வின் செயல் இங்கிலாந்துச் சட்டப்படி ஒரு குற்றமாகாத போதிலும், அந்தச் செயல் செய்யப்பட்ட சமயத்தில் அல்லது அந்த (45/1860) இடத்தில் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 506 ஆம் பிரிவு நடைமுறையில் இல்லாதிருந்தபோதிலும், அவர் வலுக்கட்டாயத்தைக் கையாண்டிருக்கிறார்.

[1][16. (1) தரப்பினர்களில் ஒருவர் மற்றவரின் விருப்பத்தின் மீது ஆளுகை செலுத்துகிற நிலையிலிருந்து, அந்த மற்றவருக்கெதிராக நேர்மையற்றதான நன்மை ஒன்றைப் பெறுவதற்கு அந்த நிலையைப் பயன்படுத்துகிறார் என்ற தன்மையில் அத்தரப்பினர்களுக்கிடையே — நிலவுகின்ற உறவுகள் இருக்குமிடத்து, ஒப்பந்தம் ஒன்று ''தகாத செல்வாக்கினால்'' தூண்டப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. " தகாத செல்வாக்கு " என்பதற்குப் பொருள் வரையறை.

(2) குறிப்பாகவும், முன்சொன்ன நெறியின் பொதுப் பாங்கிற்கு ஊறின்றியும், ஓர் ஆள் மற்றொருவருடைய விருப்பத்தின்மீது—

(அ) உண்மையில் அல்லது தோற்றத்தில் அவர் அந்த மற்றவர்மீது அதிகாரம் கொண்டிருக்குமிடத்து அல்லது அந்த மற்றவரைப் பொறுத்து நம்பக உறவு கொண்டிருக்குமிடத்து, அல்லது

(ஆ) வயது, நோய் அல்லது மன அல்லது உடல் துன்பம் காரணமாகத் தற்காலிகமாகவோ, நிலையாகவோ, மனத்திறன் சீர்கெட்டிருக்கிற ஓர் ஆளுடன் அவர் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளுமிடத்து

ஆளுகை செலுத்துகிற நிலையிலிருப்பதாகக் கொள்ளப்படுவார்.

(3) மற்றொருவருடைய விருப்பத்தின்மீது ஆளுகை செலுத்துகிற நிலையில் உள்ள ஓர் ஆள், அவருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருந்து, அந்த நடவடிக்கையானது, முகநிலையிலேயே அல்லது அளிக்கப்பட்ட சான்றின்பேரில் மனச்சான்றுக்கு ஒவ்வாததாகத் தோன்றுமிடத்து, அத்தகைய ஒப்பந்தம் தகாத செல்வாக்கினால் தூண்டப்படவில்லை என்று மெய்ப்பிக்கும் சுமையானது, அந்த மற்றவருடைய விருப்பத்தின்மீது ஆளுகை செலுத்துகிற நிலையிலுள்ள ஆளைச் சார்தல் வேண்டும்.

இந்த உட்பிரிவிலுள்ள எதுவும், 1872 ஆம் ஆண்டு இந்தியச் சான்றுச் சட்டத்தின் 111 ஆம் பிரிவின் வகைமுறைகளுக்கு ஊறுசெய்தல் ஆகாது. (1/1872)

எடுத்துக்காட்டுகள்.

(அ). அ என்பவர் தம்முடைய மகனான 'ஆ' என்பவருக்கு அவருடைய உரிய வயது அடையா நிலையின்போது (minority) பணம் கடனாகக் கொடுத்துவிட்டு 'ஆ' உரிய வயது எய்தியதும் பெற்றோருக்குரிய செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்தி அந்தக் கடனைப் பொறுத்துக் கொடுபட வேண்டிய தொகையைவிட அதிகமான ஒரு தொகைக்கு 'ஆ' விடமிருந்து முறி (bond) ஒன்றைப் பெறுகிறார். 'அ' தகாத செல்வாக்கைப் பயன்படுத்துகிறார்.

(ஆ). நோய் அல்லது வயது காரணமாகத் தளர்வடைந்த 'அ' என்ற ஒரு மனிதர், அவர்மேல், அவருடைய மருத்துவக் கவனிப்பாளர் என்கிற முறையில் 'ஆ' என்பவருக்குள்ள செல்வாக்கினால், 'ஆ' வின் தொழில்முறைப் பணிக்காக தகவற்ற ஒரு தொகையை 'ஆ' விடம் செலுத்துவதற்கு உடன்படுமாறு தூண்டப்படுகிறார். 'ஆ' தகாத செல்வாக்கைப் பயன்படுத்துகிறார்.

(இ). 'அ' என்பவர் அவருடைய ஊரில் வட்டித் தொழிலராயுள்ள 'ஆ' என்பவரிடம் கடன்பட்டிருந்து மனச்சான்றுக்கு ஒவ்வாதவையாகத் தோன்றுகிற வரையீடுகளின் பேரில் மேற்கொண்டு கடன் ஒன்றுக்கு ஒப்பந்தம் செய்கிறார். அந்த ஒப்பந்தம் தகாத செல்வாக்கினால் தூண்டப்படவில்லை என்று மெய்ப்பிப்பது 'ஆ' வைச் சார்கிறது.

---

1. 1899 ஆம் ஆண்டு 6 ஆம் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் முதன்முதலிலிருந்த 16 ஆம் பிரிவுக்குப் பதிலாக அமைக்கப்பட்டது.

(ஈ) பணச் சந்தையில் முடை ஏற்பட்டிருக்கும் நேரத்தில் 'அ' என்பவர் கடன் ஒன்றுக்காக வங்கியர் ஒருவரிடம் விண்ணப்பம் செய்து கொள்கிறார். அந்த வங்கியர் வழக்கத்திற்கு மாறான அதிகமான ஒரு வட்டி வீதத்திற்கு அன்றி கடன் கொடுக்க மறுக்கிறார். 'அ' அந்த வரையீடுகளின்பேரில் கடனைப் பெறுகிறார். இது வழக்கமான தொழில் நடைமுறையிலுள்ள ஒரு நடவடிக்கையாகும்; ஆகவே அந்த ஒப்பந்தம் தகாத செல்வாக்கினால் தூண்டப்பட்டது அன்று.]

"மோசடி" என்பதற்குப் பொருள் வரையறை.

17. ''மோசடி ''என்பது, ஒப்பந்தம் ஒன்றின் ஒரு தரப்பினரால் அல்லது அவரது மறைமுக ஆதரவுடன் அல்லது அவருடைய முகவரால் அதன் மற்றொரு தரப்பினரை அல்லது அவருடைய முகவரைவஞ்சிக்கும் அல்லது அந்த ஒப்பந்தத்தில் ஈடுபடத் தூண்டுகிற உட்கருத்தோடு செய்யப்படுகிற பின்வரும் செயல்களில் எதுவும் என்று பொருள்படுவதோடு அதை உள்ளடக்கவும் செய்யும்:—

(1) உண்மையல்லாத பொருண்மையை, அது உண்மையென்று நம்பாத ஒருவர், பொருண்மையெனக் குறிப்பாய் உணர்த்துதல்;

(2) ஒரு பொருண்மை, அது இருப்பதனை அறிந்திருக்கிற அல்லது அது இருப்பதாக நம்புகிற ஒருவரால் முனைந்து மறைக்கப்படுதல்;

(3) நிறைவேற்றும் உட்கருத்து ஏதுமின்றி வாக்குறுதி ஒன்றை அளித்தல்;

(4) வஞ்சிப்பதற்கு ஏற்றதாகவுள்ள வேறு எந்தச் செயலும்;

(5) மோசடியானது என்று சட்டம் குறிப்பாக விளம்புகை செய்கிற செய்கை அல்லது விடுகை எதுவும்.

விளக்கம்.—ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்கான ஒருவருடைய விருப்பத்துக்குப் பெரும்பாலும் ஊறுசெய்யக்கூடிய பொருண்மைகளைக் குறித்து வாளாயிருப்பது மட்டுமே, அந்நேர்வின் சூழ்நிலைகள், அவற்றைக் கவனத்தில்கொண்டு பார்க்கும்போது, பேச வேண்டியது வாளாயிருப்பவரது கடமையாகும் என்னும்படி இருக்கின்றனவென்றாலன்றி அல்லது அவருடைய வாளாமையே பேச்சுக்குச் சமமானதாய் இருக்கின்றதென்றாலன்றி, மோசடியாகாது.

எடுத்துக்காட்டுகள்.

(அ). ஏலத்தில் குதிரை ஒன்றை, அது கோளாறுள்ளது என்று தமக்குத் தெரிந்தே 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு விற்கிறார். 'அ', குதிரை கோளாறுள்ளது என்பதைப் பற்றி 'ஆ'விடம் ஒன்றும் சொல்லவில்லை. 'அ' வைப் பொறுத்தமட்டில் மோசடி இல்லை.

(ஆ). 'ஆ' என்பவர் 'அ' என்பவரின் மகள். 'ஆ' அண்மையில் உரிய வயது அடைந்திருக்கிறார். இங்கு, குதிரை கோளாறுள்ளதாக இருக்குமானால் அதை 'ஆ' விடம் சொல்வது, தரப்பினர்களிடையேயுள்ள உறவு நிலை காரணமாக 'அ' வின் கடமையாகிறது.

(இ). 'ஆ' என்பவர், 'அ' என்பவரிடம், ''நீ இதை மறுதலிக்கவில்லையானால் குதிரை கோளாறற்றது என நான் எடுத்துக்கொள்வேன்'' என்று சொல்கிறார். 'அ' ஒன்றும் சொல்லவில்லை. இங்கு 'அ' வின் வாளாமை பேச்சுக்குச் சமமானதாகும்.

(ஈ). வணிகர்களாயிருக்கிற 'அ' என்பவரும், 'ஆ' என்பவரும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்கிறார்கள். ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான 'ஆ' வின் விருப்பத்துக்கு ஊறுசெய்யக்கூடிய விலை மாற்றம் பற்றிய தனி மறைவான தகவல் 'அ' விடம் இருக்கிறது. 'அ', 'ஆ' வுக்குத் தகவல் தெரிவிக்கக் கடமைப்பட்டவரல்லர்.

18. "திரித்துக் கூறுகை" என்பது—

"திரித்துக் கூறுகை" என்பதற்குப் பொருள் வரையறை,

(1) உண்மையல்லாத தகவல் ஒன்றை, தான் உண்மையென்று நம்புகிறபோதிலும், அதை உண்மையென்று திட்டமாக அறைவதற்கு, அவருடைய தகவலில் போதிய ஆதாரமில்லாத போதும், அவ்வாறு அறைதல், என்று,

(2) மற்றொருவரை, அவருக்கு ஊறு செய்யும் வகையில் அல்லது அவர் மூலம் உரிமை கோரும் எவரொருவருக்கும் ஊறுசெய்யும் வகையில், தவறாக இட்டுச் செல்வதன் மூலம், வஞ்சிக்கும் உட்கருத்து இல்லாமலேயே கடமை மீறுகைசெய்யும் ஓராளுக்கு அல்லது அவர் மூலம் உரிமை கோரும் எவருக்கும் நன்மை கிடைக்கச்செய்கிற கடமைமீறுகை எதுவும், என்று,

(3) ஓர் உடன்பாட்டின் தரப்பினர் ஒருவரை அந்த உடன்பாட்டுப் பொருளின் சாரம் பற்றிய தவற்றினை, கள்ளமின்றியேயாயினும் செய்வித்தல், என்று

பொருள்படுவதோடு அவற்றை உள்ளடக்கவும் செய்யும்.

தன்னியல்பான இசைவில்லாத உடன்பாடுகளின் செல்லாததாக்கத் தக்க தன்மை.

19. வலுக்கட்டாயம்,[1] * * * மோசடி அல்லது திரித்துக் கூறுகையால் ஓர் உடன்பாட்டுக்கான இசைவு விளைவிக்கப்படும் போது, அந்த உடன்பாடானது எந்தத் தரப்பினரது இசைவு அவ்வாறு விளைவிக்கப்பட்டதோ, அந்தத் தரப்பினரது தெரிவின் பேரில் செல்லாததாக்கத்தக்க ஓர் ஒப்பந்தமாகும்.

ஓர் ஒப்பந்தத்தின் எந்தத் தரப்பினருடைய இசைவானது, மோசடி அல்லது திரித்துக்கூறுகையினால் விளைவிக்கப்பட்டதோ அந்தத் தரப்பினர், தாம் தக்கதெனக் கருதினால், அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்றும், கூறப்பட்டவை உண்மையாக இருந்திருக்குமானால் அவர் எந்த நிலையில் இருந்திருப்பாரோ அந்த நிலையில் தாம் வைக்கப்படுதல் வேண்டும் என்றும் வற்புறுத்தலாம்.

விதிவிலக்கு.—அத்தகைய இசைவு திரித்துக்கூறுகையால் அல்லது 17 ஆம் பிரிவின் பொருளின்படி மோசடியாகிற வாளாமையினால் விளைவிக்கப்பட்டதாயிருந்தால் அந்த ஒப்பந்தம் அப்படி இருந்தபோதிலும், எந்தத் தரப்பினரின் இசைவு அவ்வாறு விளைவிக்கப்பட்டதோ அந்தத் தரப்பினர் இயல்பான முயற்சியுடன் உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான வழிவகைகளைப் பெற்றிருந்தால், செல்லாததாக்கத்தக்கதன்று.

விளக்கம்.—எந்த ஒரு மோசடி அல்லது திரித்துக்கூறுகை, அத்தகைய மோசடி இழைக்கப்பட்ட அல்லது திரித்துக்கூறுகை இழைக்கப்பட்ட ஒப்பந்தத் தரப்பினருடைய இசைவை விளைவிக்கவில்லையோ அந்த மோசடி அல்லது திரித்துக் கூறுகை ஓர் ஒப்பந்தத்தைச் செல்லாததாக்கத்தக்கதாக ஆக்காது.

எடுத்துக்காட்டுகள்.

(அ) 'அ' என்பவர் 'ஆ' என்பவரை வஞ்சிக்கும் உட்கருத்துடன் 'அ'வின் தொழிற்சாலையில் ஆண்டுதோறும் ஐந்நூறு மணங்கு நீலச் சாயம் தயாரிக்கப்படுவதாகப் பொய்யாக எடுத்துரைக்கிறார். அதன்

[1] 1899 ஆம் ஆண்டு சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் "தகாத செல்வாக்கு" என்னும் சொற்கள் நீத்தறவு செய்யப்பட்டன.

மூலம் அந்தத் தொழிற்சாலையை விலைக்கு வாங்கும்படி 'அ' வைத் தூண்டுகிறார். இந்த ஒப்பந்தம் 'ஆ'வின் தெரிவின்பேரில் செல்லாததாக்கத்தக்கதாகும்.

(ஆ). 'அ' என்பவர் திரித்துக் கூறுகையின் மூலம் 'அ'வின் தொழிற்சாலையில் ஆண்டுதோறும் ஐந்நூறு மணங்கு நீலச்சாயம் தயாரிக்கப்படுவதாக 'ஆ' என்பவரைத் தவறாக நம்பும்படி செய்கிறார். 'ஆ' தொழிற்சாலையில் கணக்குகளை ஆய்வு செய்ததில் நானூறு மணங்கு நீலச்சாயம் மட்டும் தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதற்குப் பிறகு 'ஆ' அந்தத் தொழிற்சாலையை விலைக்கு வாங்குகிறார். 'அ'வின் திரித்துக் கூறுகையினால் அந்த ஒப்பந்தம் செல்லாததாக்கத்தக்கதன்று.

(இ). 'அ' என்பவர், 'ஆ' என்பவரிடம் 'அ'வின் நிலச்சொத்து வில்லங்கமற்று இருக்கிறதாக மோசடியாகத் தெரிவிக்கிறார். அதன் பேரில் 'அ' அந்த நிலச்சொத்தை வாங்குகிறார். அந்த நிலச்சொத்து ஓர் அடைமானத்துக்குட்பட்டிருக்கிறது. 'ஆ' அந்த ஒப்பந்தத்தைத் தவிர்க்கலாம் அல்லது அதை நிறைவேற்ற வேண்டுமெனவும் அந்த அடைமானக் கடனைத் தீர்த்துவிட வேண்டும் எனவும் வற்புறுத்தலாம்.

(ஈ). 'ஆ' என்பவர், 'அ' என்பவரின் நிலச்சொத்தில் கனிமப் பொருளின் வரிக்கோடு ஒன்று இருப்பதைக் கண்டுபிடித்த பிறகு அந்தக் கனிமப்பொருள் இருப்பதை 'அ' விடமிருந்து மறைக்கும் முறைகளைக் கையாண்டு மறைத்தும் விடுகிறார். 'அ' வின் அறியாமையால் அந்த நிலச்சொத்தினை 'ஆ' குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ள இயலுகிறது. ஒப்பந்தம் 'அ' வின் தெரிவின் பேரில் செல்லாததாக்கத்தக்கதாகும்.

(உ). 'அ' என்பவருக்கு, 'ஆ' என்பவரின் இறப்பிற்குப் பிறகு ஒரு சொத்தினை வழிமுறையுரிமைப்படி அடைய உரிமையிருக்கிறது. 'ஆ' இறக்கிறார். 'ஆ' வின் இறப்புப் பற்றிய தகவலைப்பெற்ற 'இ' என்பவர், அத் தகவல் 'அ' வைப் போய்ச் சேருவதைத் தடை செய்து விடுகிறார் ; இந்த விதமாக அந்தச் சொத்தில் அவருக்கு இருக்கும் உரித்தைத் தனக்கு விற்குமாறு 'அ' வைத் தூண்டுகிறார். விற்பனை 'அ' வின் தெரிவின் பேரில் செல்லாததாக்கத்தக்கதாகும்.

தகாத செல்வாக்கின் தூண்டுதலினால் ஏற்பட்ட ஒப்பந்தத்தை நீக்கிவிடும் அதிகாரம்.

[1][19 அ. ஓர் உடன்பாட்டுக்கான இசைவு தகாத செல்வாக்கினால் விளைவிக்கப்படுகிறபோது, அந்த உடன்பாடானது, எந்தத் தரப்பினரது இசைவு அவ்வாறு விளைவிக்கப்பட்டதோ அந்தத் தரப்பினரது தெரிவின் பேரில் செல்லாததாக்கத்தக்க ஓர் ஒப்பந்தமாகும்.

அத்தகைய எந்த ஒப்பந்தமும், முழுமையாக அல்லது அதைத் தவிர்க்க உரிமை கொண்டிருந்த தரப்பினர் அதன் அடியாக ஏதேனும் நன்மை அடைந்திருந்தால், நீதிமன்றத்துக்கு நேரியதெனத்தோன்றலாகும் வரையீடுகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், நீக்கிவிடப்படலாம்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவரின் மகன் ஒரு கடனுறுதிச் சீட்டில் 'ஆ' என்பவரின் பெயரைப் பொய்ப்புனைவு செய்திருக்கிறார். 'ஆ', 'அ' வின் மகன் மீது குற்றவழக்கு தொடரப் போவதாக அச்சுறுத்தி பொய்ப்புனைவு செய்யப்பட்ட சீட்டின் தொகைக்கு ஒரு முறியை 'அ' விடமிருந்து எழுதி வாங்கிக் கொள்கிறார். 'ஆ' அந்த முறியின் பேரில் வழக்கிட்டால் நீதிமன்றம் அந்த முறியை நீக்கிவிடலாம்.

(ஆ). 'அ' என்கிற ஒரு வட்டித் தொழிலர் 'ஆ' என்கிற ஓர் உழவருக்கு ரூபாய் நூறு கடனாகக் கொடுக்கிறார். ஆனால், தகாத செல்வாக்கைக் கொண்டு ரூபாய் இருநூறுக்கு திங்களுக்கு நூற்றுக்கு 6 விழுக்காடு வட்டியுடன் ஒரு முறியை எழுதித் தருமாறு 'ஆ' வைத் தூண்டுகிறார். நீதிமன்றம் நேரியதாகத் தோன்றலாகும் வட்டியுடன் ரூபாய் நூறைத் திருப்பிக் கொடுக்குமாறு ஆணையிட்டு அந்த முறியை நீக்கிவிடலாம்.

---

1. 1899 ஆம் ஆண்டு 6 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டது.

2). ஓர் உடன்பாட்டின் இரு தரப்பினரும் அந்த உடன்பாட்டுக்கு இன்றியமையாத பொருண்மை பற்றிய பொருள் குறித்துத் தவறுற்றவராயிருக்குமிடத்து உடன்பாடு செல்லாதது ஆகும்.

பொருண்மை பற்றிய பொருள் குறித்து இருதரப்பினரும் தவறுற்றவராயிருக்குமிடத்துஉடன்பாடு செல்லாததாதல்.

விளக்கம்.—அந்த உடன்பாட்டின் பொருளாக அமைகிற பொருளின் பெறுமானத்தைப் பற்றிய ஒரு தவறான கருத்தானது ஒரு பொருண்மை பற்றிய பொருளைக் குறித்த ஒரு தவறெனக் கொள்ளப்படுதல் கூடாது.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் இங்கிலாந்திலிருந்து பம்பாய்க்கு வந்து கொண்டிருப்பதாகக் கருதப்படுகிற ஒரு குறிப்பிட்ட கப்பற் சரக்கை 'ஆ' என்பவருக்கு விற்க உடன்படுகிறார். விலைப் பேச்சு நடந்த நாளுக்கு முன்னரே அந்தச் சரக்கைக் கொண்டுவரும் கப்பல் மோதி உடைந்து, சரக்குகள் இழக்கப்பட்டு விட்டன என்று தெரியவருகிறது. தரப்பினர்களில் எவரும் அந்தச் செய்திகளை அறிந்திருக்கவில்லை. அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

(ஆ). 'அ' என்பவர் ஒரு குறிப்பிட்ட குதிரையை 'ஆ' என்பவரிடமிருந்து விலைக்கு வாங்க உடன்படுகிறார். விலைப் பேச்சு நடந்த நேரத்தில் குதிரை இறந்து போயிருந்ததென்று தெரியவருகிறது. எனினும் தரப்பினர்களில் எவரும் அந்தச் செய்தியை அறிந்திருக்கவில்லை. அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

(இ). 'ஆ' என்பவரின் வாழ்நாள்வரை ஒரு சொத்தினைத் துய்க்கும் உரிமையைக் கொண்டிருக்கிற 'அ' என்பவர் அதை 'இ' என்பவருக்கு விற்க உடன்படுகிறார். உடன்பாடு செய்து கொண்ட நேரத்தில் 'ஆ' இறந்துபோயிருந்தார். ஆனால் இரு தரப்பினரும் இச்செய்தியை அறியாதிருந்தார்கள். அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

21. ஓர் ஒப்பந்தம் [1][இந்தியா]வில் நடைமுறையிலிருக்கும் சட்டம் எதனையும் பற்றிய தவறு ஒன்றினால் விளைவிக்கப்பட்டது என்பதால் செல்லாததாக்கத்தக்கது அன்று; ஆனால், [1][இந்தியா]வில் நடைமுறையிலில்லாத சட்டம் பற்றிய தவறு ஒன்று, பொருண்மை பற்றிய தவறொன்றுக்குள்ள அதே விளைவைக் கொண்டிருக்கும்.

சட்டம் பற்றிய தவறுகளின் விளைவு.

[2][* * * *]

எடுத்துக்காட்டு.

இந்தியக் காலவரம்புச் சட்டத்தினால் ஒரு குறிப்பிட்ட கடன் காலத்தடையுற்று இருக்கிறது என்ற தவறான நம்பிக்கையின் அடிப்படையில் 'அ' என்பவரும் 'ஆ' என்பவரும் ஓர் ஒப்பந்தத்தைச் செய்து கொள்கிறார்கள். அந்த ஒப்பந்தம் செல்லாததாக்கத்தக்கதன்று.

[3][* * * *]

22. ஓர் ஒப்பந்தம், அதன் தரப்பினர்களில் ஒருவர் பொருண்மை பற்றிய பொருள் பற்றித் தவறுற்றிருந்ததால் விளைந்தது என்கிற காரணத்தால் மட்டுமே செல்லாததாக்கத்தக்கது அன்று.

பொருண்மை பற்றிய பொருளைக்குறித்துஒரு தரப்பினரின் தவற்றினால் விளைந்த ஒப்பந்தம்,

23. ஓர் உடன்பாட்டின் மறுபயன் அல்லது நோக்கம்,—

சட்டப்படியுள்ள மறுபயன்களும் நோக்கங்களும் எவை மற்றும் அல்லாதவை எவை.

அது சட்டத்தால் தடை செய்யப்பட்டிருந்தாலன்றி, அல்லது

---

1. முதன்முதலிலிருந்த "பிரிட்டிஷ் இந்தியா" என்னும் சொற்கள் 1948 ஆம் ஆண்டு ஏ.ஓ. (A.O.) வினால் மற்றும் 1950 ஆம் ஆண்டு ஏ.ஓ. (A.O.) வினால் மேலே உள்ளவாறு சொற்றொடர் இருக்கும்படி சொற்றொடர் அடுத்தடுத்துத் திருத்தப்பட்டுள்ளன.

2. 2 ஆம் பத்தி 1937 ஆம் ஆண்டு ஏ.ஓ. (A.O.) வினால் புகுத்தப்பட்டிருந்து, 1950 ஆம் ஆண் ஏ.ஓ. (A.O.) வினால் விட்டுவிடப்பட்டது.

3. 1917 ஆம் ஆண்டு 24 ஆம் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் II ஆம் இணைப்புப் பட்டியலால் 21 ஆம் பிரிவிற்கான 2 ஆம் எடுத்துக்காட்டு நீத்தறவு செய்யப்பட்டது.

அது ஏற்றுக்கொள்ளப்பட்டால் எந்தச் சட்டத்தின் வகைமுறைகளையும் பயனற்றதாக்கிவிடும் என்ற தன்மையதாக இருந்தாலன்றி, அல்லது

அது மோசடியானதாயிருந்தாலன்றி, அல்லது

அது மற்றொருவருடைய உடலுக்கு அல்லது சொத்துக்குக் கேடு செய்தலை உள்ளடக்கியதாக அல்லது உட்கிடையாகக் கொண்டதாக இருந்தாலன்றி, அல்லது

அதை நீதிமன்றம் ஒழுக்கக்கேடானதாக அல்லது பொதுக்கொள்கைக்கு மாறுபட்டதென்பதாகக் கருதினாலன்றி

சட்டப்படியமைந்துள்ளதாகும்.

இப்படிப்பட்ட நேர்வுகள் ஒவ்வொன்றிலும் உடன்பாட்டின் மறுபயன் அல்லது நோக்கம், சட்டமுரணானது எனச் சொல்லப்படும். நோக்கம் அல்லது மறுபயன் சட்டமுரணானதாக இருக்கும் ஒவ்வோர் உடன்பாடும் செல்லாதது ஆகும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குத் தம் வீட்டை ரூ. 10,000-க்கு விற்க உடன்படுகிறார். இங்கு ரூ. 10,000 கொடுப்பதற்கான 'ஆ'வின் வாக்குறுதியானது, வீட்டை விற்பதற்கான 'அ'வின் வாக்குறுதிக்கு மறுபயனாகும்; மற்றும் வீட்டை விற்பதற்கான 'அ'வின் வாக்குறுதி ரூ. 10,000 கொடுப்பதற்கான 'ஆ'வின் வாக்குறுதிக்கு மறுபயனாகும். இவை சட்டப்படியுள்ள மறுபயன்களாகும்.

(ஆ). 'ஆ' என்பவருக்கு 'இ' என்பவர் கொடுக்க வேண்டியிருக்கிற ரூ. 1,000-த்தை அவர்தரத்தவறினால், ஆறுதிங்கள் முடிவில் 'ஆ' வுக்கு அத்தொகையைத் தாம் தருவதாக 'அ' என்பவர் வாக்குறுதியளிக்கிறார். அதன்படியே, 'இ' என்பவருக்குக் காலத்தவணை கொடுக்க 'ஆ' வாக்குறுதியளிக்கிறார். இங்கு ஒவ்வொரு தரப்பினரது வாக்குறுதியும் மற்றத் தரப்பினரது வாக்குறுதிக்கு மறுபயனாக இருக்கிறது; மற்றும் அவை சட்டப்படியுள்ள மறுபயன்களாகும்.

(இ). 'ஆ' என்பவரால் தமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட தொகைக்காக ஒரு குறிப்பிட்ட கப்பற் பயணத்தின்போது 'ஆ' என்பவரின் கப்பல் மோதி உடைந்துவிட்டால் அதன் பெறுமானத்தை 'ஆ'வுக்கு ஈடு செய்வதாக 'அ' என்பவர் வாக்குறுதியளிக்கிறார். இங்கு 'ஆ' பணம் செலுத்துவதற்கு 'அ' வின் வாக்குறுதி மறுபயனாகிறது; மற்றும் 'அ'வின் வாக்குறுதியானது 'ஆ' பணம் செலுத்துவதற்கு மறுபயனாகிறது; அவை சட்டப்படியுள்ள மறுபயன்களாகும்.

(ஈ). 'ஆ' என்பவரின் குழந்தையைப் பேணிக்காப்பதாக 'அ' என்பவர் வாக்குறுதியளிக்கிறார், மற்றும் 'ஆ' அதன் பொருட்டு 'அ' வுக்கு ஆண்டிற்கு ரூ. 1,000 கொடுப்பதாக வாக்குறுதியளிக்கிறார். இங்கு ஒரு தரப்பினரின் வாக்குறுதி மற்றைய தரப்பினரின் வாக்குறுதிக்கு மறுபயனாகும்; அவை சட்டப்படியுள்ள மறுபயன்களாகும்.

(உ). 'அ', 'ஆ', 'இ' என்பவர்கள் மோசடியாகத் தாங்கள் பெற்றிருக்கும் அல்லது பெறவிருக்கும் ஈட்டங்களை தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ள ஓர் உடன்பாடு செய்து கொள்கிறார்கள். அந்த உடன்பாடு அதன் நோக்கம் சட்ட முரணானதாகையால், செல்லாதது ஆகும்.

(ஊ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குப் பொதுத்துறைப்பணியில் ஒரு வேலை வாங்கித் தருவதாக வாக்குறுதியளிக்கிறார். 'ஆ' என்பவர் 'அ' வுக்கு ரூ. 1,000 கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கிறார். அந்த உடன்பாடானது, அதனுடைய மறுபயன் சட்ட முரணானதாகையால், செல்லாதது ஆகும்.

(எ). ஒரு நிலக்கிழாருக்கு முகவராக இருக்கும் 'அ' என்பவர் தம் முதல்வருக்குத் தெரியாமலேயே தம் முதல்வருக்குச் சொந்தமான நிலத்தினை 'ஆ' என்பவருக்குப் பணத்துக்காக குத்தகைக்கு வாங்கித் தருவதாக உடன்படுகிறார். 'அ' வுக்கும் 'ஆ' வுக்கும் இடையேயான அந்த உடன்பாடானது, அதில் 'அ' என்பவர் தம் முதல்வருக்கு எதிராக மறைப்பு மோசடி செய்வது உட்கிடையாக இருப்பதால், செல்லாதது ஆகும்.

(ஏ). கொள்ளையடித்ததற்காக 'ஆ' என்பவரின் மீது 'அ' என்பவர் தாம் தொடர்ந்திருக்கும் குற்ற வழக்கை மேல் நடத்தாது இருப்பதாக 'ஆ' விடம் வாக்குறுதியளிக்கிறார்; மற்றும் 'ஆ' எடுத்துக் கொண்ட பொருள்களின் பெறுமானத்தைத் திருப்பித் தந்துவிடுவதாக வாக்குறுதியளிக்கிறார். உடன்பாட்டின் நோக்கம் சட்டமுரணானதால், அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

(ஐ). வரி செலுத்தத் தவறியவரே நிலச்சொத்தினை வாங்குவதைத் தடுக்கும் சட்டமன்றச்சட்டமொன்றின் வகைமுறைகளின்படி 'அ' என்பவரின் சொத்து வரி நிலுவைக்காக விற்பனை செய்யப்படுகிறது. 'ஆ என்பவர் 'அ' வுடனான ஓர் ஏற்பாட்டின் பேரில் வாங்குநர் ஆகிறார். 'ஆ' செலுத்திய விலையை 'அ' விடமிருந்து பெற்றுக்கொள்வதன்பேரில் சொத்தினை அவருக்கு எழுதிக் கொடுத்துவிட உடன்படுகிறார். அந்த நடவடிக்கை மெய்யாகவே வரி செலுத்தத் தவறியவரை வாங்குநராக ஆக்குவதாலும் அதன் மூலம் சட்டத்தின் நோக்கத்தைப் பயனற்றதாக்கி விடுமாகையாலும் அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

(ஒ). 'ஆ' என்பவரின் முக்தியாரான 'அ' என்பவர் முக்தியார் என்ற நிலையில் தமக்கு 'ஆ' விடமுள்ள செல்வாக்கை 'இ', என்பவரின் சார்பாகச் செலுத்த வாக்குறுதியளிக்கிறார்; மற்றும் 'இ', 'அ'வுக்கு ரூ. 1,000 செலுத்த வாக்குறுதியளிக்கிறார். அந்த உடன்பாடு ஒழுக்கக் கேடானதாகையால், செல்லாதது ஆகும்.

(ஓ). 'அ' என்பவர் தம் மகளை 'ஆ' என்பவருக்கு வைப்பாட்டியாக இருக்க வாடகைக்கு விடுவதற்கு உடன்படுகிறார். அவ்வாறு வாடகைக்கு விடுதல் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்கதன்று என்றாலும் அந்த உடன்பாடு ஒழுக்கக் கேடானதாகையால், செல்லாதது ஆகும்.

செல்லாததாக உள்ள உடன்பாடுகள்

24. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்களுக்கான, ஒற்றை மறுபயனின் பகுதி எதுவுமோ அல்லது ஒற்றை நோக்கத்துக்கான பல மறுபயன்களில் ஏதொன்றுமோ அல்லது ஏதொன்றின் பகுதி எதுவுமோ சட்ட முரணானதாக இருந்தால், அந்த உடன்பாடு செல்லாதது ஆகும். மறுபயன்களிலும் நோக்கங்களிலும் பகுதி சட்ட முரணானதாக இருந்தால் உடன்பாடுகள் செல்லாததாதல்.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவர் சட்டப்படியுள்ள நீலச்சாய உற்பத்தியையும் வேறு பண்டங்களின் சட்ட முரணான வாணிகத்தையும் 'ஆ' என்பவர் சார்பாக மேற்பார்வை செய்ய வாக்குறுதியளிக்கிறார். 'ஆ', 'அ'வுக்கு ஆண்டிற்கு ரூ. 10,000 சம்பளம் கொடுப்பதாக வாக்குறுதியளிக்கிறார். 'அ'வின் வாக்குறுதியின் நோக்கமும் 'ஆ'வின் வாக்குறுதிக்கான மறுபயனும் பகுதி சட்ட முரணானதாக இருப்பதால், அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

25. மறுபயனில்லாமல் செய்யப்பட்ட உடன்பாடு செல்லாதது ஆகும்,— மறுபயனில்லாத உடன்பாடானது செல்லாதது ஆகும்

(1) அது எழுத்தால் இயம்பப்பட்டும், [1][ஆவணங்களை]ப் பதிவு செய்வதற்காக அவ்வப்போது நடைமுறையிலிருக்கிற சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டும், ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவு நிலையில் இருக்கிற தரப்பினர்களிடையே இயல்பான அன்பு, பற்று ஆகியவை காரணமாகச் செய்யப்பட்டும் இருந்தாலன்றி, அல்லது —அது எழுதப்பட்டும் பதிவு செய்யப்பட்டு மிருந்தாலன்றி

(2) வாக்குறுதி தருநருக்குத் தாமாக விரும்பி ஏற்கெனவே ஏதாவது ஒன்றைச் செய்திருக்கிற அல்லது அந்த வாக்குறுதி தருநர் எதைச் செய்ய வேண்டுமென்று அல்லது செய்த எதற்கேனும் ஈடுசெய்வதற்கான ஒரு வாக்குறுதியாக இருந்தாலன்றி,

---

1. 1891 ஆம் ஆண்டு 12 ஆம் சட்டத்தின் 2 ஆம் பிரிவினாலும் II ஆம் இணைப்புப் பட்டியலின் I ஆம் பகுதியினாலும் "உரிமைமாற்ற ஆவணங்களை" என்பதற்குப் பதிலாக, அமைக்கப்பட்டது.

சட்டப்படி கட்டாயப் படுத்தப்படக் கூடுமோ அதைச் செய்திருக்கிற ஓர் ஆளுக்கு முழுமையாகவோ, பகுதியாகவோ ஈடுசெய்வதற்கான வாக்குறுதியாயிருந்தாலன்றி, அல்லது

அல்லது கால வரம்புச் சட்டத்தினால் காலத்தடையுற்ற ஒரு கடனைச் செலுத்துவதற்கான ஒரு வாக்குறுதியாக இருந்தாலன்றி.

(3) உரிமைவழக்குகளுக்கான காலவரம்புச் சட்டம் இல்லாதிருந்தால் எந்தக் கடனுக்காக அந்தக் கடன் தருநர், பணம் செலுத்துவதை வற்புறுத்தியிருக்கலாமோ, அந்தக் கடன் முழுமையையுமோ, பகுதியையோ, செலுத்துவதற்கான ஒரு வாக்குறுதியாய் அதன்படி பொறுப்புச் சுமத்தப்படவேண்டிய ஆள் ஒருவரால் அல்லது அதன் பொருட்டுப் பொதுவாகவோ, சிறப்பாகவோ அதிகாரமளிக்கப்பட்டுள்ள அவருடைய முகவரால் எழுத்தால் எழுதப்பட்டுக் கையொப்பமிடப்பட்டதாய் இருந்தாலன்றி

இப்படியான நேர்வுகள் எதிலும் அத்தகைய உடன்பாடு ஒன்று ஓர் ஒப்பந்தமாகும்.

விளக்கம் 1.—கொடைதருநர், கொடைபெறுநர், இருவர் தம்மிடையே உள்ளபடியே செய்யப்பட்ட கொடை எதனுடைய செல்லுந்தன்மையையும் இந்தப் பிரிவிலுள்ள எதுவும், ஊறுபடுத்துதல் ஆகாது.

விளக்கம் 2.—எந்த ஓர் உடன்பாட்டிற்கு வாக்குறுதிதருநரின் இசைவு தம்மியல்பாகக் கொடுக்கப்படுகிறதோ, அந்த உடன்பாடு மறுபயன் போதாதிருப்பதால் மட்டுமே செல்லாததாக உள்ளதன்று. ஆனால், வாக்குறுதிதருநரின் இசைவு தம்மியல்பாகத் தரப்பட்டதா இல்லையா என்ற வினாவைத் தீர்மானிக்கையில் நீதிமன்றம் மறுபயனின் போதாமையைக் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் மறுபயன் எதுவுமின்றி 'ஆ' என்பவருக்கு ரூ. 1,000 தருவதாக வாக்குறுதியளிக்கிறார். இது ஒரு செல்லாததாக உள்ள உடன்பாடாகும்.

(ஆ). 'அ' என்பவர் இயல்பான அன்பினாலும், பற்றினாலும் தம் மகன் 'ஆ' என்பவருக்கு ரூ. 1,000 தருவதாக வாக்குறுதியளிக்கிறார். 'அ', 'ஆ' வுக்குக் கொடுத்த வாக்குறுதியை எழுதிப் பதிவு செய்கிறார். இது ஓர் ஒப்பந்தமாகும்.

(இ). 'அ' என்பவர், 'ஆ' என்பவரின் பணப்பையைக் கண்டெடுத்து அவரிடம் தருகிறார். 'அ' வுக்கு 'ஆ' ரூ. 50 தருவதாக வாக்குறுதியளிக்கிறார். இது ஓர் ஒப்பந்தமாகும்.

(ஈ). 'அ' என்பவர், 'ஆ' என்பவரின் ஆண் குழந்தையைப் பேணிக்காத்து வருகிறார். அவ்வாறு செய்வதில் ஏற்படும் 'அ' வின் செலவுகளை 'ஆ' செலுத்துவதாக வாக்குறுதியளிக்கிறார். இது ஓர் ஒப்பந்தமாகும்.

(உ). 'அ' என்பவர், 'ஆ' என்பவருக்கு ரூ. 1,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், அந்தக் கடன் காலவரம்புச் சட்டத்தின்படி காலத்தடையுற்றிருக்கிறது. 'அ' அந்தக் கடனுக்காக 'ஆ' வுக்கு ரூ. 500 செலுத்துவதாக எழுத்து மூலமான வாக்குறுதி ஒன்றில் கையொப்பமிடுகிறார். இது ஓர் ஒப்பந்தமாகும்.

(ஊ). 'அ' என்பவர் ரூ. 1,000 பெறுமானமுள்ள ஒரு குதிரையை ரூ. 10-க்கு விற்பனை செய்ய உடன்படுகிறார். அந்த உடன்பாட்டுக்கு 'அ'வின் இசைவு தம்மியல்பாகத் தரப்பட்டது. அந்த மறுபயன் போதாதிருந்த போதிலும் அந்த உடன்பாடு ஓர் ஒப்பந்தமாகும்.

(எ). 'அ' என்பவர் ரூ. 1,000 பெறுமானமுள்ள ஒரு குதிரையை ரூ. 10க்கு விற்க உடன்படுகிறார். 'அ' அந்த உடன்பாட்டுக்கு அவரது இசைவு தம்மியல்பாகத் தரப்பட்டதென்பதை மறுக்கிறார். 'அ'வின் இசைவு தம்மியல்பாகத் தரப்பட்டதா இல்லையா என்பதை நீதிமன்றம் ஆராயுங்கால் மறுபயனின் போதாமை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய பொருண்மையாகும்.

26. உரிய வயது அடையாதவரல்லாத வேறு ஆள் எவருடைய திருமணத்தையும் தடை செய்கிற உடன்பாடு ஒவ்வொன்றும் செல்லாதது ஆகும். திருமணத்தைத் தடை செய்கிற உடன்பாடு செல்லாததாதல்.

27. எவரொருவரையும் சட்டப்படியுள்ள எந்த வகையானதுமான ஒரு தொழிலை, வாணிகத்தை அல்லது அலுவலை நடத்துவதிலிருந்து தடைசெய்கிற உடன்பாடு ஒவ்வொன்றும் அந்த அளவுக்குச் செல்லாதது ஆகும். வாணிகத்தைத் தடை செய்கிற உடன்பாடு செல்லாததாதல்,

விதிவிலக்கு 1.—ஒரு வணிக நற்பெயரை விற்கிற ஒருவர், வாங்குநருடன், குறித்துரைக்கப்பட்ட வட்டார எல்லைகளுக்குள் அந்த வாங்குநர், அல்லது அவரிடமிருந்து அந்த நற்பெயரின் உரிமைமூலத்தைப் பெறுகிற ஆள் எவரும் அதையொத்த ஓர் அலுவலை அங்கு நடத்துகிற வரையில், அதே மாதிரியான ஓர் அலுவலைத் தாம் நடத்துவதைத் தவிர்ப்பதாக உடன்பாடு செய்து கொள்ளலாம். ஆனால் அலுவலின் தன்மையைக் கவனத்தில்கொண்டு பார்க்கும்போது நீதிமன்றத்துக்கு, அத்தகைய எல்லைகள் தகவானவையாகத் தோன்றுதல் வேண்டும். வணிக நற்பெயர் விற்பனை செய்யப்பட்டிருக்கிற அலுவலை நடத்தக்கூடாதென்ற உடன்பாட்டிற்கான காப்புரை.

1 * * *

28. எந்த ஓர் உடன்பாட்டின்மூலம் தரப்பினர் எவரும் ஒப்பந்தம் ஏதொன்றின்படியான அல்லது அது பற்றிய தம்முடைய உரிமைகளை பொதுவகைத் தீர்ப்புமன்றங்களில் வழக்கமான சட்ட நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்றிக் கொள்வதிலிருந்து முழுமையாகத் தடை செய்யப்படுகிறாரோ அல்லது அவர் தம்முடைய உரிமைகளை அவ்வாறு நிறைவேற்றிக்கொள்ளலாகும் காலம் மட்டுப்படுத்தப்படுகிறதோ அந்த உடன்பாடு ஒவ்வொன்றும் அந்த அளவுக்குச் செல்லாதது ஆகும். சட்ட நடவடிக்கைகளுக்குத் தடையாக உள்ள உடன்பாடுகள் செல்லாததாதல்,

விதிவிலக்கு 1.—இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் எந்த ஒப்பந்தத்தின்மூலம் பொருள் எதையும் பொறுத்து அல்லது பொருளின் வகை எதையும் பொறுத்து அவர்களுக்கிடையே எழலாகும் பூசல் எதுவும் பொதுவர் தீர்ப்பிற்குச் சாட்டப்படுதல் வேண்டும் எனவும், அத்தகைய பொதுவர் தீர்ப்பில் வழங்கப்படும் தொகை மட்டுமே அவ்வாறு சாட்டப்பட்ட பூசல் பொறுத்து வசூலிக்கத்தக்கது எனவும் உடன்படுகிறார்களோ அந்த ஒப்பந்தத்தை இந்தப் பிரிவானது சட்டமுரணானதாக ஆக்குதல் ஆகாது. எழலாகும் பூசலைப் பொதுவர் தீர்ப்பிற்குச் சாட்டியனுப்புவதற்கான ஒப்பந்தத்திற்குக்காப்புரை.

2 * * * *

விதிவிலக்கு 2.—இந்தப் பிரிவு, எழுத்திலுள்ள எந்த ஒப்பந்தத்தின்மூலம், இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட ஆட்கள் தம்மிடையே ஏற்கெனவே எழுந்துள்ள வினாப் பொருள் எதையும் பொதுவர் தீர்ப்பிற்குச் சாட்டியனுப்புவதற்கு உடன்படுகிறார்களோ அந்த ஒப்பந்தம் எதனையும் சட்டமுரணானதாக ஆக்கவோ அல்லது பொதுவர் தீர்ப்பிற்குச் சாட்டியனுப்புகை பற்றி அப்போதைக்கு நடைமுறையிலிருக்கிற சட்டம் ஏதொன்றின் வகைமுறை எதையும் ஊறுபடுத்தவோ செய்யாது. ஏற்கெனவே எழுந்துள்ள வினாப் பொருள்களைச் சாட்டியனுப்புவதற்கான ஒப்பந்தத்திற்குக் காப்புரை.

1. 1932 ஆம் ஆண்டு 9 ஆம் சட்டத்தின் 73 ஆம் பிரிவினாலும் II ஆம் இணைப்புப்பட்டியலினாலும் நீத்தறவு 2 மற்றும் 3 ஆம் விதிவிலக்குகள் செய்யப்பட்டன.

2. 1887ஆம் ஆண்டு 1 ஆம் சட்டத்தின் 2 ஆம் பிரிவினாலும் இணைப்புப் பட்டியலினாலும் 28 ஆம் பிரிவின் 1 ஆம் விதிவிலக்கின் இரண்டாம் நீத்தறவு செய்யப்பட்டது.

தேற்றமின்மைக் க க உடன்பாடுகள் செல்லாததாதல்.

29. எந்த உடன்பாடுகளின் பொருள் தேற்றமற்றிருக்கிறதோ அல்லது தேற்றப்படுத்தப்படத்தக்கதாக இல்லாதிருக்கிறதோ அந்த உடன்பாடுகள் செல்லாதவை ஆகும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர், ''நூறு டன் எண்ணெயை'' 'ஆ' என்பவருக்கு விற்க உடன்படுகிறார். எந்த வகையான எண்ணெயைக் கருதினார்கள் என்பதைக் காட்ட எதுவுமே இல்லை: தேற்றமின்மையால் அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

(ஆ). 'அ' என்பவர் வாணிகப் பொருளாக வழங்கப்பட்டுவரும் ஒரு குறிப்பிட்ட விவரிப்புடைய நூறு டன் எண்ணெயை 'ஆ' என்பவருக்கு விற்க உடன்படுகிறார். அந்த உடன்பாட்டைச் செல்லாததாக்குவதற்கான தேற்றமின்மை எதுவும் இங்கு இல்லை.

(இ). தேங்காய் எண்ணெய் மட்டுமே வாணிகம் செய்கிறவரான 'அ' என்பவர் ''நூறு டன் எண்ணெயை'' 'ஆ' என்பவருக்கு விற்க உடன்படுகிறார். 'அ' வின் வாணிகத்தின் தன்மையானது சொற்களின் பொருளைச் சுட்டிக்காட்ட உதவுகின்றது. ஆகவே நூறு டன் தேங்காய் எண்ணெய் விற்க 'அ' ஓர் ஒப்பந்தம் செய்திருக்கிறார்.

(ஈ). 'அ' என்பவர் ''ராம்நகரிலுள்ள என்னுடைய களஞ்சியத்திலுள்ள எல்லா தானியத்தையும்'' என்று குறிப்பிட்டு 'ஆ' என்பவருக்கு விற்க உடன்படுகிறார். அந்த உடன்பாட்டை செல்லாததாக்குவதற்கான தேற்றமின்மை எதுவும் இங்கு இல்லை.

(உ). 'அ' என்பவர் 'இ' என்பவரால் ''தீர்மானிக்கப்பட வேண்டிய ஒரு விலைக்கு ஓராயிரம் மணங்கு அரிசியை'' 'ஆ' என்பவருக்கு விற்க உடன்படுகிறார். விலையானது தேற்றப்படுத்தப்படத்தக்கதாக இருப்பதால் அந்த உடன்பாட்டை செல்லாததாக்குவதற்கான தேற்றமின்மை எதுவும் இங்கு இல்லை.

(ஊ). 'அ' என்பவர் ''ரூபாய் ஐந்நூறு அல்லது ஆயிரத்துக்கு என்னுடைய வெள்ளைக் குதிரையை'' என்று குறிப்பிட்டு 'ஆ' என்பவருக்கு விற்க உடன்படுகிறார். இந்த இரண்டு விலைகளில் எது தரப்பட வேண்டும் எனக் காட்டுவதற்கு எதுவும் இல்லை. உடன்பாடு செல்லாதது ஆகும்.

பணயம் என்ற முறையில் உடன்பாடுகள் செல்லாததாதல்.

30. பணயம் என்ற முறையில் உடன்பாடுகள் செல்லாதவை ஆகும். மேலும் பணயம் எதன்பேரிலும் வென்றதாகச் சொல்லப்படும் எதையுமோ அல்லது எந்த விளையாட்டு அல்லது தேற்றமற்ற வேறு நிகழ்ச்சியின் பேரில் பணயம் எதுவும் வைக்கப்பட்டிருக்கிறதோ அந்த விளையாட்டு அல்லது நிகழ்ச்சியின் முடிவை ஏற்று நடப்பதற்கென ஆள் எவரிடமும் ஒப்படைக்கப்பட்ட எதையுமோ பெறுவதற்கு உரிமைவழக்கு எதுவும் கொணரப்படுதல் ஆகாது.

குதிரைப்பந்தயத்துக்கான பரிசுகள் சிலவற்றின் சார்பாக விதிவிலக்கு.

குதிரைப் பந்தயத்தில் வென்றவருக்கு அல்லது வென்றவர்களுக்கு வழங்குவதற்காக ஐந்நூறு ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட தொகை, பெறுமானமுள்ள அல்லது அத்தொகைக்குச் சமமதிப்புள்ள பரிசுத்தட்டு, பரிசு, அல்லது பணத்தொகைக்காக அல்லது அந்த வகைக்காகக் கொடுக்கப்பட்ட தொகையளிப்பை அல்லது பங்களிப்பை அல்லது தொகையளிப்பு அல்லது பங்களிப்புத் தருவதற்கு செய்யப்பட்ட உடன்பாட்டை இந்தப் பிரிவு சட்டமுரணானதாக ஆக்குவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 294 (அ) பிரிவு வறுபடவில்லை.

குதிரைப் பந்தயம் தொடர்பான எந்த நடவடிக்கைக்கு இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 294 (அ) பிரிவின் வகைமுறைகள் பொருந்துகின்றனவோ அந்த நடவடிக்கை எதையும் இந்தப் பிரிவிலுள்ள எதுவும் சட்டப்படியானதாக ஆக்குவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

அத்தியாயம் III

எதிர்மைசார் ஒப்பந்தங்கள் பற்றி

31. ''எதிர்மைசார் ஒப்பந்தம்'' (Contingent Contract) எனப்படும் ஒப்பந்தமானது, அத்தகைய ஒப்பந்தத்துக்குப் பக்கச்சார்பான (collateral) ஏதாவதொரு நிகழ்ச்சி நிகழுமானால் அல்லது நிகழாதிருக்குமானால், ஏதாவதொன்றைச் செய்வதற்காக, அல்லது செய்யாதிருப்பதற்காக உள்ள ஓர் ஒப்பந்தமாகும். ''எதிர்மைசார் ஒப்பந்தம்'' என்பதன் பொருள் வரையறை.

எடுத்துக்காட்டு.

'ஆ' என்பவரின் வீடு எரிந்து போனால் 'ஆ' வுக்கு ரூபாய் 10,000 தருவதாக 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்துகொள்கிறார். இது ஓர் எதிர்மைசார் ஒப்பந்தமாகும்.

32. தேற்றமற்ற ஓர் எதிர்கால நிகழ்ச்சி நிகழ்ந்தால் ஏதாவதொன்றைச் செய்வதற்காக அல்லது செய்யாதிருப்பதற்காக உள்ள எதிர்மைசார் ஒப்பந்தங்களை அந்த நிகழ்ச்சியானது நிகழ்ந்தாலன்றியும் நிகழும் வரையிலும் சட்டப்படி நடைமுறைப்படுத்த முடியாது. ஒரு நிகழ்ச்சி நிகழ்வதைச் சார்ந்துள்ள ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்துதல்.

அந்த நிகழ்ச்சி நிகழவியலாததாகி விடுமானால், அத்தகைய ஒப்பந்தங்கள் செல்லாதவையாகி விடுகின்றன.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் 'இ' என்பவருக்குப்பின் எஞ்சி இருப்பாரானால், 'ஆ' என்பவரின் குதிரையை விலைக்கு வாங்கிக் கொள்வதாக 'ஆ' வுடன் 'அ' ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'அ' வின் வாழ்நாளில் 'இ' இறந்தாலன்றியும் இறக்கும் வரையிலும் இந்த ஒப்பந்தத்தைச் சட்டப்படி நடைமுறைப் படுத்த முடியாது.

(ஆ). 'இ' என்பவருக்கு விற்பதற்கு முற்பாடு செய்யப்பட்ட குதிரையை அவர் வாங்க மறுப்பாரானால் 'ஆ' என்பவருக்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு விலைக்கு விற்பதாக 'ஆ' வுடன் 'அ' என்பவர் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். அக் குதிரையை 'இ' வாங்க மறுத்திடாத வரையில் அந்த ஒப்பந்தத்தைச் சட்டப்படி நடைமுறைப்படுத்த முடியாது

(இ). 'ஆ' என்பவர் 'இ' என்பவரைத் திருமணம் செய்து கொள்கிறபோது 'ஆ' வுக்கு, ஒரு பணத்தொகையைக் கொடுப்பதாக 'அ' ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'ஆ' வைத் திருமணம் செய்து கொள்ளாமலேயே 'இ' இறந்துவிடுகிறார். அந்த ஒப்பந்தம் செல்லாததாகி விடுகிறது.

33. தேற்றமற்ற ஓர் எதிர்கால நிகழ்ச்சியானது, நிகழாதுபோனால், ஏதேனுமொன்றைச் செய்வதற்காக அல்லது செய்யாதிருப்பதற்காக உள்ள எதிர்மைசார் ஒப்பந்தங்கள் அந்த நிகழ்ச்சி நிகழவியலாததாக ஆகிவிடும்போது நடைமுறைப் படுத்தப்பட முடியும்; ஆனால் அதற்கு முன்பன்று. ஒரு நிகழ்ச்சி நிகழாதிருப்பதைச் சார்ந்துள்ள ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்துதல்.

எடுத்துக்காட்டு.

ஒரு குறிப்பிட்ட கப்பல் திரும்பி வரவில்லை என்றால் ஒரு பணத் தொகையை 'ஆ' என்பவருக்குக் கொடுப்பதற்கு 'அ' என்பவர் உடன்படுகிறார். அந்தக் கப்பல் மூழ்கி விடுகிறது. அந்தக் கப்பல் மூழ்கிவிடுகிற போது அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

ஒப்பந்தம் எந்த நிகழ்ச்சியைச் சார்ந்திருக்கிறதோ அந்த நிகழ்ச்சி உயிரோடிருக்கிற ஆளுடைய எதிர்கால நடத்தையானால் அந்த நிகழ்ச்சி, நிகழவியலாதது என்று எப்போது கொள்ளப்படுதல் வேண்டும்.

34. எந்த எதிர்கால நிகழ்ச்சியை ஓர் ஒப்பந்தம் சார்ந்திருக்கிறதோ அந்த எதிர்கால நிகழ்ச்சியானது குறித்துரைக்கப்படாத ஒருகாலத்தில் ஓர் ஆள் செயற்படும் முறையாக இருக்குமேயானால், அவர் அவ்வாறு செயற்பட வேண்டியதைத்திட்டமான காலம் எதற்குள்ளும் நிகழவியலாததாக ஆக்குகிற அல்லது இன்னும் கூடுதலான எதிர்மைகள் நிகழ்ந்தாலல்லாது நிகழவியலாததாக ஆக்குகிற எதையும் அத்தகைய ஆள் செய்கிறபோது அந்த நிகழ்ச்சி நிகழவியலாததாக ஆகிவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டு,

'ஆ' என்பவர் 'இ' என்பவரைத் திருமணம் செய்துகொண்டால், 'ஆ'வுக்குப் பணத்தொகை ஒன்றைக் கொடுப்பதற்கு 'அ' என்பவர் உடன்படுகிறார்.

'இ', 'ஈ' என்பவரைத் திருமணம் செய்து கொள்கிறார். 'ஈ' இறந்து அதன் பிற்பாடு 'ஆ'வை 'இ' திருமணம் செய்வது இயலும் என்றாலும் 'இ', 'ஆ'வைத் திருமணம் செய்து கொள்வதென்பது இயலாதது என்று இப்போது கொள்ளப்படுதல் வேண்டும்.

குறிக்கப்பட்ட ஒரு காலத்துக்குள் குறித்துரைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சி நிகழ்வதைச் சார்ந்துள்ள ஒப்பந்தங்கள் எப்போது செல்லாததாகிவிடும்.

35. குறிக்கப்பட்ட ஒரு காலத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேற்றமற்ற நிகழ்ச்சி நிகழுமானால், ஏதேனுமொன்றைச் செய்வதற்காக அல்லது செய்யாதிருப்பதற்காக உள்ள எதிர்மைசார் ஒப்பந்தங்கள், குறிக்கப்பட்ட காலம் முடிவடைகையில் அத்தகைய நிகழ்ச்சி நிகழ்ந்திருக்கவில்லையானால் அல்லது குறிக்கப்பட்ட காலத்திற்கு முன்பே அத்தகைய நிகழ்ச்சி நிகழவியலாததாக ஆகிவிடுமானால், செல்லாதவையாகிவிடுகின்றன.

குறிக்கப்பட்ட காலத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட நிகழ்ச்சி நிகழாதிருத்தலைச்சார்ந்துள்ள ஒப்பந்தங்கள் எப்போது நடைமுறைப் படுத்தப்படலாம்.

குறிக்கப்பட்ட ஒரு காலத்திற்குள் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேற்றமற்ற நிகழ்ச்சி நிகழாதிருக்குமேயானால், ஏதேனுமொன்றைச் செய்வதற்காக அல்லது செய்யாதிருப்பதற்காக உள்ள எதிர்மைசார் ஒப்பந்தங்கள் குறிக்கப்பட்ட காலம் முடிவடைந்திருந்து அத்தகைய நிகழ்ச்சி நிகழாமல் இருக்கும்போது, அல்லது அத்தகைய நிகழ்ச்சி நிகழாது என்பது உறுதியாகிவிடுமானால் அந்தக் காலம் முடிவடைந்திருப்பதற்கு முன்பே, சட்டப்படி நடைமுறைப்படுத்தப்படலாம்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் ஒரு குறிப்பிட்ட கப்பல் ஓர் ஆண்டுக்குள் திரும்பி வருமானால் பணத்தொகை ஒன்றை 'ஆ' என்பவருக்குக்கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கிறார். அக் கப்பல் அந்த ஆண்டுக்குள் திரும்பி வருமானால் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தலாம்; அந்த ஆண்டுக்குள் அக் கப்பல் எரிந்துபோனால், அந்த ஒப்பந்தம் செல்லாததாகிவிடுகிறது.

(ஆ). 'அ' என்பவர் ஓர் ஆண்டுக்குள் ஒரு குறிப்பிட்ட கப்பல் திரும்பி வரவில்லை என்றால், பணத்தொகை ஒன்றை 'ஆ' என்பவருக்குக் கொடுப்பதாக வாக்குறுதியளிக்கிறார். அக் கப்பல் அந்த ஆண்டுக்குள் திரும்பி வரவில்லையானால் அல்லது அந்த ஆண்டுக்குள் எரிந்துபோனால் அந்த ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படலாம்.

நிகழவியலாத நிகழ்ச்சிகளைச் சார்ந்துள்ள உடன்பாடுகள் செல்லாததாதல்.

36. நிகழவியலாத ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தால் ஏதேனுமொன்றைச் செய்வதற்காக அல்லது செய்யாதிருப்பதற்காக உள்ள எதிர்மைசார் உடன்பாடுகள், உடன்பாடு செய்த காலத்தில் உடன்பாட்டின் தரப்பினர்களுக்கு அந்த நிகழ்ச்சியின் நிகழவியலாத்தன்மை தெரிந்திருந்தாலும் சரி, தெரிந்திராவிட்டாலும் சரி, செல்லாதவை ஆகும்.

எடுத்துக்காட்டுகள்

(அ). இரண்டு நேர் கோடுகள் ஓர் இடப்பரப்பை சுற்றியடைக்கு மானால் 'ஆ' என்பவருக்கு ரூபாய் 1,000 கொடுப்பதாக 'அ' என்பவர் உடன்படுகிறார். இந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

(ஆ). 'அ' என்பவரின் மகளாகிய 'இ' என்பவரை 'ஆ' என்பவர் திருமணம் செய்து கொண்டால், 'ஆ' வுக்கு ரூபாய் 1,000 கொடுப்பதாக 'அ' உடன்படுகிறார். உடன்பாட்டுக் காலத்திலேயே 'இ' இறந்து போயிருந்தால், உடன்பாடு செல்லாதது ஆகும்.

அத்தியாயம் IV

ஒப்பந்தங்களின் நிறைவேற்றுகை பற்றி

நிறைவேற்றப்படவேண்டிய ஒப்பந்தங்கள்

ஒப்பந்தங்களின் தரப்பினர்களுடைய கடமைப் பொறுப்பு.

37. ஓர் ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் அவரவர் வாக்குறுதிகளை, நிறைவேற்ற வேண்டும், அல்லது நிறைவேற்ற முற்படுதல் வேண்டும், இந்தச் செய்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் வகைமுறைகளின்படி அத்தகைய நிறைவேற்றுகை தவிர்க்கப்பட்டிருந்தாலன்றி அல்லது விடுவிக்கப்பட்டிருந்தாலன்றி.

நிறைவேற்றுகைக்கு முன்பே வாக்குறுதிதருநர்கள் இறந்துவிடுவார்களானால், வாக்குறுதிகள் அத்தகைய வாக்குறுதிதருநர்களின் சார்பாளர்களைக் கட்டுப்படுத்தும், மாறான கருத்து ஒப்பந்தத்திலிருந்து தோன்றினாலன்றி.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 1,000 ரூபாய் செலுத்தப்படுவதன் பேரில் ஒரு குறிப்பிட்ட நாளில் 'ஆ' என்பவரிடம் பொருள்களை ஒப்புவிக்க 'அ' என்பவர் வாக்குறுதி அளிக்கிறார். அந்த நாளுக்கு முன்பே 'அ' இறந்துவிடுகிறார். 'அ'வின் சார்பாளர்கள் அந்தப் பொருள்களை 'ஆ' வுக்கு ஒப்புவிக்கக் கட்டுப்பட்டவர்களாவர்; மற்றும், 'அ' வின் சார்பாளர்களுக்கு ரூபாய் 1,000 'ஆ' கொடுக்கக் கட்டுப்பட்டவராவார்.

(ஆ) ஒரு குறிப்பிட்ட தொகைக்கு, ஒரு குறிப்பிட்ட நாளுக்குள் 'ஆ' என்பவருக்காக ஓர் ஓவியம் தீட்டித் தருவதாக 'அ' என்பவர் வாக்குறுதி அளிக்கிறார். அந்த நாளுக்கு முன்பே 'அ' இறந்துவிடுகிறார். அந்த ஒப்பந்தம் 'அ' வின் சார்பாளர்களாலோ 'ஆ' வினாலோ நடைமுறைப்படுத்தப்பட முடியாது.

நிறைவேற்றுகைக்கான முற்பாட்டை ஏற்க மறுப்பதன் விளைவு.

38. வாக்குறுதிதருநர் நிறைவேற்றுகைக்கான முற்பாடு ஒன்றை வாக்குறுதிபெறுநருக்குச் செய்திருந்து அந்த முற்பாடு ஏற்றுக் கொள்ளப்படாதிருக்கிறவிடத்து, நிறைவேற்றாமைக்கு, வாக்குறுதிதருநர் பொறுப்பாளியல்லர்; அந்த மறுப்பினால் அந்த ஒப்பந்தத்தின்படி தமக்குள்ள உரிமைகளை அவர் இழக்கவும் மாட்டார்.

அத்தகைய முற்பாடு ஒவ்வொன்றும் பின்வரும் வரைக்கட்டுகளை நிறைவேற்றுதல் வேண்டும்:—

(1) அது வரைக்கட்டற்றதாய் இருத்தல் வேண்டும்.

(2) அது உரிய காலத்திலும் இடத்திலும் மற்றும் அதை வழங்கிய ஆள் தம்முடைய வாக்குறுதியின்படி செய்யக் கட்டுப்பட்டிருப்பது முழுவதையும் அங்கேயே அப்பொழுதே செய்ய வல்லவராயும் விருப்பம் உள்ளவராயும் இருக்கிறார் என்பதைக் கண்டறிவதற்குத் தகவான ஒரு வாய்ப்பு அது எந்த ஆளுக்கு வழங்கப்படுகிறதோ அந்த ஆள் பெறலாகும்படியுள்ள சூழ்நிலைகளிலும் செய்யப்படுதல் வேண்டும்.

3) அந்த முற்பாடானது வாக்குறுதிபெறுநருக்கு ஏதாவதொன்றை ஒப்புவிப்பதற்கான ஒரு முற்பாடாக இருக்குமானால், முற்பாடு செய்யப்பட்ட பொருளானது, வாக்குறுதிதருநர் தம் வாக்குறுதியின்படி ஒப்புவிக்கக் கட்டுப்பட்டிருக்கிற பொருள்தான் என்று சரிபார்த்துக்கொள்வதற்குத் தகவான ஒரு வாய்ப்பினை வாக்குறுதிபெறுநர் பெற்றிருத்தல் வேண்டும்.

கூட்டு வாக்குறுதிபெறுநர் பலரில் ஒருவருக்குச் செய்யப்பட்ட முற்பாடானது, அவர்கள் எல்லோருக்கும் செய்யப்பட்ட ஒரு முற்பாட்டிற்கான அதே சட்ட விளைவுகளைக் கொண்டிருக்கும்.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவர் ஒரு குறிப்பிட்ட தரமுடைய நூறு பொதி (bales) பஞ்சை 1873 ஆம் ஆண்டு மார்ச்சு முதல் தேதியன்று 'ஆ' என்பவரின் பண்டகசாலையில் ஒப்புவிப்பதாக ஒப்பந்தம் செய்துகொள்கிறார். இந்தப் பிரிவில் கூறப்பட்ட விளைவைக்கொண்ட நிறைவேற்றுகைக்கான ஒரு முற்பாட்டைச்செய்வதன்பொருட்டு முற்பாடு செய்யப்பட்ட பொருளானது ஒப்பந்தப்படியான தரமுடைய பஞ்சுதான் என்றும் நூறு பொதிகள் இருக்கின்றன என்றும் 'ஆ' மனத்தெளிவு கொள்வதற்கான ஒரு தகவான வாய்ப்பைப் பெறலாகும் சூழ்நிலைகளில் 'ஆ' வின் பண்டகசாலைக்குக், குறிக்கப்பட்ட நாளில் பஞ்சை 'அ' கொண்டு வருதல் வேண்டும்.

39. ஒப்பந்தம் ஒன்றின் தரப்பினர் ஒருவர், தமது வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்ற மறுத்திருக்கிறபோது அல்லது அவர் அதை முழுமையாக நிறைவேற்ற இயலாதவராகத் தம்மைத் தாமே ஆக்கிக் கொண்டிருக்கிறபோது, வாக்குறுதி பெறுநர், ஒப்பந்தத்தை முடிவுறுத்தலாம், அது தொடர்ந்து இருந்து வருவதற்கு அவரது குறிப்பிசைவைச்சொற்களால் அல்லது நடத்தையால் அவர் தெரிவித்திருந்தாலன்றி. ஒரு தரப்பினர் வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்ற மறுப்பதன் விளைவு.

எடுத்துக்காட்டுகள்.

(அ) ஓர் அரங்கின் மேலாளரான 'ஆ' என்பவருடைய அரங்கில் அடுத்த இரண்டு திங்கள் காலத்தின்போது ஒவ்வொரு வாரத்திலும் இரண்டு இரவுகள் பாடுவதாக 'அ' என்பவரான பாடகி, அவருடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். மற்றும் ஒவ்வோர் இரவு நிகழ்ச்சிக்கும் அவருக்கு ரூபாய் 100 கொடுக்க 'ஆ' ஒப்புக்கொள்கிறார். ஆறாம் இரவன்று 'அ' வேண்டுமென்றே அரங்கிற்கு வராமல் இருந்துவிடுகிறார். அந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்துவதற்கு 'ஆ'வுக்குத் தன்னுரிமை உண்டு.

(ஆ). 'அ' என்பவரான பாடகி ஓர் அரங்கின் மேலாளரான 'ஆ' என்பவருடைய அரங்கில் அடுத்த இரண்டு திங்கள் காலத்தின்போது ஒவ்வொரு வாரத்திலும் இரண்டு இரவுகளில் பாடுவதாக அவருடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். ஒவ்வோர் இரவு நிகழ்ச்சிக்கும் அவருக்கு ரூபாய் 100 வீதம் கொடுக்க 'ஆ' ஒப்புக்கொள்கிறார். ஆறாம் இரவன்று 'அ' வேண்டுமென்றே வராது இருந்துவிடுகிறார். 'ஆ' வின் இசைவுடன் ஏழாம் இரவன்று 'அ' பாடுகிறார். ஒப்பந்தம் தொடர்ந்து இருந்து வருவதற்கு 'ஆ' தம் குறிப்பிசைவைத் தெரிவித்திருக்கிறார். ஆகவே அவர் இப்போது அதை முடிவுறுத்த முடியாது. ஆனால் ஆறாம் இரவு 'அ' பாடத் தவறியதால் தமக்குற்ற சேதத்திற்குச் சரியீடு பெறுவதற்கு 'ஆ' உரிமை உடையவராவார்.

ஒப்பந்தங்கள் யாரால் நிறைவேற்றப்படவேண்டும்

40. ஒப்பந்தம் ஏதொன்றிலும் அடங்கியுள்ள வாக்குறுதி எதுவும் வாக்குறுதிதருநராலேயே நிறைவேற்றப்படுதல் வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் கருத்தாயிருந்தது என நிலவரத்தின் தன்மையிலிருந்து தோன்றுமேயானால், அத்தகைய வாக்குறுதியை வாக்குறுதிதருநரே நிறைவேற்றுதல் வேண்டும். பிற நிலவரங்களில் வாக்குறுதிதருநர் அல்லது அவருடைய சார்பாளர்கள் அதை நிறைவேற்றுவதற்குத் தகுதிவாய்ந்த ஓர் ஆளை அமர்த்தலாம். வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய ஆள்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் பணத்தொகை ஒன்றை 'ஆ' என்பவருக்குக் கொடுப்பதாக் வாக்குறுதி அளிக்கிறார். தாமே 'ஆ'வுக்கு அப் பணத்தைக் கொடுப்பதன் மூலம், அல்லது வேறொருவரை 'ஆ'வுக்கு கொடுக்கச் செய்வதன் மூலம் 'அ' இந்த வாக்குறுதியை நிறைவேற்றலாம். செலுத்துவதற்காக குறிக்கப்பட்ட காலத்திற்கு முன்பு 'அ' இறந்து விட்டால், அவருடைய சார்பாளர்கள் அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் அல்லது அவ்வாறு செய்வதற்குத் தக்க ஆள் எவரையாவது அமர்த்துதல் வேண்டும்.

(ஆ). 'ஆ' என்பவருக்காக ஓர் ஓவியம் தீட்டித்தர 'அ' என்பவர் வாக்குறுதி அளிக்கிறார். இந்த வாக்குறுதியை 'அ' தாமே நிறைவேற்ற வேண்டும்.

மூன்றாமவர் நிறைவேற்றுவதை ஏற்பதன் விளைவு.

41. வாக்குறுதிபெறுநர், மூன்றாமவர் ஒருவர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதை ஏற்றுக்கொண்டால், அவர் அதற்குப் பிற்பாடு வாக்குறுதிதருநருக்கு எதிராக அதை நடைமுறைப்படுத்த முடியாது.

கூட்டுக் கடப்பாடுகள் இறங்கு முறை.

42. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் ஒரு கூட்டு வாக்குறுதி அளித்திருக்கிறார்கள் என்றால், அப்போது அந்த வாக்குறுதியை, அவர்கள் எல்லோரும் வாழ்ந்திருக்கும் போது, அத்தகைய எல்லா ஆட்களும், அவர்களில் எவராவது இறந்த பிறகு, எஞ்சியவர் அல்லது எஞ்சியவர்களுடன் கூட்டாக அவருடைய சார்பாளரும், அவர்களில் கடைசியாக எஞ்சியவர் இறந்த பிறகு, கூட்டாக அவர்கள் எல்லோருடைய சார்பாளர்களும், வாக்குறுதியை நிறைவேற்றுதல் வேண்டும், ஒப்பந்தத்திலிருந்து மாறான கருத்து தோன்றினாலன்றி.

கூட்டு வாக்குறுதி தருநர்களில் எவரேனும் ஒருவர் நிறைவேற்றும்படி கட்டாயப் படுத்தப்படலாம்.

43. இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட ஆட்கள் ஒரு கூட்டு வாக்குறுதி அளித்திருக்கிறபோது, வாக்குறுதிபெறுநர், மாறான வெளிப்படை உடன்பாடு இல்லாதிருக்கையில், வாக்குறுதி முழுவதையுமே அத்தகைய கூட்டு வாக்குறுதிதருநர்களில் எவர் [1][ஒருவரையும் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்கள்] எவர்களையும் நிறைவேற்றும்படி கட்டாயப்படுத்தலாம்.

வாக்குறுதி தருநர் ஒவ்வொருவரும் பங்களிப்புச் செய்யும்படி கட்டாயப்படுத்தலாம்.

மாறான கருத்து ஒன்று ஒப்பந்தத்திலிருந்து தோன்றினாலன்றி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டு வாக்குறுதி தருநர்களில் ஒவ்வொருவரும் மற்றக் கூட்டு வாக்குறுதிதருநர் ஒவ்வொருவரையும் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குத் தம்முடையதற்குச் சமமாகப் பங்களிப்புச் செய்யும்படி கட்டாயப்படுத்தலாம்.

பங்களிப்புச் செய்யத் தவறுவதால் ஏற்படும் இழப்பைப் பகிர்ந்து கொள்ளுதல்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கூட்டு வாக்குறுதி தருநர்களில் எவராவது ஒருவர் அத்தகைய பங்களிப்புச் செய்யத் தவறுவாரானால், அந்தத் தவறுகையால் ஏற்படுகின்ற இழப்பை மீதமுள்ள கூட்டு வாக்குறுதிதருநர்கள் சம பங்கில் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவில் உள்ள எதுவும், தம்முடைய முதல்வரின் சார்பாகப் பிணையர் (Surety) ஒருவர் செலுத்திய தொகைகளை அந்த முதல்வரிடமிருந்து அந்தப்பிணையர்வசூலிப்பதைத் தடுக்கவோ அந்த முதல்வர் செலுத்திய தொகைகளுக்காகஅந்தப் பிணையரிடமிருந்து எதையும் வசூலிப்பதற்கு முதல்வருக்கு உரிமை தரவோ செய்யாது.

---

[1] 1981 ஆம் ஆண்டு 12 ஆம் சட்டத்தின் 2 ஆம் பிரிவினாலும் II ஆம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பகுதியினாலும் 'ஒருவரையும்'' என்பதற்குப் பதிலாக அமைக்கப்பட்டது.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'ஈ' என்பவருக்கு ரூபாய் 3,000 செலுத்துவதாக 'அ', 'ஆ', 'இ' என்பவர்கள் கூட்டாக வாக்குறுதி அளிக்கின்றனர். 3,000 ரூபாயைத் தமக்குச் செலுத்தும்படி 'ஈ', 'அ' வையாவது அல்லது 'ஆ' வையாவது அல்லது 'இ' வையாவது கட்டாயப்படுத்தலாம்.

(ஆ). 'ஈ' என்பவருக்கு ரூபாய் 3,000 செலுத்துவதாக 'அ', 'ஆ', 'இ' என்பவர்கள் கூட்டாக வாக்குறுதி அளிக்கின்றனர். முழுவதையும் செலுத்தும்படி, 'இ' கட்டாயப்படுத்தப்படுகிறார். 'அ' நொடிப்பு நிலையில் இருக்கிறார். ஆனால் அவரது கடன்களில் பாதியைச் செலுத்துவதற்கு அவரது உடைமைகள் போதுமானவை. 'அ' வின் சொத்திலிருந்து ரூபாய் 500ம் 'ஆ' விடமிருந்து ரூபாய் 1,250 ம் பெறுவதற்கு 'இ' உரிமையுடையவராவார்.

(இ). 'அ', 'ஆ', 'இ' என்பவர்கள் ஒரு கூட்டு வாக்குறுதியின்படி 'ஈ' என்பவருக்கு ரூ. 3,000 செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். 'இ' என்பவர் ஒன்றும் செலுத்த இயலாதவராயிருக்கிறார். ஆனால் 'அ' முழுவதையும் செலுத்துமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார். 'அ', 'ஆ' விடமிருந்து ரூபாய் 1,500 பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

(ஈ). 'அ', 'ஆ' என்பவர்கள் 'இ' என்பவருக்குப் பிணையர்களாக மட்டுமே இருந்து ஒரு கூட்டு வாக்குறுதியின்படி 'ஈ' என்பவருக்கு 'அ', 'ஆ', 'இ' ஆகியோர். 3,000 ரூபாய் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். 'இ' செலுத்தத் தவறிவிடுகிறார். முழுத் தொகையையும் செலுத்தும்படி 'அ' வும், 'ஆ' வும் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். அத்தொகையை அவர்கள் 'இ' விடமிருந்து வசூலிக்கும் உரிமை உடையவர்களாவார்கள்.

கூட்டு வாக்குறுதி தருநர் ஒருவரை விடுவிப்பதன் விளைவு.

44. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் ஒரு கூட்டு வாக்குறுதி அளித்திருக்குமிடத்து, வாக்குறுதிபெறுநர் அத்தகைய கூட்டு வாக்குறுதிதருநர்களில் ஒருவரை விடுவிப்பது மற்றக் கூட்டு வாக்குறுதிதருநரை அல்லது கூட்டு வாக்குறுதி தருநர்களை விடுவிப்புச் செய்யாது ; அது அவ்வாறு விடுவிக்கப்பட்ட கூட்டு வாக்குறுதிதருநருக்கு மற்றக் கூட்டு வாக்குறுதிதருநரிடம் அல்லது கூட்டு வாக்குறுதிதருநர்களிடம் உள்ள பொறுப்பிலிருந்து விடுதலை அளிக்கவும் செய்யாது.

கூட்டு உரிமைகள் இறங்கு முறை.

45. ஓர் ஆள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்களுக்குக் கூட்டாக ஒரு வாக்குறுதி அளித்திருக்கிறார் என்றால், அப்போது, மாறான கருத்து ஒன்று ஒப்பந்தத்திலிருந்து தோன்றினாலன்றி, அந்த ஆளுக்கும் அவர்களுக்குமிடையே நிறைவேற்றுகை கோரும் உரிமையானது அவர்கள் எல்லோரும் வாழ்ந்திருக்கும்போது அவர்களிடத்திலும், அவர்களில் எவராவது இறந்த பின்பு, அவர்களில் எஞ்சியவர் அல்லது எஞ்சியவர்களுடன் கூட்டாக அத்தகைய இறந்து போன ஆளின் சார்பாளரிடத்திலும் அவர்களில் கடைசியில் எஞ்சியவர் இறந்த பின்பு கூட்டாக அவர்கள் எல்லோருடைய சார்பாளர்களிடத்திலும் அமைந்து நிற்கும்.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவர் தமக்கு 'ஆ' என்பவரும், 'இ' என்பவரும் கடனாகக் கொடுத்த 5,000 ரூபாய்க்கு மறுபயனாக, குறித்துரைக்கப்பட்ட ஒரு நாளில் வட்டியுடன் அந்தத் தொகையை அவர்களிடம் திருப்பித் தருவதாகக் கூட்டாக 'ஆ', 'இ' ஆகியோரிடம் ஒரு வாக்குறுதி அளிக்கிறார். 'ஆ' இறந்து விடுகிறார். நிறைவேற்றக் கோரும் உரிமையானது, 'இ' வின் வாழ்நாளில் அவரிடத்திலும், 'ஆ' வின் சார்பாளரிடத்திலும் கூட்டாக அமைந்து நிற்கும், மற்றும் 'இ' இறந்த பின்பு 'ஆ', 'இ' ஆகியோரின் சார்பாளர்களிடத்தில் கூட்டாக அமைந்து நிற்கும்

நிறைவேற்றுவதற்கான காலமும் இடமும்

வேண்டுகோள் எதுவும் செய்ய வேண்டியிராத இடத்தும், காலம் எதுவும் குறித்துரைக் கப்படாத விடத்தும் வாக் குறுதியை நிறை வேற்றுவதற் கான காலம்.

46. ஒப்பந்தத்தின்படி வாக்குறுதிபெறுநரின் வேண்டுகோள் இல்லாமலேயே வாக்குறுதிதருநர் தம் வாக்குறுதியை நிறை வேற்ற வேண்டியிருக்குமிடத்தும், நிறைவேற்றுவதற்கான காலம் எதுவும் குறித்துரைக்கப்படாதிருக்குமிடத்தும், தகவான தொரு காலத்திற்குள், அந்த வாக்குறுதியானது நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

விளக்கம்.—'' தகவானதொரு காலம் என்பது எது '' என்ற வினாவானது, குறிப்பிட்ட நிலவரம் ஒவ்வொன்றிலும் பொருண்மை பற்றியதொரு வினாவாகும்.

காலம் குறித் துரைக்கப் பட்டிருந்து வேண்டுகோள் எதுவும் செய்ய வேண்டி யிராதவிடத்து வாக்குறுதியை நிறைவேற்று வதற்கான கால மும் இடமும்.

47. ஒரு வாக்குறுதி ஒரு குறிப்பிட்ட நாளில் நிறைவேற்றப் படவேண்டியிருந்து, அதை வாக்குறுதிதருநர் வாக்குறுதி பெறுநரது வேண்டுகோள் இல்லாமலே நிறைவேற்ற மேற் கொண்டிருக்கிறபோது வாக்குறுதி நிறைவேற்றப்படவேண்டிய நாளிலும் இடத்திலும், வழக்கமான வேலை நேரங்களில் எந்த நேரத்திலும் அதை வாக்குறுதிதருநர் நிறைவேற்றலாம்.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவர் சனவரி முதல் நாளன்று 'ஆ' என்பவரின் பண்டக சாலையில் பொருள்களை ஒப்புவிக்க வாக்குறுதி அளிக்கிறார். அந்த நாளன்று 'அ' அந்தப் பொருள்களை 'ஆ'வின் பண்டகசாலைக்குக் கொண்டு வருகிறார். ஆனால் வழக்கமாக அதை மூடும் நேரத்திற்குப் பின்பு கொண்டு வருகிறார். ஆகவே, அவை பெற்றுக் கொள்ளப்படவில்லை. 'அ' தம் வாக்குறுதியை நிறைவேற்றவில்லை.

குறிப்பிட்ட நாளில் நிறை வேற்றுவதற் கான வேண்டு கோள் உரிய நேரத்திலும் இடத்திலும் நிறைவேற்றும் படி கோரு வதாயிருத்தல் வேண்டும்.

48. ஒரு வாக்குறுதி ஒரு குறிப்பிட்ட நாளில் நிறைவேற்றப் படவேண்டியிருந்து, அதை வாக்குறுதிதருநர் வாக்குறுதி பெறுநரது வேண்டுகோள் இல்லாமலே நிறைவேற்றமேற்கொண் டிராதபோது, உரிய இடத்திலும், வழக்கமான வேலை நேரங் களுக்குள்ளும் அதை நிறைவேற்ற வேண்டும் என வேண்டுகோள் செய்வது வாக்குறுதிபெறுநரின் கடமையாகும்.

விளக்கம்.—'' உரிய காலமும் இடமும் எவை '' என்ற வினாவானது, குறிப்பிட்ட நிலவரம் ஒவ்வொன்றிலும் பொருண்மை பற்றியதொரு வினாவாகும்.

நிறைவேற்று வதற்கான வேண்டுகோள் எதுவும் செய்ய வேண்டியிராத விடத்தும் இடம் எதுவும் குறிக் கப்படாத விடத்தும் வாக் குறுதியை நிறைவேற்று வதற்கான இடம்.

49. ஒரு வாக்குறுதி, வாக்குறுதிபெறுநரது வேண்டுகோள் இல்லாமலேயே நிறைவேற்றப்படவேண்டியிருந்து, அதை நிறை வேற்றுவதற்கான இடம் எதுவும் குறிக்கப்பட்டிராதபோது, வாக்குறுதியை, நிறைவேற்றுவதற்கான தகவானதோர் இடத் தைக் குறிப்பிடும்படி வாக்குறுதிபெறுநரிடம் வேண்டுகோள் செய்வதும் அத்தகைய இடத்தில் அதை நிறைவேற்றுவதும் வாக்குறுதிதருநரின் கடமையாகும்.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவர் ஒரு குறிக்கப்பட்ட நாளில் ஓராயிரம் மணங்கு சணலை 'ஆ' என்பவரிடம் ஒப்புவிக்க மேற்கொள்கிறார். அதைப் பெற்றுக் கொள்வதற்குத் தகவானதோர் இடத்தைக் குறிப்பிடும்படி, 'ஆ' விடம் 'அ' வேண்டுகோள் செய்தல் வேண்டும்; மேலும் அத்தகைய இடத்தில் அதை அவர் ஒப்புவிக்கவும் வேண்டும்.

50. வாக்குறுதி எதனையும் நிறைவேற்றுவதானது வாக்குறுதி பெறுநர் குறிக்கிற அல்லது ஒப்பளிப்புச் செய்கிற, எந்த முறையிலும் அல்லது எந்தக் காலத்திலும் செய்யப்படலாம். வாக்குறுதி பெறுநரால் குறிக்கப்பட்ட அல்லது ஒப்பளிப்புச் செய்யப்பட்ட முறையில் அல்லது காலத்தில் நிறைவேற்றுகை.

எடுத்துக்காட்டுகள்,

(அ). 'ஆ' என்பவர் 'அ' என்பவருக்கு ரூபாய் 2,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு வங்கியரான 'இ' என்பவரிடம் உள்ள 'அ' வின் கணக்கில் அந்தத் தொகையை 'ஆ' செலுத்த வேண்டும் என 'அ' விரும்புகிறார். 'இ' யிடமே தாமும் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் 'ஆ' அந்தத் தொகையைத் தம் கணக்கிலிருந்து மாற்றி 'அ' வுக்கு வரவு வைக்கவேண்டும் என ஆணையிடுகிறார். 'இ' அவ்வாறே செய்கிறார். அதன் பிற்பாடு ஆனால் அந்த மாற்றுதலை 'அ' அறிவதன் முன்பு, 'இ' நொடித்துப் போகிறார். 'ஆ' வினால் செய்யப்பட்ட செலுத்தம் சரியானதாகும்.

(ஆ). 'அ' என்பவரும் 'ஆ' என்பவரும் ஒருவரிடமொருவர் கடன் பட்டிருக்கிறார்கள். ஓர் இனத்திற்கு இன்னோர் இனத்தை எதிர்க்கட்டு செய்வதன் மூலம் 'அ' வும், 'ஆ' வும் ஒரு கணக்கை முடிவு செய்கின்றனர். அத்தகைய முடிவு செய்தலின்பேரில் தம்மால் கொடுபட வேண்டியது என்று கண்ட மீதியை 'ஆ', 'அ' வுக்குச் செலுத்தி விடுகிறார். இது 'அ' வும், ஆ' வும் முறையே, ஒருவருக்கொருவர் கொடுக்க வேண்டிய தொகைகளின் செலுத்தமாக ஆகிறது.

(இ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ரூபாய் 2,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. கடன் குறைப்பாக 'அ'வின் பொருள்களில் சிலவற்றை, 'ஆ' ஏற்றுக் கொள்கிறார். அந்தப் பொருள்களின் ஒப்புவிப்பானது பகுதிச் செலுத்தமாகச் செயற்படுகிறது.

(ஈ). 'அ' என்பவர் தமக்கு ரூபாய் 100 கொடுக்க வேண்டிய 'ஆ' என்பவரைத் தமக்கு நூறு ரூபாய்க்கு ஒரு சீட்டை (note) அஞ்சல் வழி அனுப்பி வைக்கும்படி விரும்புகிறார். 'அ' விற்கு முறையாக முகவரி இடப்பட்ட சீட்டைக் கொண்ட கடிதத்தை 'ஆ' அஞ்சல் பெட்டியில் போட்ட உடனேயே அந்தக் கடன் தீர்ந்துவிடுகிறது.

ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகளை நிறைவேற்றுதல்

51. ஓர் ஒப்பந்தம் ஒரே சமயத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகளைக் கொண்டதாக இருக்கும்போது, வாக்குறுதிபெறுநர் தமது ஒன்றுக்கொன்றான வாக்குறுதியை நிறைவேற்ற ஆயத்தமாகவும் விருப்பம் உடையவராகவும் இருந்தாலன்றி, வாக்குறுதி தருநர் எவரும் தம் வாக்குறுதியினை நிறைவேற்றத் தேவையில்லை. ஒன்றுக்கொன்றான வாக்குறுதி பெறுநர் நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாகவும் விருப்பமுடைய வராகவும் இருந்தாலன்றி வாக்குறுதி தருநர் நிறைவேற்றக் கட்டுப் பட்டவர் அல்லர்.

எடுத்துக்காட்டுகள்,

(அ). 'அ' என்பவர் 'ஆ' என்பவரிடம் பொருள்களை ஒப்புவிக்க வேண்டுமென்றும், பொருள்களை ஒப்புவிப்பதன்பேரில் 'ஆ' பணத்தைச் செலுத்திவிட வேண்டும் என்றும் 'அ' வும், 'ஆ' வும் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள்.

ஒப்புவிப்பதன்பேரில் பொருள்களுக்கான பணத்தைச் செலுத்த 'ஆ' ஆயத்தமாகவும் விருப்பமுடையவராகவும் இருந்தாலன்றி, 'அ' சரக்குகளை ஒப்புவிக்கத் தேவையில்லை.

பணம் செலுத்தியதன்பேரில் பொருள்களை ஒப்புவிப்பதற்கு 'அ' ஆயத்தமாகவும், விருப்பமுடையவராகவும் இருந்தாலன்றி 'ஆ' அவற்றுக்கு பணம் செலுத்தத் தேவையில்லை.

(ஆ). 'அ' என்பவர் சரக்குகளை 'ஆ' என்பவருக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றும், விலையைத் தவணைகளில் செலுத்த வேண்டும் என்றும், முதல் தவணையானது பொருள்களை ஒப்புவிப்பதன் பேரில் செலுத்தப்பட வேண்டுமென்றும் 'அ' வும், 'ஆ' வும் ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர்.

ஒப்புவித்ததன் பேரில் முதல் தவணையைச் செலுத்துவதற்கு 'ஆ' ஆயத்தமாகவும், விருப்பமுடையவராகவும் இருந்தாலன்றி 'அ' ஒப்புவிக்கத் தேவையில்லை.

முதல் தவணையைச் செலுத்தியதின்பேரில் 'அ' பொருள்களை ஒப்புவிப்பதற்கு ஆயத்தமாகவும், விருப்பமுடையவராகவும் இருந்தாலன்றி, 'ஆ' முதல் தவணையைச் செலுத்தத் தேவையில்லை.

ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான வரிசை முறை.

52. ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான வரிசை முறையானது ஒப்பந்தத்தால் வெளிப்படையாகவே குறிக்கப்பட்டிருக்குமிடத்து, அந்த வரிசை முறையில் அவை நிறைவேற்றப்படுதல் வேண்டும்; மற்றும் அந்த வரிசை முறையானது ஒப்பந்தத்தால் வெளிப்படையாகக் குறிக்கப்படாதிருக்குமிடத்து, அவை எந்த வரிசை முறையில் நிறைவேற்ற வேண்டியது ஒப்பந்த நடவடிக்கையின் தன்மைக்குத் தேவைப்படுகிறதோ அந்த வரிசை முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) குறிக்கப்பட்ட ஒரு தொகைக்கு ஒரு வீட்டை 'ஆ' என்பவருக்காக 'அ' என்பவர் கட்ட வேண்டும் என்று 'அ' வும், 'ஆ' வும் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். வீடு கட்டுவதற்கான 'அ' வின் வாக்குறுதி அதற்குப் பணம் செலுத்துவதற்கான 'ஆ' வின் வாக்குறுதிக்கு முன்னதாகவே நிறைவேற்றப்பட வேண்டும்.

(ஆ) 'அ' என்பவர் தம் வாணிக இருப்புப் பொருள்களை குறிக்கப்பட்ட ஒரு விலைக்கு 'ஆ' என்பவருக்கு உரிமைமாற்றிக் கொடுத்து விடுதல் வேண்டும் என்று 'அ' வும், 'ஆ' வும் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். அந்தப் பணத்தின் செலுத்தத்துக்காக பிணையம் தருவதாக 'ஆ' வாக்குறுதி அளிக்கிறார். 'அ' தன் இருப்புப் பொருள்களைத் தாம் ஒப்புவிப்பதற்கு முன்பே பிணையத்தைப் பெற வேண்டியது ஒப்பந்த நடவடிக்கையின் தன்மைக்குத் தேவைப்படுகிறபடியால் பிணையம் தரப்படும் வரையில் 'அ' தம் வாக்குறுதியை நிறைவேற்றத் தேவையில்லை.

எந்த நிகழ்ச்சியின் பேரில் ஒப்பந்தம் நடைமுறைக்கு வர வேண்டுமோ அதைத் தடை செய்யும் தரப்பினரின் கடப்பாடு.

53. ஓர் ஒப்பந்தம் ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகள் அடங்கியதாக இருந்து ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர் மற்றைய தரப்பினரை, அவரது வாக்குறுதியை அவர் நிறைவேற்றுவதைத் தடை செய்யும்போது, அவ்வாறு தடை செய்யப்பட்ட தரப்பினரின் தெரிவின்பேரில் அந்த ஒப்பந்தம் செல்லாததாக்கத்தக்கதாகிறது; மற்றும் ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமையின் விளைவாக அவர் உற்றிடலாகும் இழப்பு எதற்காகவும் அந்த மற்றைய தரப்பினரிடமிருந்து சரியீடு பெறுவதற்கு அவர் உரிமையுடையவராவார்.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவருக்கு ஒரு குறிப்பிட்ட வேலையை 'ஆ' என்பவர் ரூபாய் 1000-க்குச் செய்து கொடுத்தல் வேண்டுமென்று 'அ' வும், 'ஆ' வும் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். 'ஆ' அவ்வாறே அந்த வேலையைச் செய்து கொடுக்க ஆயத்தமாகவும், விருப்பமுடையவராகவும் இருக்கிறார். ஆனால் 'அ' அவர் அவ்வாறு செய்வதைத் தடுக்கிறார். அந்த ஒப்பந்தம் 'ஆ' வின் தெரிவின் பேரில் செல்லாததாக்கத்தக்கதாகும்; மற்றும் அதை அவர் நீக்கிக்கொள்ளத் தெரிவு செய்தால் அதன் நிறைவேற்றாமையால் அவருக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பு எதற்குமான சரியீட்டை 'அ' விடமிருந்து வசூலிக்க உரிமையுடையவராவார்.

ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகள் கொண்ட ஒப்பந்தத்தில் முதலாவதாக நிறைவேற்றப்பட வேண்டிய வாக்குறுதியை, அதை நிறைவேற்றத் தவறுவதன் விளைவு.

54. ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகளில் ஒன்று, மற்றையது நிறைவேற்றப்பட்டு முடிவுறும் வரையில், நிறைவேற்றப்பட முடியாத வகையில் அல்லது அதன் நிறைவேற்றுகை கோரப்பட முடியாது என்ற வகையிலுள்ள ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகளை ஓர் ஒப்பந்தம் கொண்டிருந்து கடைசியாகச் சொல்லப்பட்ட வாக்குறுதியை அளித்த வாக்குறுதி தருநர் அதை நிறைவேற்றத் தவறும்போது அத்தகைய வாக்குறுதி தருநர் ஒன்றுக்கொன்றான வாக்குறுதியின் நிறைவேற்றுகையைக் கோர முடியாது; ஆனால் அவர் ஒப்பந்தத்தின் மற்றைய தரப்பினர் ஒப்பந்தத்தின் நிறைவேற்றாமையினால் உற்றிடலாகும் இழப்பு எதற்கும் அந்த மற்றைய தரப்பினருக்குச் சரியீடு செய்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவரால் தரப்படவிருக்கிற கப்பல் சரக்கை எடுத்துக் கொண்டு கல்கத்தாவிலிருந்து மொரீஷியஸுக்கு ஏற்றிக் கொண்டு செல்ல 'ஆ' வின் கப்பலை 'அ' வாடகைக்கு அமர்த்துகிறார். 'ஆ' அதைக் கொண்டு செல்வதற்கு ஒரு குறிப்பிட்ட கட்டணத்தைப் பெற்றுக் கொள்கிறார். 'அ', கப்பலுக்கு எந்தச் சரக்கையும் தரவில்லை. 'அ', 'ஆ' வின் வாக்குறுதியின் நிறைவேற்றுகையைக் கோர முடியாது; மற்றும் ஒப்பந்தம் நிறைவேற்றாமையினால், 'ஆ' உறுகின்ற இழப்பை 'ஆ' வுக்குச் சரியீடு செய்தல் வேண்டும்.

(ஆ) வேலைக்குத் தேவையான சாரத்தையும் மரத்தையும் 'ஆ' என்பவர் கொடுப்பதன் பேரில் குறிக்கப்பட்ட ஒரு தொகைக்கு ஒரு குறிப்பிட்ட கட்டட வேலையைச் செய்வதாக 'அ' என்பவர் 'ஆ' உடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'ஆ', சாரமோ மரமோ எதுவும் தர மறுத்து விடுகிறார். வேலையை நிறைவேற்ற முடியவில்லை. 'அ' வேலையை நிறைவேற்றத் தேவையில்லை. மற்றும் 'அ' வுக்கு ஒப்பந்தம் நிறைவேற்றாமையினால் அவருக்கு விளைவிக்கப்பட்ட இழப்பு எதற்கும் சரியீடு செய்ய 'ஆ' கட்டுப்பட்டவராவார்.

(இ) ஒரு திங்கள் காலத்தில் வந்துசேர முடியாதிருக்கிற ஒரு கப்பலிலிருக்கும் குறிப்பிட்ட வாணிகச் சரக்கை, குறித்துரைக்கப்பட்ட ஒரு விலைக்கு 'ஆ' என்பவரிடம் ஒப்புவிப்பதாக 'அ' என்பவர் 'ஆ' வுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். மற்றும் 'ஆ' ஒப்பந்தத் தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் அந்த வாணிகச் சரக்குக்கான விலையைச் செலுத்த வாக்குறுதி அளிக்கிறார். 'ஆ' அந்த வாரத்துக்குள் செலுத்தவில்லை. ஒப்புவிப்பதற்கான 'அ' வின் வாக்குறுதி நிறைவேற்றப்படத் தேவையில்லை. மற்றும் 'ஆ' சரியீடு செய்ய வேண்டும்.

(ஈ). 'அ' என்பவர் 'ஆ' என்பவரிடம், அவருக்கு நூறு பொதி வாணிகச் சரக்கை விற்பதாகவும் அடுத்த நாள் அவற்றை ஒப்புவிப்பதாகவும் வாக்குறுதி அளிக்கிறார்; மற்றும் 'ஆ' அவற்றிற்கு ஒரு திங்களுக்குள் பணம் செலுத்துவதாக வாக்குறுதி அளிக்கிறார். 'அ' தம் வாக்குறுதியின்படி ஒப்புவிக்கவில்லை. பணம் செலுத்துவதற்கான 'ஆ' வின் வாக்குறுதி நிறைவேற்றப்படத் தேவையில்லை. மற்றும் 'அ' சரியீடு செய்ய வேண்டும்.

காலம் அடிப்படைக் கூறாக இருக்கும் ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட காலத்தில் நிறைவேற்றத் தவறுவதன் விளைவு.

55. ஓர் ஒப்பந்தத்தின் தரப்பினர் ஒருவர், குறிப்பிட்ட ஒன்றை குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்திலோ அதற்கு முன்னரோ, அல்லது குறிப்பிட்ட பலவற்றைக் குறித்துரைக்கப்பட்ட காலங்களிலோ அவற்றிற்கு முன்னரோ செய்வதாக வாக்குறுதி அளித்து, அத்தகைய எதையும், குறித்துரைக்கப்பட்ட காலத்திலோ அதற்கு முன்னரோ செய்யத் தவறுகிறபோது, காலமானது அந்த ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறாக இருக்க வேண்டும்என்பது தரப்பினர்களின்கருத்தாகஇருந்தது என்றால், அந்த ஒப்பந்தம் அல்லது அதில் எந்த அளவு நிறைவேற்றப்பட்டிராதிருக்கிறதோ அந்த அளவு வாக்குறுதி பெறுநரின் தெரிவின் பேரில், செல்லாததாக்கத் தக்கதாகிவிடுகிறது.

காலம் அடிப்படைக் கூறாக இல்லாதபோது அத்தகைய தவறுகையின் விளைவு.

காலமானது ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறாக இருக்க வேண்டும் என்பது தரப்பினர்களின் கருத்தாக இல்லாதிருந்தது என்றால், குறித்துரைக்கப்பட்ட காலத்தில் அல்லது அதற்கு முன்பு அத்தகைய ஒன்றைச் செய்யத் தவறுவதனால் ஒப்பந்தம் செல்லாததாக்கத் தக்கதாகிவிடாது; ஆனால் அத்தகைய தவறுகையினால் அவருக்கு விளைவிக்கப்பட்ட இழப்பு எதற்கும் வாக்குறுதி தருநரிடமிருந்து சரியீடு பெறுவதற்கு வாக்குறுதி பெறுநர் உரிமையுடையவராகிறார்.

உடன்பட்டகல்லாத வேறு காலத்தில் நிறைவேற்றுகையை ஏற்றுக் கொள்வதன் விளைவு.

உடன்பட்ட காலத்தில் வாக்குறுதி தருநர் தமது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறுவதன் காரணமாகச் செல்லாததாக்கத்தக்க ஓர் ஒப்பந்தம் பொறுத்தமட்டில், உடன்பட்டதல்லாத வேறு காலம் எதிலும் அத்தகைய வாக்குறுதி நிறைவேற்றப்படுவதை வாக்குறுதிபெறுநர் ஏற்பாராகில், உடன்

பட்ட காலத்தில் வாக்குறுதி நிறைவேற்றப்படாமையினால் விளைவிக்கப்பட்ட இழப்பு எதற்கும் வாக்குறுதிபெறுநர் சரியீடு கோர முடியாது, அத்தகைய ஏற்புக் காலத்தில் அவர் அவ்வாறு செய்வதற்கான தமது கருத்துபற்றி வாக்குறுதி தருநருக்கு அறிவிப்புக் கொடுத்திருந்தாலன்றி.

இயலாச் செயலைச் செய்வதற்கான உடன்பாடு.

56. இயல்பாகவே இயலாததாயுள்ள செயல் ஒன்றைச் செய்வதற்கான ஓர் உடன்பாடு செல்லாததாகும்.

பிற்பாடு இயலாததாக அல்லது சட்ட முரணாக ஆகிவிடுகிற செயலைச் செய்வதற்கான ஒப்பந்தம்.

எந்தச் செயல் ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்பு இயலாததாகிவிடுகிறதோ அல்லது வாக்குறுதிதருநர் தடுக்க முடியாத ஏதாவது நிகழ்ச்சியின் காரணமாகச் சட்ட முரணானதாகிவிடுகிறதோ அந்தச் செயலைச் செய்வதற்கான ஒப்பந்தம் அந்தச் செயல் இயலாததாக அல்லது சட்ட முரணானதாக ஆகும்போது செல்லாததாகிவிடுகிறது.

இயலாதது அல்லது சட்ட முரணானது என அறியப்பட்ட செயலின் நிறைவேற்றாமை மூலம் ஏற்படும் இழப்பிற்கான சரியீடு.

ஓர் ஆள் இயலாதது அல்லது சட்ட முரணானது என்று தாம் அறிந்திருந்த அல்லது தகவான முயற்சியினால் அறிந்திருக்கக்கூடிய, ஆனால் வாக்குறுதிபெறுநர் அறிந்திராத ஏதேனுமொன்றைச் செய்வதாக வாக்குறுதியளித்திருக்கிறவிடத்து, அத்தகைய வாக்குறுதி தருநர் அத்தகைய வாக்குறுதி பெறுநருக்கு வாக்குறுதி நிறைவேற்றாமை மூலம் அந்த வாக்குறுதிபெறுநர் உற்றிருக்கிற இழப்பு எதற்கும் சரியீடு செய்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்

(அ) மந்திரவித்தையின் மூலம் புதையலைக் கண்டுபிடிப்பதாக 'அ' என்பவர் 'ஆ' என்பவருடன் உடன்பாடு செய்து கொள்கிறார். அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

(ஆ). 'அ' என்பவரும் 'ஆ' என்பவரும் ஒருவரையொருவர் திருமணம் செய்து கொள்ள ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். திருமணத்திற்காக குறிக்கப்பட்ட காலத்திற்கு முன்பு 'அ' பைத்தியமாகிவிடுகிறார். ஒப்பந்தம் செல்லாததாகிவிடுகிறது.

(இ). 'இ' என்பவருடன் தமக்கு ஏற்கெனவே திருமணமாகியிருந்த, 'அ' என்பவர் எந்தச் சட்டத்துக்குத் தாம் உட்பட்டவரோ அந்தச் சட்டம் பன்மைமணம் புரிவதைத் தடை செய்வதாக இருந்தும் 'அ' என்பவளை மணந்து கொள்ள ஒப்பந்தம் செய்து கொள்கிறார்; 'அ' தமது வாக்குறுதியை நிறைவேற்றாமையினால் 'ஆ' வுக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்பிற்காக 'அ' அவளுக்குச் சரியீடு செய்தல் வேண்டும்.

(ஈ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்காக அயல்நாட்டுத் துறைமுகத்தில் கப்பல் சரக்கை ஏற்றிக்கொள்ள ஒப்பந்தம் செய்துகொள்கிறார். பிற்பாடு அந்தத் துறைமுகம் இருக்கும் நாட்டின் மீது 'அ' வின் அரசு போர் அறிவிப்புச் செய்கிறது. போர் அறிவிப்புச் செய்யப்படுகிறபோது ஒப்பந்தம் செல்லாததாகிவிடுகிறது.

(உ). 'ஆ' என்பவரால் முன்னதாகக் கொடுக்கப்பட்ட ஒரு தொகைக்கு மறுபயனாக ஆறு திங்களுக்கு ஓர் அரங்கில் நடிக்க 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்துகொள்கிறார். பல சமயங்களில் 'அ' நடிக்க முடியாத அளவுக்கு மிகவும் நோயுற்றிருக்கிறார். அந்தச் சமயங்களில் நடிப்பதற்கான ஒப்பந்தமானது, செல்லாததாகிவிடுகிறது.

சட்டப்படியுள்ளவற்றையும் அவற்றுடன் சட்ட முரணான பிறவற்றையும் செய்வதற்கான ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகள்.

57. முதலாவதாகச் சட்டப்படியுள்ள குறிப்பிட்ட சிலவற்றைச் செய்யவும், இரண்டாவதாகக் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் குறிப்பிட்ட சட்ட முரணானபிறவற்றைச் செய்யவும் ஆட்கள் ஒருவருக்கொருவர் வாக்குறுதி அளித்துக் கொள்ளுமிடத்து, வாக்குறுதிகளின் முதல் தொகுதி ஓர் ஒப்பந்தமாகும். ஆனால், இரண்டாவதாக உள்ளது ஒரு செல்லாததான உடன்பாடு ஆகும்.

எடுத்துக்காட்டு

'அ' என்பவர், 'ஆ' என்பவருக்கு ரூபாய் 10,000 க்கு ஒரு வீட்டை விற்கவேண்டுமென்றும், ஆனால் 'ஆ' அந்த ஒரு சூதாட்ட விடுதியாகப் பயன்படுத்துவாரானால் அவர் 'அ' வுக்கு அதற்காக ரூபாய் 50,000 கொடுக்க வேண்டுமென்றும் 'அ' வும் 'ஆ' வும் உடன்படுகிறார்கள்.

ஒன்றுக்கொன்றான வாக்குறுதிகளின் முதற்தொகுதி, அதாவது, வீட்டை விற்பதும் அதற்காக ரூபாய் 10,000 செலுத்துவதும் ஓர் ஒப்பந்தமாகும்.

இரண்டாம் தொகுதி, அதாவது, 'ஆ' அந்த வீட்டை ஒரு சூதாட்ட விடுதியாகப் பயன்படுத்தலாமென்பது, ஒரு சட்டமுரணான நோக்கத்திற்கானது; ஆகையால் அது ஒரு செல்லாததான உடன்பாடு ஆகும்.

58. ஒரு கிளை சட்டப்படியுள்ளதாகவும், மற்றது சட்டமுரணானதாகவும் உள்ள ஒரு மாற்று வாக்குறுதியைப் பொறுத்தமட்டில், சட்டப்படியுள்ளதான கிளை மட்டுமே செயற்படுத்தப்படமுடியும்.

மாற்று வாக்குறுதி, ஒரு கிளை சட்டமுரணானதாக இருக்கையில்.

எடுத்துக்காட்டு

'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ரூபாய் 1,000 செலுத்துதல் வேண்டுமென்றும் அதற்காகப் பிற்பாடு 'ஆ', 'அ' வுக்கு அரிசியையோ அல்லது கள்ளக்கடத்தல் அபினையோ ஒப்புவிக்க வேண்டுமென்றும் 'அ'வும் 'ஆ'வும் உடன்படுகிறார்கள்.

இது அரிசி ஒப்புவிப்பது பற்றிய வரையில் செல்லத்தக்க ஓர் ஒப்பந்தமாகும், ஆனால் அபினைப் பற்றியவரையில் செல்லாததாக உள்ள ஓர் உடன்பாடு ஆகும்.

செலுத்தங்களைச் செல்லவைத்தல்

59. ஓர் ஆளுக்குப் பல தனித்தனிக் கடன்களைக் கொடுக்க வேண்டியிருக்கிற ஒரு கடன்பெறுநர், குறிப்பிட்ட கடனைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமென, வெளிப்படையான தகவலுடனோ அல்லது குறிப்பாக உணர்த்துகிற சூழ்நிலைகளிலோ அவருக்கு ஒரு செலுத்தம் செய்யுமிடத்து, அந்தச் செலுத்தமானது ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவ்வாறே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

தீர்க்கப்பட வேண்டிய கடன் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிற விடத்து செலுத்தத்தைப் பயன்படுத்துதல்.

எடுத்துக்காட்டுகள்

(அ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு மற்றக் கடன்களோடு, ஒரு கடனுறுதிச் சீட்டின்பேரில் சூன் முதல் தேதி கொடுபடவேண்டிய ரூபாய் 1,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்தத் தொகை கொண்ட வேறு கடன் எதுவும் அவர் 'ஆ' வுக்குக் கொடுக்க வேண்டியதாக இல்லை. சூன் முதல் தேதியன்று 'அ', 'ஆ' விடம் 1,000 ரூபாயைச் செலுத்துகிறார். அந்தச் செலுத்தம் அந்தக் கடனுறுதிச் சீட்டைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படவேண்டும்.

(ஆ) மற்றக் கடன்களோடு 'அ' என்பவர், 'ஆ' என்பவருக்கு 567 ரூபாய்த் தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது. 'ஆ', 'அ' வுக்கு எழுதி, இந்தத் தொகையைச் செலுத்த வேண்டுமென்று கோருகிறார். 'அ', ரூ. 567 ஐ 'ஆ'வுக்கு அனுப்புகிறார். எந்தக் கடனுக்கு பணம் செலுத்தப்பட வேண்டுமென்று 'ஆ' கோரியிருந்தாரோ அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு இந்தச் செலுத்தம் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

தீர்க்கப்பட வேண்டிய கடன் சுட்டிக்காட்டப் படாமல் இருக்குமிடத்து செலுத்தத்தைப் பயன்படுத்துதல்.

60. செலுத்தம் எந்தக் கடனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கடன்பெறுநர் தெரிவிக்காது விட்டிருப்பதோடு அதைச் சுட்டிக் காட்டும்வேறு சூழ்நிலைகளும் இல்லாத இடத்து கடன்தருநர், கடன்பெறுநரால் உள்ளபடி தமக்குக் கொடுபட வேண்டியதாயும் செலுத்தத்தக்கதாயுமுள்ள சட்டப்படியுள்ள கடன் எதற்கும், அதை வசூலித்தலானது உரிமை வழக்குகளுக்கான காலவரம்பைப்பற்றி அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும் சட்டத்தின்படி தடை செய்யப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், தம் உளத் தேர்வின்படி, (Discretion) அந்தச் செலுத்தத்தைப் பயன்படுத்தலாம்.

இரு தரப்பினர்களில் எவரும் செல்வைக்காத விடத்து செலுத்தத்தைப் பயன்படுத்துதல்.

61. இரு தரப்பினரில் எவரும் செல் எதுவும் வைக்காத விடத்து, செலுத்தமானது காலவரிசைப்படி அந்தக் கடன்களைத் தீர்ப்பதில் பயன்படுத்தப்படுதல் வேண்டும், உரிமை வழக்குகளுக்கான காலவரம்பைப் பற்றி அப்போதைக்கு நடைமுறையிலிருக்கும் சட்டத்தின்படி அவை தடைசெய்யப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், அந்தக் கடன்கள் ஒரே கால நீட்சியுடையவையாயிருப்பின் ஒவ்வொன்றையும் விகிதமுறையில் தீர்ப்பதற்குச் செலுத்தம் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

நிறைவேற்றத் தேவையில்லாத ஒப்பந்தங்கள்

ஓர் ஒப்பந்தத்தின்பதிலமைப்பு, அறவு செய்தல், மாற்றுகை ஆகியவற்றின் விளைவு.

62. ஒப்பந்தம் ஒன்றின் தரப்பினர்கள் அதற்குப் பதிலாக ஒரு புதிய ஒப்பந்தத்தை அமைத்துக் கொள்ளவோ அல்லது அதை அறவுசெய்யவோ அல்லது மாற்றவோ உடன்பட்டால் முதன்முதலிலுள்ள ஒப்பந்தம் நிறைவேற்றப்படத் தேவையில்லை.

எடுத்துக்காட்டுகள்

(அ). 'அ' என்பவர் ஓர் ஒப்பந்தத்தின்படி 'ஆ' என்பவருக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. 'அ', 'ஆ', 'இ' ஆகியோரிடையே, அப்போது முதற்கொண்டு 'அ'வுக்குப் பதிலாக 'இ'யை 'ஆ' தன் கடன்பெறுநராக ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்று ஓர் உடன்பாடு ஏற்படுகிறது. 'ஆ'வுக்கு 'அ' கொடுக்கவேண்டிய பழைய க · வடைகிறது. அதோடு 'ஆ'வுக்கு 'இ' கொடுக்க வேண்டிய ஒரு புதிய கடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றது.

(ஆ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ரூ. 10,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. 'அ', 'ஆ'வுடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டு ரூ. 10,000 கடனுக்குப் பதிலாக 5,000 ரூபாய்க்குத் தமது ('அ'வின்) சொத்தினை 'ஆ'வுக்கு அடைமானம் கொடுக்கிறார். இது ஒரு புதிய ஒப்பந்தமாகும், மற்றும் அந்தப் பழையதை மாய்த்து விடுகிறது.

(இ). 'அ' என்பவர் ஓர் ஒப்பந்தத்தின்படி 'ஆ' என்பவருக்கு ரூ. 1,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. 'ஆ', 'இ'என்பவருக்கு ரூ. 1,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. 'அ'வை அவருடைய கணக்குப் புத்தகத்தில் 'இ'க்கு ரூ. 1,000 வரவு வைக்கும்படி 'ஆ' ஆணையிடுகிறார். ஆனால் இந்த ஏற்பாட்டிற்கு 'இ' இசையவில்லை. இன்னமும் 'ஆ', 'இ'க்கு ரூ. 1,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. புதியதாக ஒப்பந்தம் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை.

வாக்குறுதி பெறுநர் வாக்குறுதி நிறைவேற்றுகையைத் தவிர்க்கலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம்.

63. வாக்குறுதிபெறுநர் ஒவ்வொருவரும், தமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதியின் நிறைவேற்றுகையை முழுமையாகவோ பகுதியாகவோ தவிர்க்கலாம் அல்லது தள்ளுபடி செய்யலாம்; அல்லது அத்தகைய நிறைவேற்றுகைக்கான காலத்தை நீட்டிக்கலாம் அல்லது அதற்குப் பதிலாக அவர் தக்கதெனக்கருதும் நிறைவேற்றம் எதனையும் ஏற்றுக்கொள்ளலாம்.

எடுத்துக்காட்டுகள்

(அ). 'அ' என்பவர், 'ஆ' என்பவருக்காக ஓர் ஓவியம் தீட்டித்தர வாக்குறுதியளிக்கிறார். 'ஆ' என்பவர் பிற்பாடு அவ்வாறு செய்ய வேண்டாமென்று சொல்லிவிடுகிறார். 'அ' அதன்பின்பு எப்போதும் வாக்குறுதியை நிறைவேற்றக் கட்டுப்பட்டவரல்லர்.

(ஆ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ரூ. 5,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த ரூ. 5,000 எந்தக் காலத்தில் எந்த இடத்தில் செலுத்தத்தக்கதோ அதே காலத்தில் அதே இடத்தில் 'அ', 'ஆ' விடம் ரூ. 2,000 கொடுக்க அதை 'ஆ'வும் முழுக்கடனின் தீர்கையாக ஏற்றுக்கொள்கிறார். அந்த முழுக்கடனும் தீர்ந்து விடுகிறது.

(இ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு 5,000 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. 'இ' என்பவர் 'ஆ'வுக்கு 1,000 ரூபாய் செலுத்துகிறார். அதை 'ஆ', 'அ' மீது தமக்குள்ள உரிமைக்கோரிக்கையின் தீர்கையாக ஏற்றுக் கொள்கிறார். இந்தச் செலுத்தமானது முழு உரிமைக்கோரிக்கைக்குமான ஒரு தீர்த்தல் ஆகும்.

(ஈ). ஓர் ஒப்பந்தத்தின்படி 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ஒரு பணத்தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது. அது எவ்வளவு என்று கண்டறியப்படவில்லை. எவ்வளவு என்று கண்டறியாமலே 'அ', 'ஆ'வுக்கு 2,000 ரூபாய் கொடுக்கிறார். அதை 'ஆ'வும் கண்டறியப்படாத தொகையின் தீர்கையாக ஏற்றுக் கொள்கிறார். கடன் தொகை எவ்வளவாயிருந்தாலும் இது முழுக்கடனின் ஒரு தீர்த்தல் ஆகும்.

(உ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ரூ. 2,000 கொடுக்க வேண்டியிருப்பதோடு பிற கடன்தருநர்களிடமுங்கூட அவர் கடன்பட்டிருக்கிறார். அவரவருக்குச் சேரவேண்டிய தொகைக்கு ரூபாய்க்கு எட்டணாவாக [1][கடன் தீர்வு உடன்பாட்டுத் தொகை] ஒன்று கொடுப்பதாய் 'ஆ' உள்ளடங்கலாக தம் கடன்தருநர்களிடம் 'அ' ஓர் ஏற்பாடு செய்து கொள்கிறார். 'ஆ'விடம் ரூ. 1,000 செலுத்தியது 'ஆ'வுக்குச் சேர வேண்டிய தொகைக்கு ஒரு தீர்த்தல் ஆகும்.

64. எந்த ஆளின் தெரிவின்பேரில் ஓர் ஒப்பந்தம் செல்லாததாக்கத்தக்கதாயிருக்கிறதோ அந்த ஆள் ஒருவர் அதை அறவு செய்யும்போது அதில் அடங்கியுள்ள வாக்குறுதி எதையும் அதில் வாக்குறுதிதருநராக உள்ள அதன் மற்றைய தரப்பினர் நிறைவேற்றத் தேவையில்லை. செல்லாததாக்கத்தக்க ஒப்பந்தம் ஒன்றை அறவு செய்யும் தரப்பினர், அத்தகைய ஒப்பந்தத்தின் மற்றொரு தரப்பினரிடமிருந்து அதன்படி நன்மை எதையும் பெற்றிருந்தால், எந்த ஆளிடமிருந்து அது பெறப்பட்டதோ அந்த ஆளிடம் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அத்தகைய நன்மையைத் திருப்பிக்கொடுத்தல் வேண்டும். **செல்லாததாக்கத்தக்க ஒப்பந்தத்தை அறவு செய்வதன் விளைவு.**

65. ஓர் உடன்பாடு செல்லாததாக உள்ளது என்று கண்டுபிடிக்கப்படுகிறபோது அல்லது ஓர் ஒப்பந்தம் செல்லாததாகிவிடுகிறபோது, அத்தகைய உடன்பாட்டின்படி அல்லது ஒப்பந்தத்தின்படி பயன் எதையும் பெற்றிருக்கிற ஆள் எவரும், எந்த ஆளிடமிருந்து அந்தப் பயனைப் பெற்றாரோ அந்த ஆளிடம் அதைத் திருப்பிக் கொடுக்க அல்லது அதற்கான சரியீடுசெய்யக் கட்டுப்பட்டவராவார். **செல்லாததாக உள்ள உடன்பாட்டின்படி அல்லது செல்லாததாகிவிடுகிற ஒப்பந்தத்தின்படி பயன் பெற்றிருக்கிற ஓர் ஆளின் கடமைப் பொறுப்பு.**

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவரின் மகளாகிய 'இ' என்பவரை 'ஆ' என்பவர் மணந்து கொள்வதாகக் கொடுத்த வாக்குறுதிக்கு மறுபயனாக 'அ', 'ஆ'வுக்கு ரூபாய் 1,000 கொடுக்கிறார். வாக்குறுதிக் காலத்தில் 'இ' இறந்து போயிருக்கிறார். அந்த உடன்பாடு செல்லாதது ஆகும். எனினும், 'ஆ' அந்த 1,000 ரூபாயை 'அ'வுக்குத் திருப்பித் தந்து விடுதல் வேண்டும்.

---

[1] 'சரியீடு' என்பதற்குப் பதிலாக 1891 ஆம் ஆண்டு 12 ஆம் சட்டத்தின் 2 ஆம் பிரிவினாலும் II ஆம் இணைப்புப்பட்டியலின் I ஆம் பகுதியாலும் அமைக்கப்பட்டது.

(ஆ). ' அ ' என்பவர் மே திங்கள் முதல் தேதிக்கு முன்பு ' ஆ'
என்பவருக்கு 250 மணங்கு அரிசி ஒப்புவிப்பதாக அவரிடம் ஒப்பந்தம்
செய்து கொள்கிறார். அந்த நாளைக்கு முன்பு ' அ ' 130 மணங்குகள்
மட்டுமே ஒப்புவிக்கிறார். பின்பு எதுவும் ஒப்புவிக்கவில்லை.
'ஆ' மே திங்கள் முதல் தேதிக்குப் பின்பு அந்த 130 மணங்கைத் தம்மிடம்
நிறுத்தி வைத்துக் கொள்கிறார். அதற்காக அவர் ' அ ' வுக்குப் பணம்
செலுத்தக் கட்டுப்பட்டவராவார்.

(இ) ஓர் அரங்கின் மேலாளரான ' ஆ ' என்பவருடைய அரங்கில்
அடுத்த இரண்டு திங்களின்போது ஒவ்வொரு வாரத்திலும் இரண்டு
இரவுகள் பாடுவதாக 'அ' என்கிற பாடகி ஒப்பந்தம் செய்து
கொள்கிறார். மற்றும் ' ஆ ' ஒவ்வோர் இரவு நிகழ்ச்சிக்காக
வும் அவருக்கு நூறு ரூபாய் தருவதாக வாக்குறுதி அளிக்கிறார். ஆறாம்
இரவன்று ' அ ' வேண்டுமென்றே அரங்கிற்கு வராமல் இருந்து விடுகி
றார். அதன் விளைவாக ' ஆ ' அந்த ஒப்பந்தத்தை அறவு செய்
கிறார். ' ஆ ', ' அ 'வுக்கு அவர் பாடியிருந்த ஐந்து இரவுகளுக்கும்
பணம் செலுத்துதல் வேண்டும்.

(ஈ) முன்னதாகக் கொடுக்கப்பட்ட 1,000 ரூபாய்க்காக ஓர் அரங்
கிசையில் ' ஆ ' என்பவருக்காக ' அ ' என்பவர் பாடுவதாக ஒப்பந்தம்
செய்கிறார். ' அ ' பாடமுடியாத அளவுக்கு மிகவும் நோயுற்றிருக்கிறார்.
' அ ' பாட முடிந்திருந்தால் ' ஆ ' அடைந்திருக்கக்கூடிய ஆதாயத்தின்
இழப்புக்காக அவருக்குச் சரியீடு செய்ய ' அ ' கட்டுப்பட்டவரல்லர்.
எனினும் அவர் முன்னதாகத் தரப்பட்ட 1,000 ரூபாயை ' ஆ ' வுக்குத்
திருப்பித் தந்துவிடுதல் வேண்டும்.

செல்லாததாக்கத் தக்க ஒப்பந்தத்தை அறவுசெய்தலைத் தெரியப்படுத்துவதற்கான அல்லது பின்னறவு செய்வதற்கான முறை.

66. செல்லாததாக்கத்தக்க ஓர் ஒப்பந்தத்தை அறவு
செய்தலானது, ஒரு தெரிப்பைத் தெரிவித்தலுக்கு அல்லது பின்
னறவு செய்தலுக்குப் பயன்படுத்தப்படுகிற அதே முறையிலும்,
அதே விதிகளுக்குட்பட்டும், தெரிவிக்கப்படலாம் அல்லது
பின்னறவு செய்யப்படலாம்.

நிறைவேற்றுகைக்குத் தகவான வசதிகளை வாக்குறுதிதருநருக்கு அளிக்காது வாக்குறுதி பெறுநர் புறக்கணிப்பதன் விளைவு.

67. வாக்குறுதிதருநருக்குத் தம் வாக்குறுதியின் நிறை
வேற்றுகைக்காக வாக்குறுதிபெறுநர் எவரும் தகவான
வசதிகளை அளிக்காது புறக்கணித்தால் அல்லது அளிக்க
மறுத்தால், அதனால் விளைவிக்கப்பட்ட நிறைவேற்றாமை
எதனையும் குறித்து அத்தகைய புறக்கணிப்பு அல்லது மறுப்பு
காரணமாக வாக்குறுதிதருநர் விடுவிக்கப்படுகிறார்.

எடுத்துக்காட்டு.

' அ ' என்பவர் ' ஆ ' என்பவரின் வீட்டைப் பழுதுபார்ப்பதற்கு
'ஆ'வுடன் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்.

' ஆ ' தம் வீட்டில் எந்த இடங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டி
யவை என்று ' அ ' வுக்குச் சுட்டிக்காட்டாது புறக்கணிக்கிறார் அல்லது
சுட்டிக்காட்ட மறுக்கிறார்.

அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமையானது அத்தகைய புறக்
கணிப்பினால் அல்லது மறுப்பினால் விளைவிக்கப்பட்டிருக்குமானால்,
'அ' விடுவிக்கப்படுகிறார்,

அத்தியாயம் V

ஒப்பந்தத்தால் உண்டாக்கப்பட்டவற்றை ஒத்திருக்கிற சில உறவுகள் பற்றி

ஒப்பந்தம் செய்து கொள்ளத் திறனற்றவராயிருக்கிற ஆளுக்கு அல்லது அவர் சார்பில் வழங்கப்பட்ட தேவைப் பொருள்களைப் பொறுத்த கோரிக்கை.

68. ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளத் திறனற்றவராயிருக்கிற ஓர் ஆளுக்கு அல்லது எவர் ஒருவரை அவர் சட்டப்படி காப்பாற்றக் கட்டுப்பட்டிருக்கிறாரோ அவருக்கு, அவரது வாழ்க்கை நிலைக்கு ஏற்ற தேவைப் பொருள்கள் வேறு ஓர் ஆளால் வழங்கப்பட்டிருக்குமானால், அத்தகைப பொருள்களைக் கொடுத்திருக்கிற ஆள், அத்தகைய திறனற்றவராயிருக்கிற ஆளின் சொத்திலிருந்து ஈடு செய்யப்படுவதற்கு உரிமையுடையவராவார்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'ஆ' என்கிற பித்தர் ஒருவருக்கு அவரது வாழ்க்கை நிலைக்கு ஏற்ற தேவைப் பொருள்களை 'அ' என்பவர் வழங்குகிறார். 'ஆ'வின் சொத்திலிருந்து 'அ' ஈடு செய்யப்படுவதற்கு உரிமையுடையவராவார்.

(ஆ). 'ஆ' என்கிற பித்தர் ஒருவரின் மனைவிக்கும் குழந்தைகளுக்கும் அவர்கள் வாழ்க்கை நிலைக்கு ஏற்ற தேவைப் பொருள்களை 'அ' என்பவர் வழங்குகிறார். 'ஆ'வின் சொத்திலிருந்து 'அ' ஈடு செய்யப்படுவதற்கு உரிமையுடையவராவார்.

வேறொருவரா. கொடுபட வேண்டிய பணத்தைச் செலுத்துவதில் அக்கறை கொண்டுள்ளவரும் அதைச் செலுத்துபவருமான ஆளுக்கு ஈடு செய்தல்.

69. மற்றொருவர் சட்டப்படிச் செலுத்தக் கட்டுப்பட்டிருக்கிற பணத்தின் செலுத்தத்தில் அக்கறை கொண்டுள்ளவரும், அதனால் அதைச் செலுத்துகிறவருமான ஓர் ஆள், அந்த மற்றவரால் ஈடுசெய்யப்படுவதற்கு உரிமையுடையவராவார்.

எடுத்துக்காட்டு.

வங்காளத்திலுள்ள நிலத்தை 'அ' என்கிற பெருநிலக்கிழாரால் (Zamindar) குத்தகைக்கு விடப்பட்டு 'ஆ' என்பவர் வைத்திருக்கிறார். அரசுக்கு 'அ'வினால் செலுத்தப்பட வேண்டிய நிலவரி நிலுவை இருப்பதால், அரசினால் அவரது நிலம் விற்பனைக்காக விளம்பரப்படுத்தப்படுகிறது. நிலவரிச் சட்டத்தின்படி, அத்தகைய விற்பனையின் விளைவாக 'ஆ'வின் குத்தகை வெறிதாகிவிடும். விற்பனையையும் அதன் விளைவாகத் தம் சொந்தக் குத்தகை வெறிதாகிவிடுவதையும் தடுக்க 'அ'வினால் கொடுக்கப்பட வேண்டியிருக்கின்ற தொகையை 'ஆ' அரசுக்குச் செலுத்தி விடுகிறார். அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை 'அ', 'ஆ'வுக்குச் செலுத்தி ஈடு செய்யக் கட்டுப்பட்டவராவார்.

கைம்மாறின்றிச் செய்யக் கருதாத செயலின் நன்மையைத் துய்க்கும் ஆளின் கடமைப் பொறுப்பு.

70. கைம்மாறின்றிச் செய்யக் கருதாது, ஓர் ஆள் மற்றோர் ஆளுக்காக எதையும் சட்டப்படியாக செய்திருந்து அல்லது அவரிடம் எதையும் ஒப்புவித்திருந்து அத்தகைய மற்றோர் ஆள் அதன் நன்மையைத் துய்க்குமிடத்து, அவ்வாறு செய்யப்பட்டதனை அல்லது ஒப்புவிக்கப்பட்டதனைப் பொறுத்துப் பின்னவர் முன்னவருக்குச் சரியீடு செய்யவோ திருப்பிக் கொடுக்கவோ கட்டுப்பட்டவராவார்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) 'அ' என்கிற ஒரு வணிகர் 'ஆ' என்பவரின் வீட்டில் பொருள்களைத் தவறுதலாக விட்டுச்செல்கிறார். 'ஆ' அந்தப் பொருள்களை தம்முடையவை போன்று பயன்படுத்துகிறார். அவர் 'அ' வுக்கு அவற்றிற்கான விலையைச் செலுத்தக் கட்டுப்பட்டவராவார்.

(ஆ) 'அ' என்பவர் 'ஆ' என்பவரின் சொத்தினைத் தீயினின்று காப்பாற்றுகிறார். அவர் கைமாறின்றிச் செயற்படக் கருதினார் என்று சூழ்நிலைகள் காட்டுமானால் 'ஆ' விடமிருந்து சரியீடு பெறுவதற்கு 'அ' வுக்கு உரிமை இல்லை.

பொருள்களைக் கண்டெடுப்பவரின் பொறுப்பு.

71. மற்றொருவருக்குச் சொந்தமான பொருள்களைக் கண்டெடுத்து, அவற்றைத் தம் பாதுகாப்பில் வைத்துக் கொள்ளும் ஓர் ஆள், ஓர் ஒப்படையம் பெறுநருக்குள்ள அதே பொறுப்புக்கு உட்பட்டிருக்கிறார்.

தவறுதலாக அல்லது வலுக் கட்டாயத்தின் பேரில் எந்த ஆளுக்குப் பணம் கொடுக்கப் பட்டிருக்கிறதோ அல்லது பொருள் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறதோ அந்த ஆளின் கடப்பாடு.

72. எந்த ஓர் ஆளிடம் தவறுதலாக அல்லது வலுக் கட்டாயத்தின் பேரில் பணம் செலுத்தப்பட்டிருக்கிறதோ அல்லது பொருள் ஏதேனும் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஆள், அதைத் திருப்பிச் செலுத்திவிடுதல் அல்லது திருப்பிக் கொடுத்துவிடுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) 'அ' என்பவரும் 'ஆ' என்பவரும் கூட்டாக 'இ' என்பவருக்கு ரூபாய் 100 கொடுக்க வேண்டியிருக்கிறது. 'அ' மட்டும் இந்தத் தொகையை 'இ' க்குச் செலுத்துகிறார். ஆனால், 'ஆ' இந்த உண்மைவிவரம் தெரியாமல் மேலும் ஒரு முறை 'இ'க்கு ரூபாய் 100 செலுத்துகிறார். 'இ' அந்தத் தொகையை 'ஆ' வுக்குத் திருப்பிச் செலுத்திவிடக் கட்டுப்பட்டவராவார்.

(ஆ) ஓர் இருப்புப்பாதை நிறுமம், சில சரக்குகளை ஏற்றி வந்ததற்காகச் சட்டமுரணான ஒரு கட்டணத்தைச்செலுத்துவதன்பேரில் அன்றி, அவற்றைச் சரக்குப் பெறுநரிடம் ஒப்புவிக்க மறுக்கிறது. சரக்குப் பெறுநர் சரக்குகளைப் பெறுவதன் பொருட்டு விதிக்கப்பட்ட அத் தொகையைச் செலுத்துகிறார். சட்ட முரணானதாகக் கட்டணத்தில் எந்த அளவு அதிகப்படியாக இருந்ததோ அந்த அளவை வசூலிப்பதற்கு அவர் உரிமையுடையவராவார்.

அத்தியாயம் VI

ஒப்பந்த மீறுகையின் விளைவுகள் பற்றி

ஒப்பந்த மீறுகையினால் விளைவிக்கப்பட்ட இழப்பு அல்லது சேதத்திற்கான சரியீடு.

73. ஓர் ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கிறபோது, அத்தகைய மீறுகையினால் இடருறுகிற தரப்பினர், அதன் காரணமாக அவருக்கு விளைவிக்கப்பட்டதும் அத்தகைய மீறுகையிலிருந்து காரியங்களின் வழக்கமான போக்கில் இயல்பாக உண்டாகியதும் அல்லது அவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்டபோது அதன் மீறுகையினால் பெரும்பாலும் விளையக்கூடும் எனத் தரப்பினர்கள் அறிந்திருந்ததுமான இழப்பு அல்லது சேதம் எதற்கும் அந்த ஒப்பந்தத்தை மீறியிருக்கிற தரப்பினரிடமிருந்து சரியீடு பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

அந்த மீறுகையின் காரணமாக உற்ற சேய்மையானதும் நேரடியல்லாததுமான இழப்பு அல்லது சேதத்திற்காக அத்தகைய சரியீடு கொடுக்கப்படுதல் ஆகாது.

ஒப்பந்தத்தால் உண்டாக்கப்பட்ட வற்றை ஒத்திருக்கிற கடமைப் பொறுப்பைத் தீர்க்கத் தவறுவதற்கான சரியீடு.

ஒப்பந்தத்தால் உண்டாக்கப்பட்டவற்றை ஒத்திருக்கிற ஒரு கடமைப்பொறுப்பு மேற்கொள்ளப்பட்டு அது தீர்க்கப்பட்டிராதபோது தீர்க்கத் தவறியதால் கேடுற்ற ஆள் எவரும் தீர்க்கத் தவறியவரான தரப்பினரிடமிருந்து, அத்தகைய ஆள் அதைத் தீர்ப்பதாக ஒப்பந்தம் செய்திருந்து தமது ஒப்பந்தத்தை மீறிவிட்டிருந்தாற்போன்றே அதே சரியீட்டைப் பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

விளக்கம்.—ஓர் ஒப்பந்த மீறுகையினால் உண்டாகும் இழப்பு அல்லது சேதத்தை மதிப்பிடுகையில், அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமையினால் ஏற்பட்ட தொந்தரவைக் களைவதற்கு இருந்த வழிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) ஒப்புவித்ததன் பேரில் செலுத்தப்பட வேண்டிய ஒரு குறிப்பிட்ட விலைக்கு 50 மணங்கு வெடியுப்பை 'ஆ' என்பவருக்கு விற்கவும் ஒப்புவிக்கவும் 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'அ' தம் வாக்குறுதியை மீறுகிறார். வெடியுப்பு ஒப்புவிக்கப்பட்டிருக்க வேண்டிய காலத்தில் அதே தரமுடைய 50 மணங்கு வெடியுப்பை 'ஆ' எந்த விலைக்கு வாங்கியிருக்கக்கூடுமோ அந்த விலைக்கு ஒப்பந்த விலை எவ்வளவு குறைகிறதோ அந்தத் தொகை, ஏதேனுமிருப்பின், அதைச் சரியீடு என்ற முறையில் 'அ' விடமிருந்து பெறுவதற்கு 'ஆ' உரிமையுடையவராவார்.

(ஆ) பம்பாய்க்குப் போய் அங்கே சனவரி முதல் தேதியன்று 'அ' என்பவர் தரவிருக்கின்ற கப்பற் சரக்குகளை ஏற்றிக் கொண்டு கல்கத்தாவுக்குக் கொண்டு வருவதற்கு எனவும், வாடகை ஈட்டப்பட்ட பின் செலுத்தப்பட வேண்டும் எனவும் 'ஆ' என்பவரின் கப்பலை 'அ' வாடகைக்கு அமர்த்துகிறார். 'ஆ' வின் கப்பல் பம்பாய்க்குப் போகவில்லை. எவ்வளவு பயனுள்ள வரையீடுகளின் பேரில் அந்தக் கப்பலை வாடகைக்கு அமர்த்தினாரோ அவ்வளவு பயனுள்ள வரையீடுகளின் பேரில் அச்சரக்குகளை ஏற்றிச் செல்வதற்குத் தக்க ஊர்தியைப் பெறுவதற்கு 'அ' வுக்கு வாய்ப்புகள் உண்டு. 'அ' அவ் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டார். ஆனால் அவ்வாறு செய்யும்போது இடர்ப்பாட்டிற்கும் செலவுக்கும் அவர் உள்ளாக்கப்படுகிறார். அத்தகைய இடர்ப்பாட்டையும் செலவையும் பொறுத்து 'ஆ' விடமிருந்து சரியீடு பெறுவதற்கு 'அ' உரிமையுடையவராவார்

(இ) ஒப்புவிப்பதற்குக் காலம் எதுவும் குறிக்கப்படாமல் குறிப்பிட்ட விலைக்கு 50 மணங்கு அரிசியை 'ஆ' என்பவரிடமிருந்து வாங்குவதற்கு 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். பிற்பாடு 'அ' தம்மிடம் அரிசியைக் கொடுக்க முற்பட்டால் அதனை ஏற்கப் போவதில்லை என 'ஆ' விடம் தெரிவித்து விடுகிறார். 'அ', 'ஆ' விடம் தாம் அந்த அரிசியை ஏற்க மாட்டேன் என்று சொன்ன சமயத்தில் 'ஆ' அரிசிக்குப் பெறக்கூடிய விலையைவிட ஒப்பந்த விலை எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அந்தத் தொகை, ஏதேனுமிருப்பின், அதை, 'ஆ', 'அ' விடமிருந்து சரியீடு என்ற வகையில் பெற உரிமையுடையவராவார்.

(ஈ). 'அ' என்பவர் 'ஆ' என்பவரின் கப்பலை ரூ.60,000-க்கு விலைக்கு வாங்கிக் கொள்வதற்கு ஒப்பந்தம் செய்துகொள்கிறார்; ஆனால் அவர் தம் வாக்குறுதியை மீறுகிறார். வாக்குறுதியானது மீறப்பட்ட காலத்திலே, அந்தக் கப்பலுக்காக 'ஆ' பெறக்கூடிய விலையைவிட ஒப்பந்த விலையானது எவ்வளவு மிகையாகயிருக்கிறதோ அந்த மிகைத்தொகை, ஏதேனுமிருப்பின், அதைச் சரியீடு என்ற வகையில் 'ஆ' வுக்கு 'அ' செலுத்துதல் வேண்டும்.

(உ) ஒரு குறித்துரைக்கப்பட்ட நாளில் புறப்பட்டுச் சணல் சரக்கை மிர்சாபூரில் விற்பதற்காக அவ்விடத்திற்கு ஏற்றிச் செல்ல ஒரு படகின் சொந்தக்காரரான 'அ' என்பவர் 'ஆ' என்பவருடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். தவிர்க்கக்கூடிய ஏதோ காரணத்தால் அந்தப் படகு குறிப்பிட்ட காலத்தில் புறப்படவில்லையாகையால் ஒப்பந்தப்படி புறப்பட்டிருந்தால், சரக்கு மிர்சாபூரை எந்த நேரத்தில் அடைந்திருக்கக்கூடுமோ அந்த நேரம் கடந்து காலந்தாழ்ந்து அங்கு போய்ச் சேருகிறது. அந்தத் தேதிக்குப் பிறகும் சரக்கு வந்து சேர்வதற்கு முன்பும் சணலின் விலை விழுந்து விடுகிறது. 'ஆ' வுக்கு 'அ' வினால் செலுத்தத்தக்க சரியீட்டின் அளவானது உரியமுறையில் அனுப்பப்பட்டிருந்தால் அந்தச் சரக்கு வந்து சேர்ந்திருக்கக்கூடிய நேரத்தில், மிர்சாபூரில் 'ஆ' வுக்குக் கிடைத்திருக்கக் கூடிய விலைக்கும், அது உள்ளபடி வந்து சேர்ந்தபோது அதன் சந்தை விலைக்கும் உள்ள வேறுபாடாகும்.

(ஊ) ஒரு குறிப்பிட்ட முறையில் 'ஆ' என்பவரின் வீட்டினைப் பழுது பார்ப்பதற்கு 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்துகொண்டு செலுத்தத்தை முன்னதாகப் பெற்றுக் கொள்கிறார். 'அ' வீட்டைப் பழுதுபார்க்கிறார்; ஆனால் ஒப்பந்தத்தின்படி அன்று. ஒப்பந்தத்துக்கு இணங்கி பழுது பார்ப்பதற்கு ஆகும் செலவை 'அ' விடமிருந்து வசூலிப்பதற்கு 'ஆ' உரிமையுடையவராவார்.

(எ) சனவரி முதல் தேதியிலிருந்து ஓர் ஆண்டிற்குக் குறிப்பிட்ட ஒரு தொகைக்கு தம் கப்பலை 'ஆ' என்பவருக்கு வாடகைக்குவிட 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்துகொள்கிறார். சரக்குக் கட்டணங்கள் ஏறுகின்றன. அதனால் சனவரி முதல் தேதியன்று கப்பலுக்குக் கிடைக்கக் கூடிய வாடகைப் பணம் ஒப்பந்த வாடகைப் பணத்தைவிட அதிகமாய் இருக்கிறது. 'அ' தமது வாக்குறுதியை மீறுகிறார். ஒப்பந்தத் தொகைக்கும், சனவரி முதல் தேதியிலும் அது முதற்கொண்டும் ஓர் ஆண்டுக்கு அதைப் போன்ற கப்பலை 'ஆ' வாடகைக்கு அமர்த்தக்கூடிய தொகைக்கும் உள்ள வேறுபாட்டிற்குச் சமமான ஒரு தொகையை அவர் 'ஆ' வுக்குச் சரியீடு என்ற வகையில் செலுத்துதல் வேண்டும்.

(ஏ) ஒரு குறிப்பிட்ட அளவு இரும்பை குறிக்கப்பட்ட ஒரு விலைக்கு 'ஆ' என்பவருக்கு வழங்குவதாக 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். அந்த விலையானது 'அ' எந்த விலைக்கு அந்த இரும்பைப் பெற்று ஒப்புவிக்க முடியுமோ அந்த விலையைவிட அதிகமானதாயிருக்கிறது. இரும்பைப் பெற்றுக் கொள்வதற்கு 'ஆ' சட்டமுரணாக மறுத்து விடுகிறார். இரும்பின் ஒப்பந்த விலைக்கும், 'அ' எந்தத் தொகைக்குப் பெற்று ஒப்புவித்திருக்கக்கூடுமோ அந்தத் தொகைக்கும் உள்ள வேறுபாட்டை 'அ' வுக்கு 'ஆ' சரியீடு என்ற வகையில் செலுத்துதல் வேண்டும்.

(ஐ) ஒரு விசைப் பொறியை (machine) 'அ' என்பவரின் ஆலைக்குக் காலத்தாழ்வின்றி எடுத்துச் செல்வதற்காக அந்த விசைப்பொறி இல்லாமையால் தன் ஆலை ஓடாமலிருக்கிறதென்பதைத் தெரிவித்து 'ஆ' என்கிற பொது ஊர்தியரிடம் 'அ' அதை ஒப்படைக்கிறார். அந்த விசைப் பொறியை ஒப்புவிப்பதில் 'ஆ' தகவில்லாமல் காலந்தாழ்த்துகிறார். மேலும் அதன் விளைவாக ஓர் ஆதாயந்தரத்தக்க அரசு ஒப்பந்தத்தை 'அ' இழந்து விடுகிறார். ஒப்புவிப்பதில் காலந்தாழ்ந்தபட்ட காலத்தின் போது அந்த ஆலையை நடத்துவதனால் கிடைத்திருக்கக்கூடிய சராசரி ஆதாயத்தொகையை சரியீடு என்ற வகையில் 'ஆ' விடமிருந்து 'அ' பெறுவதற்கு உரிமையுடையவராவார்; ஆனால் அரசு ஒப்பந்தத்தை இழந்ததன் மூலமாக உற்ற இழப்பைப் பெறுவதற்கன்று.

(ஒ) ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒப்புவிப்பதற்காக, டன் ஒன்றுக்கு ரூபாய் 100 வீதம் ஆயிரம் டன் இரும்பை 'ஆ' என்பவருக்கு வழங்குவதற்கு 'ஆ' வுடன் 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்து கொண்டு 'ஆ' வுடன் தாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக அவ்வாறு செய்வதாக 'இ' என்பவரிடம் சொல்லி, டன் ஒன்றுக்கு ரூபாய் 80 வீதம் ஆயிரம் டன் இரும்பை விலைக்கு வாங்க 'இ' உடன் 'அ' ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'அ' வுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்ற 'இ' தவறிவிடுகிறார். 'அ' வும் வேறு இரும்பு பெற முடியவில்லை. மேலும் அதன் விளைவாக 'ஆ' அந்த ஒப்பந்தத்தை அறவுசெய்கிறார். 'ஆ' வுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றியிருந்தால் ,'அ' அடைந்திருக்கக்கூடிய ஆதாயமாகிய ரூபாய் 20,000த்தை 'இ', 'அ' வுக்குச் செலுத்த வேண்டும்.

(ஓ) குறிப்பிட்ட விசைப்பொறி ஒன்றைச் செய்து, குறித்துரைக்கப்பட்ட விலைக்கு குறிக்கப்பட்ட ஒரு நாளில், 'ஆ' என்பவருக்கு ஒப்புவிப்பதாக 'ஆ' வுடன் 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்துகொள்கிறார். குறித்துரைக்கப்பட்ட காலத்தில் 'அ' அந்த விசைப்பொறியை ஒப்புவிக்கவில்லை ; மேலும் அதன் விளைவாக 'அ' வுக்குச் செலுத்தியிருக்க வேண்டிய விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு மற்றொன்றை 'ஆ' பெற வேண்டியவராயிருக்கிறார். மற்றும், 'அ' வுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் காலத்தில் 'ஆ' மூன்றாமவர் ஒருவருடன் செய்து கொண்டிருந்த ஓர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமல் தடுக்கப்படுகிறார். ஆனால் அந்த ஒப்பந்தம் அப்போது 'அ' வுக்குத் தெரிவிக்கப்படவில்லை; மற்றும் அந்த ஒப்பந்த மீறுகைக்காக 'ஆ' சரியீடு செய்யக் கட்டாயப்படுத்தப்படுகிறார். சரியீடாக அந்த விசைப்பொறிக்கான ஒப்பந்த விலைக்கும் மற்றொருவருக்குச் செலுத்திய தொகைக்கும் உள்ள வேறுபாட்டை 'அ','ஆ'வுக்குச் செலுத்தவேண்டும் ; ஆனால் 'ஆ' வினால் அந்த மூன்றாமவருக்கும் சரியீடு என்ற வகையில் செலுத்தப்பட்ட தொகையை அன்று.

(ஔ) ஒரு வீட்டை வாடகைக்குவிட 'இ' என்பவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிற 'ஆ' என்பவர், சனவரி முதல் தேதியளவில் அதன் உடைமையை 'இ' க்குக் கொடுக்கலாம் என்பதன் பொருட்டு, அந்தக் காலத்திற்குள் அதைக் கட்டி முடித்துத் தருவதாக, கட்டடம் கட்டுநராகிய 'அ' என்பவர் 'ஆ' வுடன் ஒப்பந்தம் செய்துகொள்கிறார். 'ஆ' வுக்கும் 'இ' க்கும் இடையே உள்ள ஒப்பந்தமானது 'அ' வுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அந்த வீட்டை 'ஆ', சனவரி முதல் தேதிக்கு முன்பு கீழே விழுந்து விடுகிற அளவுக்கு மோசமாகக் கட்டுகிறார்; 'ஆ' அதை திரும்பக் கட்ட வேண்டியிருக்கிறது. 'ஆ' அதன் விளைவாக 'இ' யிடமிருந்து பெற்றிருக்க வேண்டிய வாடகையை இழப்பதோடு 'இ' யுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மீறுகையினால் 'இ' க்குச் சரியீடு செய்ய வேண்டியிருக்கிறது. வீட்டைத் திரும்பவும் கட்டியதற்கான செலவுத் தொகைக்கும், இழந்து வாடகைக்கும் 'இ' க்கு செய்யப்பட்ட சரியீட்டிற்கும் 'ஆ' வுக்கு 'அ' சரியீடு செய்ய வேண்டும்.

(க). 'அ' என்பவர் குறிப்பிட்ட வாணிகச் சரக்கை அது ஒரு குறிப்பிட்ட தரமுடையதென்று சார்புறுதி (warranty) அளித்து 'ஆ' என்ப்வருக்கு விற்கிறார், மற்றும் 'ஆ' இந்தச் சார்புறுதியை நம்பி அதே போன்ற சார்புறுதியுடன் 'இ' என்பவருக்கு அதை விற்கிறார். சரக்குகள் சார்புறுதிக்கிணங்க இல்லை எனத் தெரிய வருகிறது. அதனால் 'ஆ', 'இ'க்கு சரியீடாக ஒரு பணத் தொகையைச் செலுத்தக் கடப்பாடுடையவராகிறார். 'ஆ' இந்தத் தொகையை 'அ' வினால் ஈடுசெய்யப்படுவதற்கு உரிமையுடையவராவார்.

(ங). 'ஆ' என்பவருக்குக் குறித்துரைக்கப்பட்ட ஒரு நாளில் ஒரு பணத்தொகையைச் செலுத்த 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். அந்த நாளில் அந்தப் பணத்தை 'அ' செலுத்தவில்லை. அந்த நாளில் 'ஆ' பணத்தைப் பெறாததன் விளைவாக, தம் கடன்களைத் தீர்க்க முடியாதுபோய், முற்றிலும் சீரழிந்து போகிறார். தாம் மற்றும் செலுத்துவதற்கு ஒப்பந்தம் செய்த முதலுக்கும் அத்துடன் செலுத்தும் நாள்வரையிலான வட்டிக்கும் தவிர, வேறு எதற்கும் 'ஆ'வுக்கு 'அ' ஈடு செய்யக்கடப்பாடுடையவரல்லர்.

(ச). ஒரு குறிப்பிட்ட விலைக்கு, சனவரி முதல் தேதியன்று 'ஆ' என்பவருக்கு 50 மணங்கு வெடியுப்பை ஒப்புவிப்பதற்கு 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். பிற்பாடு, சனவரி முதல் தேதிக்கு முன்னதாக சனவரி முதல் தேதியன்று உள்ள சந்தை விலைக்கு அதிகமான ஒரு விலைக்கு 'இ' என்பவருக்கு வெடியுப்பை விற்க 'ஆ' ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'அ' தம் வாக்குறுதியை மீறுகிறார். 'ஆ'வுக்கு 'அ' செலுத்த வேண்டிய சரியீட்டை மதிப்பிடும்போது, சனவரித் திங்கள்

முதல் தேதியன்று உள்ள சந்தை விலையைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்; ஆனால் 'இ'க்குச் செய்யும் விற்பனையின் மூலம் 'ஆ'வுக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஆதாயத்தை அன்று.

(ஞ) ஒரு குறிப்பிட்ட நாளில் 500 பொதி (bale) பஞ்சை 'ஆ' என்பவருக்கு விற்கவும் ஒப்புவிக்கவும் 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'ஆ' தம் தொழிலை நடத்தும் விதத்தைக் குறித்து 'அ'வுக்கு ஒன்றும் தெரியாது. 'அ' தன் வாக்குறுதியை மீறுகிறார். 'ஆ' பஞ்சு இல்லாமையால் தம் ஆலையை மூடிவிட வேண்டியதாயிருக்கிறது. ஆலையை மூடிவிட்டதால் 'ஆ'வுக்கு ஏற்பட்ட இழப்புக்கு 'அ' பொறுப்பாளி அல்லர்.

(ட). 'அ' என்பவர் ஒரு குறிப்பிட்ட துணியை சனவரி முதல் தேதியன்று 'ஆ' என்பவருக்கு விற்கவும் ஒப்புவிக்கவும் ஒப்பந்தம் செய்கிறார். 'ஆ' அந்தத் துணியைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட வகைக் குல்லாய்கள் உற்பத்தி செய்யக் கருதுகிறார். அந்தக் குல்லாய்களுக்கு அந்தப் பருவத்தில் தவிர தேவையிருப்பதில்லை. துணியானது குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகும் அந்த ஆண்டு குல்லாய்களாகச் செய்வதற்கும் பயன் படுத்த முடியாதபடி அவ்வளவு காலந்தாழ்த்தியும் ஒப்புவிக்கப்பட்டது. அந்தத் துணியின் ஒப்பந்த விலைக்கும் ஒப்புவிக்க வேண்டிய காலத்தில் உள்ள அதன் சந்தை விலைக்கும் உள்ள வேறுபாட்டைச் சரியீடு என்ற வகையில் 'அ'விடம் 'ஆ' பெறுவதற்கு உரிமையுடையவராகிறார்; ஆனால் குல்லாய்களைச் செய்வதன் மூலம் அவா பெறுவதற்கு எதிர்பார்த்த ஆதாயங்களையோ அல்லது உற்பத்திக்கான முன்னேற்பாடு செய்வதில் அவருக்கு நேர்ந்த செலவுகளையோ அல்ல.

(ண) ஒரு கப்பலின் சொந்தக்காரரான 'அ' என்பவர் சனவரி முதல் தேதியன்று புறப்படும் தம் கப்பலில் 'ஆ' என்பவரைக் கல்கத்தாவிலிருந்து சிட்னிக்கு ஏற்றிக்கொண்டு செல்வதாக 'ஆ'வுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். தம் பயணக் கட்டணத்தில் பாதியை வைப்பீடாக 'அ' விடம் 'ஆ' செலுத்துகிறார். சனவரி முதல் தேதியன்று கப்பல் புறப்பட வில்லை. அதன் விளைவாக 'ஆ' கல்கத்தாவில் சிறிது காலம் நிறுத்தி வைக்கப்பட்டு, அதனால் அவருக்குச் சிறிது செலவு நேர்ந்து, வேறு கப்பலில் அவர் சிட்னிக்குப் புறப்பட்டுச் செல்கிறார். அதன் விளைவாக மிகவும் காலந்தாழ்த்தி சிட்னி போய்ச் சேர்ந்து ஒரு பணத்தொகையை இழக்கிறார். 'ஆ' வைப்பீடாகச் செலுத்திய தொகையை வட்டியுடனும் கல்கத்தாவில் நிறுத்தி வைக்கப்பட்டதால் அவருக்கு நேர்ந்த செலவையும் முதற் கப்பலுக்கு ஒப்பந்தப்படி செலுத்த வேண்டிய பயணக் கட்டணத்தினைவிட இரண்டாம் கப்பலுக்கு செலுத்தியது அதிகமாக இருப்பின், அதையும் 'ஆ'வுக்கு 'அ' திருப்பிச் செலுத்துவதற்குக் கடப்பாடுடையவராவார்; ஆனால் மிகவும் காலந்தாழ்த்தி சிட்னிக்குப் போய்ச் சேர்ந்ததால் 'ஆ' இழந்து விட்ட பணத்தொகையைச் செலுத்துவதற்கு அன்று.

ஒப்பந்த மீறுகைக்கான தண்டம் உடன்படுகை செய்யப்பட்டிருக்குமிடத்து சரியீடு.

74. ஓர் ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கும்போது, அத்தகைய மீறுகை ஏற்படும்நேர்வில் செலுத்தப்படவேண்டிய தொகை இவ்வளவு என அந்த ஒப்பந்தத்தில் ஒரு தொகையானது குறிப்பிடப்பட்டு இருந்தால், அல்லது, தண்ட வகையில் வேறு ஏதாவது ஓர் உடன்படுகையை அந்த ஒப்பந்தம் கொண்டிருந்தால், அந்த மீறுகைபற்றி முறையிடுகிற தரப்பினர், அதன்மூலம் உள்ளபடியாக சேதம் அல்லது இழப்பு ஏற்பட்டதாக மெய்ப்பித்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, ஒப்பந்தத்தை மீறியிருக்கிறதரப்பினரிடமிருந்து அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் தொகைக்கு அல்லது, நிலவரத்துக்கு ஏற்ப, உடன்படுகை செய்யப்பட்டுள்ள தண்டத்துக்கு மேற்படாத ஒரு தகவான சரியீட்டைப் பெறுவதற்கு உரிமையுடையவராவார்.

விளக்கம்.—தவறுகைத் தேதியிலிருந்து கூடுதல் வட்டிக்கான உடன்படுகை ஒன்று தண்ட வகையிலான ஓர் உடன்படுகையாக இருக்கலாம்.

விதிவிலக்கு.—பிணைமுறி (Bail bond), கட்டுமுறி (Recognizance) அல்லது அதே தன்மையதான வேறு முறையாவணம் எதையும் ஆள் எவரேனும் எழுதிக் கொடுக்கும்போது, அல்லது சட்டம் ஏதொன்றின் வகைமுறைகளின்படி, அல்லது மைய அரசின் அல்லது மாநில அரசு ஏதொன்றின் ஆணைகளின்

படி பொதுக்கடமை எதனையும் அல்லது பொதுமக்கள் அக்கறை கொண்டுள்ள செயல் எதனையும் நிறைவேற்றுவதற்காக முறி எதனையும் தரும்போது, அத்தகைய முறையாவணம் எதிலுமுள்ள வீரக்கட்டினை மீறியதன் பேரில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை முழுவதையும் செலுத்துவதற்கு அவர் கடப்பாடுடையவராவார்.

விளக்கம்.—அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிற ஓர் ஆள் அதனாலேயே பொதுக் கடமை எதையும் மேற்கொள்கிறார் அல்லது பொதுமக்கள் அக்கறை கொண்டுள்ள செயல் எதையும் செய்வதாக வாக்குறுதி அளிக்கிறார் என்று ஆகிவிடாது.

எடுத்துக்காட்டுகள்.

(அ) ஒரு குறிப்பிட்ட நாளில் 'ஆ' என்பவருக்கு ரூ. 500 தாம் செலுத்தத் தவறினால், 'ஆ'வுக்கு ரூ. 1,000 தருவதாக 'அ' என்பவர் 'ஆ'வுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். அந்த நாளில் 'ஆ'வுக்கு ரூ. 500 செலுத்த 'அ' தவறிவிடுகிறார். நீதிமன்றம் தகவானது என்று கருதுகிற, ரூ. 1,000 க்கு மிகாத சரியீட்டை 'அ'விடமிருந்து வசூலிப்பதற்கு 'ஆ' உரிமையுடையவராவார்.

(ஆ) கல்கத்தாவுக்குள் அறுவை மருத்துவராக 'அ' என்பவர் தொழிலாற்றினால் 'ஆ' என்பவருக்கு ரூ. 5,000 செலுத்துவதாக 'ஆ'வுடன் 'அ' ஒப்பந்தம் செய்து கொள்கிறார். கல்கத்தாவில் அறுவை மருத்துவராக 'அ' தொழிலாற்றுகிறார். நீதிமன்றம் தகவானது என்று கருதுகிற ரூ. 5,000 க்கு மிகாத சரியீட்டுக்கு 'ஆ' உரிமையுடையவராவார்.

(இ) தண்டமாக ரூ. 500 செலுத்தத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு, ஒரு குறிப்பிட்ட நாளில் நீதிமன்றத்திற்கு நேரில் வருவதாக ஒரு கட்டு முறியை 'அ' என்பவர் எழுதிக்கொடுக்கிறார். அவர் கட்டு முறியின்படி நடக்கத் தவறிவிடுகிறார். தண்டம் முழுவதையும் செலுத்துவதற்கு அவர் கடப்பாடுடையவராவார்.

[1][(ஈ) ரூ. 1,000 த்தை ஆறு திங்கள் முடிந்ததும் நூற்றுக்கு 12 விழுக்காடு வட்டியுடன் திருப்பிச் செலுத்துவதாகவும் செலுத்தத் தவறினால் தவறிய நாளிலிருந்து நூற்றுக்கு 75 விழுக்காடு வட்டி செலுத்த வேண்டும் என்ற உடன்படுகையுடன் ஒரு முறியை 'ஆ' என்பவருக்கு 'அ' என்பவர் எழுதிக் கொடுக்கிறார். இது தண்டம் என்ற வகையிலுள்ள ஓர் உடன்படுகையாகும். ஆகவே நீதிமன்றம் தகவானது எனக் கருதுகிற சரியீட்டை மட்டும் 'அ'விடமிருந்து வசூலிப்பதற்கு 'ஆ' உரிமையுடையவராவார்.

(உ) வட்டித் தொழிலரான 'ஆ' என்பவருக்குப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிற 'அ' என்பவர், ஒரு குறிப்பிட்ட தேதியில் 10 மணங்கு தானியத்தை ஒப்புவிப்பதன் மூலம் அவருக்குத் திருப்பிச் செலுத்துவதாக ஏற்றுக்கொள்கிறார்; உடன்படுகைக்குற்ற தேதியில் உடன்படுகைக்குற்ற அளவு தானியத்தை ஒப்புவிக்கத் தாம் தவறினால், 20 மணங்கு தான் ஒப்புவிக்கக் கடப்பாடுடையவராதல் வேண்டும் என்று உடன்படுகை செய்து கொள்கிறார். இது தண்டம் என்ற வகையிலுள்ள ஓர் உடன்படுகை ஆகும். ஆகையால் மீறுகை நிகழுமானால் ஒரு தகவான சரியீட்டுக்கு மட்டும் 'ஆ' உரிமையுடையவராவார்.

(ஊ) தவணை எதுவும் செலுத்தத் தவறினால், முழுவதும் கொடுபடவேண்டியதாகிவிடும் என்ற உடன்படுகையுடன் ரூ. 1,000 கடனை ஐந்து சமமான திங்கள் தவணைகளில் 'ஆ' என்பவருக்குத் திருப்பிச் செலுத்துவதாக 'அ' என்பவர் ஏற்றுக்கொள்கிறார். இந்த உடன்படுகை தண்டம் என்ற வகையில் இல்லை. ஆகவே ஒப்பந்தம் அதன் வரையீடுகளின்படி நிறைவேற்றப்படலாம்.

(எ). 'அ' என்பவர் 'ஆ' என்பவரிடம் ரூ. 100 கடன்பெற்று, தவணை எதுவும் செலுத்தத் தவறினால் முழுவதும் கொடுபடவேண்டியதாகும் என்ற உடன்படுகையுடன் ஆண்டுக்கு 40 ரூபாயாக ஐந்து தவணைகளில் செலுத்துவதாக ரூ. 200க்கு ஒரு முறி எழுதிக் கொடுக்கிறார். [இது தண்டம் என்ற வகையிலுள்ள ஓர் உடன்படுகையாகும்.]

[1] 1899 ஆம் ஆண்டு 6 ஆம் சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் சேர்க்கப்பட்டது.

ஒப்பந்தத்தைச் சட்ட உரிமைப்படி அறவுசெய்கிற தரப்பினர் சரியீட்டுக்கு உரிமையுடையவராவார்.

75. ஓர் ஒப்பந்தத்தைச் சட்டஉரிமைப்படி அறவு செய்கிற ஓர் ஆள், ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமை காரணமாகத் தமக்கு ஏற்பட்டுள்ள சேதம் எதற்குமான சரியீட்டுக்கு உரிமையுடையவராவார்.

எடுத்துக்காட்டு.

ஓர் அரங்கின் மேலாளரான 'ஆ' என்பவருடைய அரங்கில் அடுத்து வரும் இரண்டு திங்களின்போது ஒவ்வொரு வாரமும் இரண்டு இரவுகள் பாடுவதாக 'அ' என்ற பாடகி அவருடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். மற்றும் ஒவ்வோர் இரவு நிகழ்ச்சிக்கும் ரூ. 100 அவருக்குச் செலுத்துவதற்கு 'ஆ' வாக்குறுதியளிக்கிறார். ஆறாவது இரவன்று 'அ' வேண்டுமென்றே அரங்கிற்கு வராமல் இருந்து விடுகிறார். அதன் விளைவாக 'ஆ'வும் ஒப்பந்தத்தை அறவு செய்கிறார். இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமை காரணமாகத் தமக்கு ஏற்பட்டுள்ள சேதத்திற்காகச் சரியீடு கோருவதற்கு 'ஆ' உரிமையுடையவராவார்.

அத்தியாயம் VII

*　　*

[சரக்குகளின் விற்பனை] 1930 ஆம் ஆண்டு சரக்குகள் விற்பனைச் சட்டத்தின் 65 ஆம் பிரிவினால் நீத்தறவு செய்யப்பட்டது.

அத்தியாயம் VIII

ஈட்டுறுதியையும் பொறுப்புறுதியையும் பற்றி

''ஈட்டுறுதி ஒப்பந்தம்'' என்பதற்குப் பொருள் வரையறை.

124. எந்த ஒப்பந்தத்தின் மூலம் ஒரு தரப்பினர், வாக்குறுதி தருநர் தம் நடத்தையினாலோ அல்லது வேறு ஆள் எவருடைய நடத்தையினாலுமோ மற்றையவருக்கு விளைவிக்கப்படும் இழப்பிலிருந்து காப்பதாக அந்த மற்றையவருக்கு வாக்குறுதி கொடுக்கிறாரோ அந்த ஒப்பந்தம் ஓர் ''ஈட்டுறுதி ஒப்பந்தம்'' எனப்படும்.

எடுத்துக்காட்டு.

ஒரு குறிப்பிட்ட 200 ரூபாய் தொகையைப் பொறுத்து 'ஆ' என்பவருக்கெதிராக 'இ' என்பவர் எடுக்கலாகும் நடவடிக்கை ஏதொன்றின் விளைவு பொறுத்து 'ஆ'வுக்கு ஈடு செய்வதாக 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்துகொள்கிறார். இது ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தமாகும்.

வழக்கிடப்படும் போது ஈட்டுறுதி உடையவரின் உரிமைகள்.

125. ஓர் ஈட்டுறுதி ஒப்பந்தத்தின் வாக்குறுதி பெறுநர், தம் அதிகார வீச்சுக்குள் செயற்படுகையில் வாக்குறுதி தருநரிடமிருந்து—

(1) ஈடு செய்வதற்கான வாக்குறுதி எந்தப் பொருளுக்குப் பொருந்துகிறதோ அந்தப் பொருள் எதையும் பொறுத்து உள்ள உரிமைவழக்கு எதிலும், அவர் செலுத்துவதற்குக் கட்டாயப்படுத்தப்படலாகும் எல்லா இழப்பீட்டையும்,

(2) அத்தகைய உரிமை வழக்கெதிலும் அதனை இடுகையில் அல்லது எதிர்வழக்காடுகையில் வாக்குறுதி தருநரின் ஆணைகளை மீறாமல் இருப்பதோடு ஈட்டுறுதி ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில் அவர் எவ்வாறு செயற்படுவது அறிவார்ந்ததாக இருந்திருக்குமோ, அவ்வாறு செயற்பட்டும் இருந்தால் அல்லது வாக்குறுதிதருநர் உரிமை வழக்கை இடும்படியோ அல்லது எதிர்வழக்காடும்படியோ அவருக்கு அதிகாரமளித்திருந்தால், அவர் செலுத்துமாறுகட்டாயப்படுத்தப்படலாகும் எல்லாச் செலவுத்தொகைகளையும்,

(3) அத்தகைய உரிமைவழக்கில் செய்யப்படும்இணக்கம் எதுவும் வாக்குறுதிதருநரின் ஆணைகளுக்கு முரணாக இல்லாததாகவும் ஈட்டுறுதி ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில் வாக்குறுதி தருநர் செய்திருந்தால் அறிவார்ந்ததாக இருந்திருக்கிறஒன்றாகவும் இருந்தால்,அல்லது வாக்குறுதி தருநர் உரிமைவழக்கை இணக்கம் செய்து கொள்ளும்படி அவருக்கு அதிகாரமளித்திருந்தால், அத்தகைய இணக்கம் ஏதொன்றின் வரையீடுகளின்படி அவர் செலுத்தியிருக்கலாகும் எல்லாத் தொகைகளையும் வசூலிப்பதற்கு உரிமையுடையவராவார்.

''பொறுப்புறுதி ஒப்பந்தம்'' ''பிணையர்'' ''முதன்மைக் கடன் பெறுநர்'' மற்றும் ''கடன் தருநர்''.

126. ''பொறுப்புறுதி ஒப்பந்தம்'' என்பது, மூன்றாமவர் ஒருவரின் வாக்குறுதி அல்லது கடப்பாட்டினை, அவர் தவறுகை செய்யுங்கால் நிறைவேற்றுவதற்கான அல்லது தீர்ப்பதற்கான ஓர் ஒப்பந்தமாகும். பொறுப்புறுதி கொடுக்கிற ஆள் ''பிணையர்'' என்று வழங்கப்படுகிறார்; எந்த ஆளுடைய தவறுகைக்காகப் பொறுப்புறுதி கொடுக்கப்படுகிறதோ அந்த ஆள்''முதன்மைக் கடன்பெறுநர்'' என்று வழங்கப்படுகிறார்; மற்றும், எந்த ஆளுக்குப் பொறுப்புறுதி கொடுக்கப்படுகிறதோ அந்த ஆள் ''கடன்தருநர்'' என்று வழங்கப்படுகிறார். பொறுப்புறுதியானது, வாய்மொழியாகவோ அல்லது எழுத்து வடிவாகவோ இருக்கலாம்.

127. முதன்மைக் கடன்பெறுநரின் நன்மைக்காகச் செய்யப்பட்ட எதுவும் அல்லது கொடுக்கப்பட்ட வாக்குறுதி எதுவும் பிணையர் பொறுப்புறுதி கொடுப்பதற்குப் போதிய மறுபயனாக இருக்கலாம்:— பொறுப்புறுதிக்கான மறுபயன்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'ஆ' என்பவர் 'அ' என்பவரைத் தமக்குச் சரக்குகளைக் கடனுக்கு விற்கும்படியும் தம்மிடம் ஒப்புவிக்கும்படியும் வேண்டுகிறார். சரக்குகளுடைய விலையின் செலுத்தத்துக்கு 'இ' என்பவர் பொறுப்புறுதி கொடுப்பாரானால் 'அ' அவ்வாறு செய்ய உடன்படுகிறார். சரக்குகளை ஒப்புவிப்பதற்கான 'அ'வின் வாக்குறுதிக்கு மறுபயனாகச் செலுத்தத்துக்குப் பொறுப்புறுதி கொடுப்பதாக 'இ' வாக்குறுதி அளிக்கிறார். இது 'இ' யின் வாக்குறுதிக்குப் போதிய மறுபயனாகும்.

(ஆ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குச் சரக்குகளை விற்கவும் ஒப்புவிக்கவும் செய்கிறார். பிற்பாடு 'இ' என்பவர் அந்தக் கடனுக்காக ஓர் ஆண்டு வரை 'ஆ' வின் மீது வழக்கிடாது பொறுத்திருக்கும்படி 'அ' வைக் கேட்டுக் கொள்கிறார்; மற்றும் அவர் அவ்வாறு செய்தால், 'ஆ' செலுத்தத் தவறுங்கால் சரக்கிற்குத் தாம் செலுத்திவிடுவதாக 'இ' வாக்குறுதி அளிக்கிறார். கேட்டுக் கொண்டவாறே பொறுத்திருக்க 'அ' உடன்படுகிறார். இது 'இ' யின் வாக்குறுதிக்குப் போதிய மறுபயனாகும்.

(இ). 'அ' என்பவர் சரக்குகளை 'ஆ' என்பவருக்கு விற்கவும் ஒப்புவிக்கவும் செய்கிறார். பிற்பாடு, 'இ' என்பவர் மறுபயனின்றி, 'ஆ' செலுத்தத் தவறுங்கால் சரக்குகளுக்கான பணத்தைத் தாம் செலுத்துவதாக உடன்படுகிறார். அந்த உடன்பாடு செல்லாதது ஆகும்.

128. வேறுவிதமாக ஒப்பந்தத்தில் வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி, முதன்மைக் கடன்பெறுநரின் கடப்பாட்டுடன் பிணையரது கடப்பாடு ஒருபடித்தானதாய் இருக்கும். பிணையரின் கடப்பாடு.

எடுத்துக்காட்டு.

ஒரு மாற்றுச்சீட்டுக்கு 'இ' என்கிற ஏற்குநர் செலுத்தம் செய்வார் என்று 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குப் பொறுப்புறுதியளிக்கிறார். அந்தச் சீட்டு 'இ' என்பவரால் மதிப்பளிக்க மறுக்கப்பட்டது. 'அ' அந்தச் சீட்டின் தொகைக்கு மட்டுமல்லாமல் அதன் பேரில் கொடுபட வேண்டியதாயிருக்கலாகும் வட்டி மற்றும் கட்டணங்கள் எவற்றிற்கும் கூட கடப்பாடுடையவராவார்.

129. நடவடிக்கைகளின் தொடர் ஒன்றை அளாவிநிற்கும் ஒரு பொறுப்புறுதி "தொடர்வுறும் பொறுப்புறுதி" என்று வழங்கப்படும். தொடர்வுறும் பொறுப்புறுதி.

எடுத்துக்காட்டுகள்:

(அ). 'அ' என்பவர் 'ஆ' என்பவரின் ஜமீனுடைய வாடகைகளை வசூல் செய்ய 'இ' என்பவரை 'ஆ' வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டும் என்பதற்கு மறுபயனாக அந்த வாடகைகளை 'இ' முறையாக வசூல் செய்வதற்கும் செலுத்துவதற்கும் ரூபாய் 5,000 வரைக்கும் தாம் பொறுப்பாய் இருப்பதாக வாக்குறுதி அளிக்கிறார். இது ஒரு தொடர்வுறும் பொறுப்புறுதியாகும்.

(ஆ). 'ஆ' என்கிற தேயிலை வணிகருக்கு அவர் அவ்வப்போது 'இ' என்பவருக்கு வழங்கலாகும் தேயிலை எதற்காகவும் 'அ' என்பவர் 100 பவுன் தொகை வரையிலான செலுத்தத்துக்கு பொறுப்புறுதியளிக்கிறார். 'ஆ', 'இ' க்கு 100 பவுனுக்கும் அதிகமான மதிப்புடைய தேயிலையை வழங்குகிறார். மற்றும் 'இ' அதற்கான தொகையை 'ஆ' வுக்குச் செலுத்தி விடுகிறார். பிற்பாடு 'ஆ', 'இ' க்கு 200 பவுன் மதிப்புள்ள தேயிலையை வழங்குகிறார். 'இ' செலுத்தத் தவறிவிடுகிறார். 'அ' கொடுத்த பொறுப்புறுதி, ஒரு தொடர்வுறும் பொறுப்புறுதி. ஆகவே, அதன்படி அவர் 'ஆ' வுக்கு 100 பவுன் வரையில் கடப்பாடுடையவராவார்.

(இ). 'ஆ' என்பவரால் 'இ' என்பவருக்கு ஒப்புவிக்கப்பட வேண்டியதும் ஒரு திங்களில் விலை செலுத்தப்படவேண்டியதுமான ஐந்து சாக்கு மாவின் விலை 'ஆ' வுக்குச் செலுத்தம் செய்யப்படுவதற்கு 'அ' பொறுப்புறுதியளிக்கிறார். 'ஆ' ஐந்து சாக்கு மாவை 'இ' யிடம் ஒப்புவிக்கிறார். 'இ' இதற்கான விலையைச் செலுத்திவிடுகிறார். பின்னர் 'ஆ' நான்கு சாக்கு மாவை 'இ' யிடம் ஒப்புவிக்கிறார். அவற்றிற்காக 'இ' விலை செலுத்தவில்லை. 'அ' கொடுத்த பொறுப்புறுதி ஒரு தொடர்வுறும் பொறுப்புறுதியன்று. ஆகவே, அதன்படி அந்த நான்கு சாக்கு மாவின் விலைக்கு அவர் கடப்பாடுடையவரல்லர்.

தொடர்வுறும் பொறுப்புறுதியைப் பின்னறவு செய்தல்.

130. ஒரு தொடர்வுறும் பொறுப்புறுதியானது, எதிர்கால நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், கடன்தருநருக்கு அறிவிப்புக் கொடுப்பதன் மூலமாக பிணையரால் எந்த நேரத்திலும் பின்னறவு செய்யப்படலாம்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவரின் வேண்டுகோளின் பேரில் 'ஆ' என்பவர் 'இ' என்பவருக்காக வட்டம் பிடித்து (discounting) மாற்றுச் சீட்டுகளுக்குப் பணம் கொடுப்பதற்கு மறுபயனாக, 'அ' பன்னிரண்டு திங்கள்களுக்கு அத்தகைய சீட்டுகள் அனைத்தின் தொகையும் முறையாகச் செலுத்தம் செய்யப்படுவதற்கு ரூபாய் 5,000 வரையிலும் 'ஆ' வுக்குப் பொறுப்புறுதியளிக்கிறார். 'இ' க்காக 'ஆ' என்பவர் ரூபாய் 2,000 வரை வட்டம் பிடித்துச் சீட்டுகளுக்குப் பணம் கொடுக்கிறார். பிற்பாடு மூன்று திங்கள்களின் முடிவில் 'அ' பொறுப்புறுதியைப் பின்னறவு செய்கிறார். இந்தப் பின்னறவு செய்தலானது பிந்திய வட்டப்பிடிப்பு ஏதொன்றும் தொடர்பாக 'ஆ' வின்பாலுள்ள கடப்பாடு முழுவதினின்று 'அ' வை விடுவிக்கின்றது. ஆனால் 'இ' தவறுங்கால் 'அ', 'ஆ' வுக்கு ரூபாய் 2,000 க்குக் கடப்பாடுடையவராவார்.

(ஆ). 'ஆ' என்பவர் 'இ' என்பவர் பேரில் எழுதுகிற சீட்டுகளனைத்திற்கும் 'இ' பணம் செலுத்துவார் என்று 'அ' என்பவர் ரூபாய் 10,000 வரைக்கும் 'ஆ' வுக்குப் பொறுப்புறுதியளிக்கிறார். 'ஆ', 'இ' யின் பேரில் சீட்டு எழுதுகிறார். 'இ' அந்தச் சீட்டை ஏற்றுக்கொள்கிறார். 'அ' பின்னறவு செய்தல் பற்றி அறிவிப்புக் கொடுக்கிறார். அந்தச் சீட்டு முதிர்வடைந்ததன் பேரில் 'இ' அதற்கு மதிப்பளிக்க மறுக்கிறார். 'அ' தம் பொறுப்புறுதியின்படி கடப்பாடுடையவராவார்.

தொடர்வுறும் பொறுப்புறுதி பிணையரின் இறப்பால் பின்னறவுறுதல்.

131. மாறாக ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில், எதிர்கால நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், பிணையரின் இறப்பு ஒரு தொடர்வுறும் பொறுப்புறுதியின் பின்னறவுறுகையாகச் செயற்படும்.

தலையாய கடப்பாடுடைய இரண்டு ஆட்களின் கடப்பாடு அவர்களுக்கிடையே உள்ள ஒருவரது தவறுகைக்கு மற்றவர் பிணையராக இருத்தல் வேண்டும் என்ற ஏற்பாட்டினால் ஊறுபடுவதில்லை.

132. இரண்டு ஆட்கள் மூன்றாமவர் ஒருவரிடம் ஒரு குறிப்பிட்ட கடப்பாட்டை மேற்கொள்வதாக ஒப்பந்தம் செய்து கொள்ளுமிடத்தும், அதோடு அவர்களில் ஒருவர் மற்றையவரின் தவறுகையின் பேரில் மட்டும் கடப்பாடுடையவர் ஆதல் வேண்டும் என்பதாக அவ்விருவரும் ஒருவரோடொருவர் ஒப்பந்தம் செய்து கொள்ளுமிடத்தும், அந்த மூன்றாமவர், அத்தகைய ஒப்பந்தத்துக்குத் தரப்பினராக இல்லாதிருந்து, அத்தகைய மூன்றாமவர் அந்த இரண்டாம் ஒப்பந்தம் இருப்பதை அறிந்திருக்கலாமாயினும், அத்தகைய இருவரில் ஒவ்வொருவருக்கும் முதல் ஒப்பந்தத்தின்படி மூன்றாமவர்பாலுள்ள கடப்பாடு அந்த இரண்டாம் ஒப்பந்தம் இருப்பதால் ஊறுபடுவதில்லை.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவரும் 'ஆ' என்பவரும் கூட்டாகவும் தனித்தனியாகவும் கடப்பாடுடையவர்களாக 'இ' என்பவருக்கு ஒரு கடனுறுதிச்சீட்டை எழுதிக்கொடுக்கிறார்கள். உண்மையில் அதை 'அ', 'ஆ'வின் பிணையராக எழுதிக் கொடுக்கிறார். மற்றும் இது 'இ' க்கு அந்தச் சீட்டு எழுதப்படும் சமயத்திலேயே தெரியும். 'இ' க்குத் தெரிந்தே 'அ', 'ஆ' வுக்கு பிணையராக அந்தச் சீட்டை எழுதிக் கொடுத்தார் என்ற உண்மை விவரம் 'அ'க்கு எதிராக 'இ' சீட்டின் பேரில் தொடரும் உரிமைவழக்கிற்கு மறுமொழியாகாது.

ஒப்பந்தத்தின் வரையீடுகளில் மாறுதல் செய்வதால் பிணையர் விடுவிப்பு அடைதல்.

133. முதன்மைக் [1][கடன்பெறுநரு]க்கும் கடன்தருநருக்கு மிடையேயான ஒப்பந்தத்தின் வரையீடுகளில் பிணையருடைய இசைவில்லாமல் செய்யப்பட்ட மாறுதல் எதுவும், அந்த மாறுதலுக்குப் பிந்திய நடவடிக்கைகளைப் பொறுத்து அந்தப் பிணையரை விடுவிக்கும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'இ' என்பவரின் வங்கியில் மேலாளர் என்ற முறையில் 'ஆ' என்பவரின் நடத்தைக்காக 'இ' க்கு 'அ' என்பவர் பிணையராகிறார். பிற்பாடு 'அ' வின் இசைவின்றி 'ஆ' வும் 'இ' யும் 'ஆ' வின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமென்றும் அதிகப்பற்றுகளால் (overdrafts) ஏற்படும் இழப்புகளில் நான்கில் ஒருபங்குக்கு அவர் கடப்பாடுடையவராதல் வேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். 'ஆ' ஒரு வாடிக்கைக்காரரை அதிகப்பற்று பெற இசைவளிக்கிறார். ஆகவே வங்கி ஒரு பணத் தொகையை இழக்கிறது. 'அ' தமது இசைவின்றிச் செய்யப்பட்ட மாறுதலால் தமது பிணையப்பொறுப்பிலிருந்து (suretyship) விடுவிக்கப்படுகிறார். அதோடு இந்த இழப்பை ஈடுசெய்யக் கடப்பாடுடையவரல்லர்.

(ஆ) சட்டமன்றத்தின் சட்டம் ஒன்றினால் வரையறுக்கப்பட்ட கடமைகளைக் கொண்ட ஒரு பதவிக்கு 'இ' என்பவரால் அமர்த்தப்பட்ட 'ஆ' என்பவர் தவறாக நடக்கமாட்டார் என்று 'அ' என்பவர் 'இ' க்கு பொறுப்புறுதியளிக்கிறார். பிந்திய சட்டம் ஒன்றினால் அந்தப் பதவியின் தன்மை முக்கியமான அளவில் மாற்றப்படுகிறது. பிற்பாடு 'ஆ' தவறாக நடந்து கொள்கிறார். 'ஆ' வின் தவறான நடத்தையானது பின்வந்த சட்டத்தினால் ஊறுபடாத ஒரு கடமையைப் பொறுத்ததாக இருந்தபோதிலும், இந்த மாறுதல் காரணமாகத் தம் பொறுப்புறுதியின்படியான எதிர்காலக் கடப்பாட்டினின்றும் 'அ' விடுவிக்கப்படுகிறார்.

(இ) 'இ' என்பவர் சரக்குகளை விற்பதற்கு ஆண்டுச் சம்பளமொன்றின் பேரில் 'ஆ' என்பவரைத் தம்முடைய எழுத்தராக அமர்த்த உடன்படுகிறார். அத்தகைய எழுத்தர் என்ற முறையில் அவரால் பெறப்படுகிற பணங்களுக்கு உரியவாறு 'ஆ' கணக்கு ஒப்புவிப்பதற்காக 'இ' க்கு 'அ' என்பவர் பிணையராக ஆனதன் பேரில், பிற்பாடு 'அ' வுக்குத் தெரியாமல் அல்லது அவர் இசைவில்லாமல் 'இ' யும் 'ஆ' வும் குறிக்கப்பட்ட ஒரு சம்பளமாக அல்லாமல் 'ஆ' வினால் விற்கப்படும் சரக்குகளின் மேல் ஒரு தரகாக அவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்று உடன்படுகிறார்கள். 'ஆ' வின் பிந்திய தவறான நடத்தைக்கு 'அ' கடப்பாடுடையவரல்லர்.

(ஈ) கடனாக 'இ' என்பவரால் 'ஆ' என்பவருக்கு வழங்கப்பட்ட எண்ணெய் எதற்கும் ரூ. 3,000 வரை 'இ' க்கு 'அ' என்பவர் ஒரு தொடர்வுறும் பொறுப்புறுதியளிக்கிறார். பிற்பாடு 'ஆ' வுக்குப் பணமுடை ஏற்படுகிறது; 'அ' வுக்குத் தெரியாமலேயே, 'ஆ' வும் 'இ' யும், 'இ' உடனடியானபணத்திற்கு 'ஆ' வுக்குத் தொடர்ந்து எண்ணெய் கொடுத்து வருதல் வேண்டுமென்றும், செலுத்தங்கள் 'ஆ' வுக்கும் 'இ' க்குமிடையே அப்போதுள்ள கடன்களுக்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். இந்தப் புதிய ஏற்பாட்டிற்குப் பிறகு வழங்கப்பட்ட எந்தச் சரக்குகளுக்கும் 'அ' தம் பொறுப்புறுதியின்படி கடப்பாடுடையவரல்லர்.

(உ) 'இ' என்பவர் 'ஆ' என்பவருக்கு மார்ச்சு முதல் தேதியன்று ரூ. 5,000 கடன் தருவதாக ஒப்பந்தம் செய்துகொள்கிறார். 'அ' என்பவர் பணம் திருப்பிச் செலுத்துவதற்குப் பொறுப்புறுதியளிக்கிறார். 'இ' சனவரி முதல் தேதியன்று அந்த 5,000 ரூபாயை 'ஆ' வுக்குச் செலுத்துகிறார். மார்ச்சு முதல் தேதிக்கு முன்னதாகவே அந்தப் பணத்துக்காக 'இ', 'ஆ' வின்மேல் வழக்கிடக் கூடும் வகையில் ஒப்பந்தம் மாறுதல் செய்யப்பட்டுவிட்டதால், 'அ' தம் கடப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

முதன்மைக் கடன் பெறுநரின் விடுதலையாலோ விடுவிப்பாலோ பிணையர் விடுவிக்கப்படுதல்.

134. கடன்தருநருக்கும், முதன்மைக் கடன்பெறுநருக்கு மிடையேயான எந்த ஒப்பந்தத்தால் முதன்மைக் கடன்பெறுநர் விடுதலை செய்யப்படுகிறாரோ அந்த ஒப்பந்தத்தால் அல்லது கடன்தருநரின் எந்த ஒரு செய்கை அல்லது விடுகையின் சட்ட விளைவு முதன்மைக் கடன்பெறுநரின் விடுவிப்பாக இருக்கிறதோ அந்தச் செய்கை அல்லது விடுகையால், பிணையர் விடுவிக்கப்படுகிறார்.

---

1. 1917 ஆம் ஆண்டு 24 ஆம் சட்டத்தின் 2 ஆம் பிரிவினாலும் 1 ஆம் இணைப்பட்டியலினாலும் புகுத்தப்பட்டது.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'இ' என்பவரால் 'ஆ' என்பவருக்கு வழங்கப்பட வேண்டிய சரக்குகளுக்காக 'இ' க்கு 'அ' என்பவர் பொறுப்புறுதி அளிக்கிறார். 'இ', 'ஆ'வுக்கு சரக்குகள் வழங்குகிறார். ஆனால் பிறபாடு 'ஆ' பணமுடைக்கு ஆளாகி ('இ' உள்ளடங்கலாக) தம் கடன் தருநர்களுடன் அவர்களது கோரிக்கைகளிலிருந்து தாம் விடுவிக்கப்படுவதற்கு மறுபயனாகத் தம் சொத்தை அவர்களுக்கு உரிமையளிப்பு செய்வதாக ஒப்பந்தம் செய்து கொள்கிறார். இங்கு 'இ'யுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் தமது கடனிலிருந்து 'ஆ' விடுதலை செய்யப்படுகிறார். மற்றும் 'அ' தமது பிணையத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

(ஆ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருடன் 'அ'வின் நிலத்தில் அவுரிப்பயிரை விளைவித்து அதை 'ஆ'வுக்கு ஒரு குறிப்பிட்ட விலைக்கு ஒப்புவிப்பதாக ஒப்பந்தம் செய்து கொள்கிறார்; மற்றும் இந்த ஒப்பந்தத்தை 'அ' நிறைவேற்றுவதற்கு 'இ' என்பவர் பொறுப்புறுதியளிக்கிறார். 'அ'வின் நிலத்தின் பாசனத்திற்குத் தேவையான ஒரு நீரோடையை 'ஆ' திசை திருப்பிவிட்டு அதனால் அவர் அவுரிப் பயிர்செய்வதைத் தடுத்துவிடுகிறார். 'இ' அவரது பொறுப்புறுதியின் படி இனிமேலும் கடப்பாடுடையவரல்லர்.

(இ). 'அ' என்பவர், 'ஆ' என்பவருடன் தேவைப்பட்ட மரத்தை 'ஆ' வழங்க ஓர் உடன்படுகைக் காலத்திற்குள் குறிக்கப்பட்ட ஒரு தொகைக்கு 'அ', 'ஆ' வுக்கு ஒரு வீட்டைக் கட்டித் தர ஒப்பந்தம் செய்து கொள்கிறார். இந்த ஒப்பந்தத்தை 'அ' நிறைவேற்றுவதற்கு 'இ' என்பவர் பொறுப்புறுதியளிக்கிறார். 'ஆ' மரம் வழங்காது விடுகிறார். 'இ' தம் பிணையத்திலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

கடன் தருநர் முதன்மைக் கடன் பெறுநருடன் கடன்தீர்வு உடன்பாடு செய்துகொள்ளும் போதோ அவருக்குக்காலத்தவணை தரும்போதோ அல்லது அவர் மீது வழக்குப் போடாதிருக்க உடன்படும்போதோ பிணையர் விடுவிப்பு அடைதல்.

135. கடன்தருநருக்கும், முதன்மைக் கடன்பெறுநருக்குமிடையேயான எந்த ஒப்பந்தத்தின்படி கடன்தருநர், முதன்மைக் கடன்பெறுநருடன் கடன்தீர்வு உடன்பாடு செய்துகொள்கிறாரோ அல்லது அவருக்குக் காலத்தவணை தருவதாக அல்லது அவர்மீது வழக்கிடாமலிருப்பதாக வாக்குறுதியளிக்கிறாரோ, அந்த ஒப்பந்தம் பிணையரை விடுவிக்கும், அத்தகைய ஒப்பந்தத்துக்கு அந்தப் பிணையர் இசைவு அளித்தாலன்றி.

முதன்மைக் கடன் பெறுநருக்குக் காலத்தவணை தருவத்ாகமூன்றாமவருடன் உடன்பாடு செய்துகொள்ளப்படும்போது பிணையர் விடுவிக்கப்படமாட்டார்

136. முதன்மைக் கடன்பெறுநருக்குக் காலத்தவணை தருவதாகக் கடன்தருநர் முதன்மைக் கடன்பெறுநருடனல்லாமல் மூன்றாமவர் ஒருவருடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளுமிடத்து, பிணையர் விடுவிக்கப்படமாட்டார்.

எடுத்துக்காட்டு.

'ஆ' என்பவருக்குப் பிணையராக 'அ' என்பவரால் எழுதிக் கொடுக்கப்பட்டு, 'ஆ'வினால் ஏற்கப்பட்ட கெடுகடந்த மாற்றுச் சீட்டை உடையவரான 'இ' என்பவர் 'க' என்பவரிடம் 'ஆ'வுக்குக் காலத்தவணை தருவதாக ஒப்பந்தம் செய்துகொள்கிறார். 'அ' விடுவிக்கப் படமாட்டார்.

கடன்தருநர் வழக்கிடாது பொறுத்திருப்பது பிணையரை விடுவிக்காது.

137. கடன்தருநர் முதன்மைக் கடன்பெறுநரின் மீது வழக்கிடாது அல்லது அவருக்கெதிராக வேறு தீர்வழி எதையும் நடைமுறைப்படுத்தாது பொறுத்திருத்தல் மட்டுமே, பொறுப்புறுதியில் மாறான வகைமுறை எதுவும் இல்லாதிருக்கையில் பிணையரை விடுவிக்காது.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவரால் பொறுப்புறுதியளிக்கப்பட்ட ஒரு கடனை 'இ' என்பவருக்கு 'ஆ' என்பவர் கொடுக்கவேண்டியிருக்கிறது. அந்தக் கடன் செலுத்தப்படவேண்டியதாகிறது. கடன் செலுத்தப்பட வேண்டியதான பிறகு ஓராண்டுக்காலம், 'இ'. 'ஆ'வின் மீது வழக்கிடவில்லை. "அ" தமது பிணையத்திலிருந்து விடுவிக்கப்படமாட்டார்.

138. உடன் பிணையர்கள் இருக்குமிடத்து, கடன் தருநரால் அவர்களிலொருவர் விடுதலை செய்யப்படுவதானது மற்றவர்களை விடுவிக்கவோ, அவ்வாறு விடுதலை செய்யப்பட்ட பிணையரை மற்றப் பிணையர்கள்மாட்டு அவருக்குள்ள பொறுப்பிலிருந்து விடுவிக்கவோ செய்யாது. ஓர் உடன் பிணையரின் விடுதலை மற்றவர்களை விடுவிப்பதில்லை.

139. கடன்தருநர், பிணையரின் உரிமைகளுக்கு முரணாகயிருக்கிற செய்கை எதையும் செய்து அல்லது பிணையர் மாட்டுத் தமக்குள்ள கடமைப்படி செய்யத் தேவைப்படுகிற செய்கை எதையும் செய்யாது விடுத்து, மற்றும் அதனால் முதன்மைக் கடன் பெறுநருக்கெதிராகப் பிணையருக்கேயுள்ள இறுதியான தீர்வழி பழுதுபடுமானால் பிணையர் விடுவிக்கப் படுகிறார். பிணையரது இறுதியான தீர்வழியைப் பழுதுபடுத்துகிற கடன் தருநரின் செய்கை அல்லது விடுகையினால் பிணையர் விடுவிக்கப் படுதல்.

எடுத்துக்காட்டுகள்

(அ). வேலையானது குறிப்பிட்ட கட்டங்களை அடையும்போது தவணைகளில் செலுத்தப்படவேண்டிய குறித்த ஒரு தொகைக்காக 'இ' என்பவருக்கு ஒரு கப்பலைக் கட்டித் தருவதாக 'ஆ' என்பவர் ஒப்பந்தம் செய்கிறார். ஒப்பந்தம் 'ஆ'வினால் முறையாக நிறைவேற்றப்படுவதற்காக 'இ'க்கு 'அ' என்பவர் பிணையராகிறார். 'அ'வுக்குத் தெரியாமல், 'இ', 'ஆ'வுக்குக் கடைசி இரண்டு தவணைகளுக்கு முற்செலுத்தம் செய்துவிடுகிறார். இந்த முற்செலுத்தத்தினால் 'அ' விடுவிக்கப்படுகிறார்.

(ஆ). 'ஆ' வின் அறைகலன்களை (Furniture) விற்பனை செய்யும் அதிகாரச் சிட்டுடன் 'ஆ' என்பவராலும், 'ஆ'விற்குப் பிணையராக 'அ' என்பவராலும் கூட்டாகவும் தனித்தனியாகவும் கடப்பாடுடையவர்களாக 'இ' என்பவருக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட ஒரு கடனுறுதிச் சிட்டின் பிணையத்தின் பேரில், 'இ', 'ஆ'வுக்குப் பணம் கடன் கொடுக்கிறார். அந்த அதிகாரச் சிட்டு, அறைகலன்களை விற்று அந்த விற்று முதலை அந்தச் சிட்டினைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்த 'இ'க்கு அதிகாரமளிக்கிறது. பின்னர் 'இ' அறைகலன்களை விற்கிறார். ஆனால் அவர் தவறாக நடந்து கொண்டதாலும், வேண்டுமென்றே கவனமின்றியிருந்ததாலும் ஒரு குறைந்த தொகை மட்டுமே வசூலாகிறது. சிட்டின் மீதான கடப்பாட்டினின்றும் 'அ' விடுவிக்கப்படுகிறார்.

(இ). 'அ' என்பவர் 'க' என்பவரை 'ஆ' என்பவரிடம் தொழில் பயிலுநராக இருக்கச்செய்து, 'க' நம்பிக்கைக்கு உரியவராயிருப்பாரென்று 'ஆ'வுக்குப் பொறுப்புறுதியளிக்கிறார். 'க' பணத்தைக் குறைவின்றிச் சரியாக வைத்துக்கொள்வதைக் குறைந்தது திங்களுக்கு ஒரு முறையாவது பார்த்துக் கொள்வதாக 'ஆ' தம் பங்கில் வாக்குறுதி அளிக்கிறார். வாக்குறுதி கொடுத்தபடி இதைச்செய்யாது 'ஆ' விட்டுவிடுகிறார். 'க' பணத்தைக் கையாடல் செய்கிறார். 'அ', 'ஆ'வுக்கு அவரது பொறுப்புறுதியின் பேரில் கடப்பாடுடையவரல்லர்.

140. பொறுப்புறுதி பெற்றிருக்கிற ஒரு கடன் கொடுபட வேண்டியதாகியிருக்கிறவிடத்து அல்லது பொறுப்புறுதி பெற்றிருக்கிற கடமை ஒன்றை முதன்மைக் கடன்பெறுநர் நிறைவேற்றத் தவறுமிடத்து, அவர் கடப்பாடுற்றிருக்கிறவற்றையெல்லாம் செலுத்தியதன் பேரில் அல்லது நிறைவேற்றியதன் பேரில் பிணையர், கடன்தருநர் முதன்மைக் கடன்பெறுநருக்கெதிராகப் பெற்றிருந்த உரிமைகள் எல்லாவற்றையும், சூட்டப் பெறுகிறார். செலுத்துகை அல்லது நிறைவேற்றுகையின்பேரில் பிணையருக்குள்ள உரிமைகள்.

141. கடன்தருநர், பிணைய ஒப்பந்தம் செய்து கொண்ட சமயத்தில் முதன்மைக் கடன்பெறுநருக்கெதிராகப் பெற்றிருக்கிற ஒவ்வொரு பிணையத்தின் நன்மைக்கும் பிணையர் அத்தகைய பிணையம் இருப்பதை அறிந்திருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, உரிமையுடையவராவார்; மற்றும் கடன்தருநர் அத்தகைய பிணையத்தை இழப்பாரானால் அல்லது பிணையரின் இசைவின்றிக் கைவிடுவாரானால், அந்தப் பிணையத்தின் மதிப்பின் அளவு எவ்வளவோ அவ்வளவுக்கு பிணையர் விடுவிக்கப்படுகிறார். கடன் தருநர் பெற்றுள்ள பிணையங்களால் நன்மையடைய பிணையருக்குள்ள உரிமை.

எடுத்துக்காட்டுகள்

(அ). 'இ' என்பவர் 'அ' என்பவரின் பொறுப்புறுதியின் பேரில் 'ஆ' என்கிற தம் வாடகைக்காரருக்கு ரூபாய் 2,000 கடன் கொடுக்கிறார். அத்துடன் 'ஆ' வின் அறைகலன்களின் அடைமானம் மூலம் இந்த 2,000 ரூபாய்க்கு மேற்கொண்டு ஒரு பிணையமும் 'இ' கொண்டிருக்கிறார். 'இ' அடைமானத்தை அறவு செய்கிறார். 'ஆ' நொடித்துப் போனவராகிறார்; மற்றும், 'இ', 'அ' வின்மீது அவரது பொறுப்புறுதியின் அடிப்படையில் வழக்கிடுகிறார். அறைகலன்களின் மதிப்புத்தொகை அளவுக்கு 'அ' கடப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

(ஆ). 'இ' என்கிற கடன் தருநரால் 'ஆ' என்பவருக்குக் கொடுக்கப்பட்ட கடன், தீர்ப்பாணை ஒன்றினால் காப்புறுதி செய்யப்பட்டிருந்தும் அவர் 'அ' என்பவரிடமிருந்து அந்தக் கடனுக்காக ஒரு பொறுப்புறுதியையும் பெறுகிறார். பிற்பாடு, தீர்ப்பாணையை நிறைவேற்றும் நடவடிக்கையில் 'ஆ'வின் சரக்குகளை 'இ' எடுத்துக்கொண்டு அதன் பிறகு நிறைவேற்றுகையை 'அ'வுக்குத் தெரியாமல் நிறுத்திக்கொள்கிறார். 'அ' விடுவிக்கப்படுகிறார்.

(இ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்குப் பிணையர் என்கிற முறையில் 'இ' என்பவரிடமிருந்து 'ஆ' பெற்ற ஒரு கடனுக்குப் பிணையமாக 'ஆ'வுடன் கூட்டாக ஒரு முறியை 'இ' க்கு எழுதிக் கொடுக்கிறார். பிற்பாடு அதே கடனுக்காக 'ஆ'விடமிருந்து 'இ' மேலுமொரு பிணையத்தைப் பெறுகிறார். பின்னர் 'இ' மேற்கொண்டு வாங்கின பிணையத்தைக் கைவிட்டுவிடுகிறார். 'அ' விடுவிக்கப்படமாட்டார்.

திரித்துக்கூறுகை மூலம் பெறப்படும் பொறுப்புறுதி செல்லத்தக்கதன்று.

142. நடவடிக்கையின் ஒரு முக்கியமான பகுதியைப் பொறுத்துக் கடன்தருநரால் செய்யப்பட்ட அல்லது அவருக்குத் தெரிந்தும் அவருடைய இசைவுடனும் செய்யப்பட்ட திரித்துக்கூறுகை மூலமாகப் பெறப்பட்டிருக்கிற பொறுப்புறுதி எதுவும் செல்லத்தக்கதன்று.

மறைத்து வைப்பதன் மூலம் பெறப்படும் பொறுப்புறுதி செல்லத்தக்கதன்று.

143. முக்கியமான விவரம் ஒன்றைப்பொறுத்து வாளாவிருப்பதன் மூலம், கடன் தருநரால் பெறப்பட்ட பொறுப்புறுதி எதுவும் செல்லத்தக்கதன்று.

எடுத்துக்காட்டுகள்

(அ). 'அ' என்பவர், 'ஆ' என்பவரைத் தமக்காகப் பணம் வசூல் செய்ய எழுத்தராக அமர்த்திக் கொள்கிறார். அவருடைய வரவுகளில் சிலவற்றிற்கு 'ஆ' கணக்குக் கொடுக்கத் தவறுகிறார்; மற்றும் அதன் விளைவாக 'அ' அவரை முறையாகக் கணக்குக் கொடுப்பதற்காகப் பிணையம் தரும்படி கேட்கிறார். 'ஆ' முறையாகக் கணக்குக் கொடுப்பதற்காக 'இ' என்பவர் பொறுப்புறுதியை அளிக்கிறார். 'அ', 'ஆ'வின் முந்தைய நடத்தையைப் பற்றி 'இ' க்குத் தெரியப்படுத்தவில்லை. பிற்பாடும் 'ஆ' தவறு செய்கிறார். பொறுப்புறுதி செல்லத்தக்கதன்று.

(ஆ). 'ஆ' என்பவருக்கு 'இ' என்பவர் கொடுக்க வேண்டிய 2,000டன் அளவு வரையிலான இரும்புக்கான பணத்தைச் செலுத்துவதற்கு 'இ' க்கு 'அ' என்பவர் பொறுப்புறுதியளிக்கிறார். 'ஆ' ஒரு டன்னுக்குச் சந்தை விலையை விட ஐந்து ரூபாய் மேற்கொண்டு தருதல் வேண்டுமென்றும், அந்த மிகைத்தொகை பழைய கடன் ஒன்றைத் தீர்ப்பதில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் 'ஆ'வும் 'இ'யும் தனிப்பட்ட முறையில் உடன்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த உடன்பாடு 'அ'விடமிருந்து மறைக்கப்படுகிறது. 'அ' பிணையர் என்ற முறையில் கடப்பாடுடையவர் அல்லர்.

உடன் பிணையர் சேர்ந்து கொள்கிற வரையில் கடன்தருநர் பொறுப்புறுதியின் மீது செயற்படலாகாது என்ற ஒப்பந்தத்தின் மீதான பொறுப்புறுதி.

144. பொறுப்புறுதியில் மற்றோர் ஆள் உடன் பிணையராகச் சேரும்வரைக் கடன்தருநர் அதன்மீது செயற்படலாகாது என்ற ஒப்பந்தத்தின் பேரில் ஓர் ஆள் பொறுப்புறுதியளிக்கிறவிடத்து, அந்தப் பொறுப்புறுதியானது அந்த மற்றைய ஆள் சேராவிட்டால், செல்லுபடியாகாது.

145. ஒவ்வொரு பொறுப்புறுதி ஒப்பந்தத்திலும் முதன்மைக் கடன்பெறுநர் பிணையருக்கு ஈடு செய்வதற்கான ஓர் உட்கிடை வாக்குறுதி இருக்கிறது; மற்றும் பிணையர் பொறுப்புறுதியின்படி முறையாக அவர் செலுத்தியிருக்கிற தொகை எதுவாயினும் அதை முதன்மைக் கடன்பெறுநரிடமிருந்து திரும்பப் பெற உரிமையுடையவராவார்; ஆனால், அவர் முறையின்றிச் செலுத்தியிருக்கிற தொகைகள் எவற்றையும் அல்ல. பிணையருக்கு ஈடு செய்வதாக உட்கிடை வாக்குறுதி.

எடுத்துக்காட்டுகள்

(அ). 'ஆ' என்பவர் 'இ' என்பவரிடம் கடன்பட்டிருக்கிறார் மற்றும் 'அ' என்பவர் அந்தக் கடனுக்குப் பிணையராக இருக்கிறார். 'இ', 'அ'வைத் தொகை செலுத்தும்படி கோருகிறார்; மற்றும் அவர் மறுப்பதன் பேரில், அவர் மீது தொகைக்காக வழக்குத் தொடர்கிறார். எதிர்வழக்காடத் தமக்குத் தகவான காரணங்கள் இருப்பதன் பேரில் 'அ' அவ்வாறு செய்கிறார். ஆனால், அவர் கடன் தொகையைச் செலவுத்தொகையுடன் செலுத்தக் கட்டாயப்படுத்தப்படுகிறார் செலவுத்தொகைக்காகத் தம்மால் செலுத்தப்பட்ட தொகையையும் அத்துடன் முதன்மைக் கடனையும் 'ஆ' விடமிருந்து வசூலிக்க அவருக்கு உரிமையுண்டு.

(ஆ). 'இ' என்பவர் 'ஆ' என்பவருக்குப் பணத்தொகை ஒன்றைக் கடனாகக் கொடுக்கிறார். மற்றும் 'அ' என்பவர் 'ஆ' வின் வேண்டுகோளின்படி 'அ' வின் பெயரில் 'ஆ' வினால் எழுதித் தரப்பட்ட ஒரு மாற்றுச்சீட்டை அந்தத் தொகைக்குப் பிணையமாக ஏற்றுக்கொள்கிறார், அந்தச் சீட்டைக் கொண்டிருப்பவரான 'இ', 'அ'வை அதற்கான பணத்தைச் செலுத்தும்படி கோருகிறார்; மற்றும் 'அ' செலுத்த மறுப்பதன் பேரில் அவர்மீது அந்தச் சீட்டின் பேரில் வழக்கிடுகிறார். உரிமைவழக்கில் எதிர்வழக்காட தகவான காரணங்கள் இல்லாதிருந்தும், 'அ' அவ்வாறு செய்கிறார், மற்றும் சீட்டின் தொகையையும் செலவுத்தொகையையும் செலுத்த வேண்டியதாகிறது. 'ஆ' விடமிருந்து சீட்டின் தொகையை வசூலிக்க அவருக்கு உரிமையுண்டு; ஆனால், செலவுக்காகச் செலுத்திய தொகையை அன்று; ஏனென்றால் வழக்கில் எதிர்வழக்காட அவருக்கு உண்மையான காரணம் எதுவும் இல்லை.

(இ). 'ஆ' என்பவருக்கு 'இ' என்பவர் வழங்க வேண்டிய அரிசிக்குச் செலுத்தப்படவேண்டிய பணச்செலுத்தத்துக்காக, ரூபாய் 2,000 வரை 'இ'க்கு 'அ' என்பவர் பொறுப்புறுதியளிக்கிறார். 'ஆ' வுக்கு 'இ' ரூபாய் 2,000-க்குக் குறைவான தொகைக்கே அரிசி வழங்குகிறார். ஆனால், வழங்கப்பட்ட அரிசிக்காக 'அ' தொகை ரூபாய் 2,000 செலுத்தியதைப் பெற்றுக்கொள்கிறார். உள்ளபடி வழங்கப்பட்ட அரிசியின் விலைக்கு அதிகமாக 'ஆ' விடமிருந்து வசூலிக்க 'அ' வுக்கு உரிமையில்லை.

146. ஒரே கடனுக்கு அல்லது கொடுக்கப்படவேண்டிய ஒரே தொகைக்கு (duty) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள், கூட்டாக அல்லது தனித்தனியாகக் கடப்பாடுடையவர்களாகவும் ஒரே ஒப்பந்தப்படியாயினும் அல்லது வெவ்வேறு ஒப்பந்தங்களின்படியாயினும், மற்றும் ஒருவருக்கொருவர் தெரிந்தாயினும் தெரியாமலாயினும், உடன் பிணையர்களாக இருக்குமிடத்து, மாறான ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில் அந்த உடன் பிணையர்கள் முழுக் கடனுக்கு அல்லது அதில் எந்தப் பகுதி முதன்மைக் கடன் பெறுநரால் செலுத்தப்படாமலிருக்கிறதோ அந்தப் பகுதிக்கு ஒவ்வொருவரும் சமபங்கு செலுத்த அவர்களுக்கிடையே கடப்பாடுடையவர்களாவர். உடன் பிணையர்கள் சமமாகப் பங்களிப்புச் செய்யக் கடப்பாடுடையவர்கள்.

எடுத்துக்காட்டுகள்

(அ). 'உ' என்பவருக்கு 'ஈ' என்பவரால் கடனாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் மூவாயிரத்துக்கு 'அ', 'ஆ' மற்றும் 'இ' என்பவர்கள் பிணையர்களாயிருக்கிறார்கள். 'உ' பணம் செலுத்தத் தவறிவிடுகிறார். 'அ', 'ஆ' மற்றும் 'இ' தம்மைப் பொறுத்தமட்டில் ஆளுக்கு ரூபாய் 1,000 செலுத்தக் கடப்பாடுடையவராவர்.

(ஆ). 'உ' என்பவருக்கு 'ஈ' என்பவரால் கடனாகக் கொடுக்கப்பட்ட தொகை ரூபாய் 1,000 க்கு 'அ', 'ஆ' மற்றும் 'இ' என்பவர்கள் பிணையர்களாயிருக்கிறார்கள். மற்றும், 'அ' ஒரு கால் பகுதிக்கும் 'ஆ' ஒரு கால் பகுதிக்கும் 'இ' அரைப் பகுதிக்கும் பொறுப்புடையவராக இருக்கவேண்டும் என்று 'அ', 'ஆ' மற்றும் 'இ' க்கிடையே ஓர் ஒப்பந்தம் இருக்கிறது. 'உ' பணம் செலுத்தத் தவறுகிறார். பிணையர்களைப் பொறுத்தமட்டில் 'அ' ரூபாய் 250—ம், 'ஆ' ரூபாய் 250-ம் 'இ' ரூபாய் 500—ம் செலுத்தக் கடப்பாடுடையவர்களாவர்.

வெவ்வேறு தொகைகள் செலுத்தக் கட்டுப் பட்டிருக்கிற உடன் பிணையர் களுடையகடப்பாடு

147. வெவ்வேறு தொகைகள் செலுத்தக் கட்டுப்பட்டிருக்கிற உடன் பிணையர்கள் தத்தம் கடமைப் பொறுப்புகளின் வரம்புகள் இடமளிக்கின்ற அளவுக்குச் சமமாகச் செலுத்தக் கடப்பாடுடையவர்களாவார்கள்.

எடுத்துக்காட்டுகள்

(அ). 'உ' என்பவருக்கு முறையாக 'ஈ', கணக்குக் கொடுக்க வேண்டும் என்ற வரைக்கட்டுக்குட்பட்டு, 'ஈ' என்பவருக்கு 'அ', 'ஆ' மற்றும் 'ஈ' என்பவர்கள், பிணையர்கள் என்ற முறையில் ஒவ்வொருவரும் வெவ்வேறு தண்டம் கொடுப்பதாக, அதாவது தண்டமாக 'அ' 10,000 ரூபாயும், 'ஆ' 20,000 ரூபாயும், 'இ' 40,000 ரூபாயும் கொடுப்பதாக மூன்று தனித்தனியான முறிகள் எழுதிக் கொடுக்கிறார்கள். 'ஈ' ரூபாய் 30,000 அளவுக்குத் தவறுகை செய்கிறார். 'அ', 'ஆ' மற்றும் 'இ' ஒவ்வொருவரும் ரூ. 10,000 செலுத்தக் கடப்பாடுடையவராவர்.

(ஆ). 'உ' என்பவருக்கு முறையாக 'ஈ, கணக்குக் கொடுக்க வேண்டும் என்ற வரைக்கட்டுக்குட்பட்டு 'ஈ' என்பவருக்கு'அ', 'ஆ மற்றும் 'இ' என்பவர்கள் பிணையர்கள் என்ற முறையில் ஒவ்வொருவரும் வெவ்வேறு தண்டம் கொடுப்பதாக, அதாவது தண்டமாக 'அ' 10,000 ரூபாயும், 'ஆ' 20,000 ரூபாயும், 'இ' 40,000 ரூபாயும் கொடுப்பதாக மூன்று தனித்தனியான முறிகள் எழுதிக்கொடுக்கிறார்கள். 'ஈ' ரூபாய் 40,000 அளவுக்குத் தவறுகை செய்கிறார். 'அ' 10,000 ரூபாயும், 'ஆ', 'இ' ஆகிய ஒவ்வொருவரும் 15,000 ரூபாயும் செலுத்தக் கடப்பாடுடையவர்களாவர்.

(இ). 'உ' என்பவருக்கு முறையாக 'ஈ' கணக்குக் கொடுக்க வேண்டும் என்ற வரைக்கட்டுக்குட்பட்டு 'ஈ' என்பவருக்கு 'அ','ஆ' மற்றும் 'இ' என்பவர்கள் பிணையர்கள் என்ற முறையில் 'ஆ', 'இ' என்பவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு தண்டம் கொடுப்பதாக, அதாவது, தண்டமாக 'அ' 10,000 ரூபாயும், 'ஆ' 20,000 ரூபாயும், 'இ' 40,000 ரூபாயும் கொடுப்பதாக மூன்று தனித்தனியான முறிகள் எழுதிக் கொடுக்கிறார்கள். 'ஈ' ரூபாய் 70,000 அளவுக்குத் தவறுகை செய்கிறார். 'அ', 'ஆ' மற்றும் 'இ' ஒவ்வொருவரும் அவரவர் முறியின்படியான முழுத் தண்டத் தொகையைச் செலுத்தியாக வேண்டும்.

அத்தியாயம் IX

ஒப்படையம் பற்றி

148. 'ஒப்படையம்' என்பது, ஓர் ஆளால் மற்றொருவரிடம் பொருள்களை ஏதாவதொரு நோக்கத்துக்காக, அந்த நோக்கம் நிறைவேறியதும் அவை திருப்பித்தரப்படுதல் வேண்டும் அல்லது ஒப்புவிக்கும் ஆளுடைய பணிப்புரைகளின்படி வேறுவிதமாக அவற்றுக்கு வகைசெய்யப்படுதல் வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் பேரில் ஒப்புவித்தலாகும்; பொருள்களை ஒப்புவிக்கும் ஆள் 'ஒப்படையம்செய்குநர்' என்று வழங்கப்படுவார். அவை எந்த ஆளிடம் ஒப்புவிக்கப்படுகின்றனவோ அந்த ஆள் 'ஒப்படையம் பெறுநர்' என்று வழங்கப்படுவார். ''ஒப்படையம்'' ''ஒப்படையம் செய்குநர்'' ''ஒப்படையம் பெறுநர்'' ஆகியவற்றுக்குப் பொருள் வரையறை,

விளக்கம்.—ஓர் ஆள் மற்றொருவருடைய பொருள்களை ஏற்கெனவே தம் உடைமையில் வைத்திருந்து அவற்றை ஒப்படையம் பெறுநர் என்ற முறையில் வைத்திருக்க ஒப்பந்தம் செய்துகொள்கிறாரென்றால், அவர் அதன்மூலம் ஒப்படையம் பெறுநர் ஆகிறார்; மற்றும் அவை ஒப்படையம் என்ற முறையில் ஒப்புவிக்கப்படாமலிருக்கலாமாயினும், சொந்தக்காரர் அத்தகைய பொருள்களை ஒப்படையம் செய்குநர் ஆகிறார்.

149. கருதப்பட்ட ஒப்படையம் பெறுநரின் உடைமையில் அல்லது அவர் சார்பாக பொருள்களைக் கொண்டிருப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனும் ஆளின் உடைமையில் அவற்றை வைக்கும் விளைவையுடைய எதனையும் புரிவதன் மூலம் ஒப்படையம் பெறுநரிடம் ஒப்புவித்தலானது செய்யப்படலாம். ஒப்படையம் பெறுநரிடம் ஒப்புவித்தல் எவ்வாறு செய்யப்படுகிறது.

150. ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களில் ஒப்படையம்செய்குநருக்குத் தெரிந்திருக்கிறவையும் அவற்றைப் பயன்படுத்துவதைப் பெருமளவில் பாதிக்கிறவையும் அல்லது ஒப்படையம் பெறுநரை இயல்புமீறிய நேரிடர்களுக்கு ஆளாக்குபவையுமான குறைகளை ஒப்படையம்செய்குநர், ஒப்படையம் பெறுநருக்கு வெளிப்படுத்தக் கட்டுப்பட்டவராவார்; அவர் அவ்வாறு வெளிப்படுத்தவில்லை என்றால், ஒப்படையம்பெறுநருக்கு அத்தகைய குறைகளிலிருந்து நேரடியாக உண்டாகிற சேதத்திற்கு அவர் பொறுப்பாளியாவார். ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களிலுள்ள குறைகளை வெளிப்படுத்துதல் ஒப்படையம் செய்குநரின் கடமை.

பொருள்கள் வாடகைக்காக ஒப்படையம் செய்யப்படுமானால், அத்தகைய குறைகள் ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களில் இருப்பது ஒப்படையம் செய்குநருக்குத் தெரிந்திருந்தாலும் சரி, தெரியாமலிருந்தாலும் சரி, அவர் அத்தகைய சேதத்திற்குப் பொறுப்பாளியாவார்.

எடுத்துக்காட்டுகள்

(அ) 'அ' என்பவர் பொல்லாதது என்று தமக்குத் தெரிந்திருக்கிற ஒரு குதிரையை 'ஆ' என்பவருக்கு இரவல் கொடுக்கிறார். அந்தக் குதிரை பொல்லாதது என்ற உண்மை விவரத்தை அவர் வெளிப்படுத்தவில்லை. அக் குதிரை கட்டுமீறி ஓடிவிடுகிறது. 'ஆ' தூக்கியெறியப்பட்டுக் காயமடைகிறார். 'அ' உற்ற சேதத்திற்காக 'ஆ' விற்குப் பொறுப்பாளி ஆவார்.

(ஆ). 'ஆ' என்பவருடைய வண்டியை 'அ' என்பவர் வாடகைக்கு எடுக்கிறார். வண்டி பாதுகாப்பற்றதாகயிருக்கிறது. ஆனாலும் 'ஆ' விற்கு அது பற்றித் தெரியாதிருக்கிறது. அதன் காரணமாக 'அ' காயமடைகிறார். 'அ' வுக்கு ஏற்பட்ட காயத்திற்கு 'ஆ' பொறுப்பாளியாவார்.

ஒப்படையம் பெறுநர் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு.

151. ஒப்படையம் எல்லாவற்றிலும் ஒப்படையம் பெறுநர் தமக்கு ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்கள் பொறுத்து இயல்பாகவே அறிவார்ந்த மனிதர் ஒருவர் ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களைப்போன்ற அதே அளவும் தரமும் மதிப்பும் உடைய தமக்கே சொந்தமான பொருள்கள் பொறுத்து ஒத்த சூழ்நிலைகளில் எந்த அளவு பாதுகாப்பு மேற்கொள்வாரோ அந்த அளவு பாதுகாப்பு மேற்கொள்ளக் கட்டுப்பட்டவராவார்.

ஒப்படையம் செய்யப்பட்ட பொருளின் இழப்பு முதலிய வற்றிற்கு ஒப்படையம் பெறுநர் எப்போது கடப்பாடுடையவர் ஆகார்.

152. தனிப்பட்ட ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில், ஒப்படையம்பெறுநர் ஒப்படையம் செய்யப்பட்ட பொருள் பொறுத்து 151ஆம் பிரிவில் விவரிக்கப்பட்ட அளவு பாதுகாப்பு மேற்கொண்டிருக்கிறார் என்றால், அவர் அதன் இழப்புக்கோ அழிவுக்கோ சீர்கேட்டுக்கோ பொறுப்பாளி அல்லர்.

ஒப்படையம் பெறுநர் வரைக்கட்டுகளுக்கு முரணாகப்புரிந்த செயலால் ஒப்படையம் முடிவுறுத்தப்படுதல்.

153. ஒப்படையத்தின் வரைக்கட்டுகளுக்கு முரணான செயல் எதையும் ஒப்படையம் பெறுநர் ஒப்படையம்செய்யப்பட்ட சரக்குகள் பொறுத்துச் செய்வாரானால், ஒப்படையம்செய்குநரின் தெரிவின்பேரில் ஒப்படைய ஒப்பந்தமானது செல்லாததாக்கத்தக்கதாகும்.

எடுத்துக்காட்டு

'அ' என்பவர், 'ஆ' என்பவருக்கு அவரே ஏறிச் செல்வதற்காக ஒரு குதிரையை வாடகைக்குத் தருகிறார். 'ஆ' அக் குதிரையைத் தம் வண்டியில் பூட்டி ஓட்டுகிறார். இதுவே 'அ' வின் தெரிவின் பேரில் ஒப்படையத்தின் முடிவுறுத்தமாகும்.

ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களை அதிகாரமற்ற பயன்பாட்டுக்குள்ளாக்கும் ஒப்படையம் பெறுநரின் கடப்பாடு.

154. ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களைப் பொறுத்து ஒப்படையம் பெறுநர் ஒப்படைய வரைக்கட்டுகளின் படியல்லாத வகையில் பயன்படுத்தினால் அத்தகைய பயன்பாட்டினால் அல்லது பயன்பாட்டின்போது, அந்தப் பொருள்களுக்கு ஏற்படும் சேதம் எதற்கும் அவர் ஒப்படையம் செய்குநருக்குச் சரியீடு செய்வதற்குக் கடப்பாடுடையவராவார்.

எடுத்துக்காட்டுகள்

(அ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு அவரே ஏறிச் செல்வதற்கு மட்டும் ஒரு குதிரையை இரவல் கொடுக்கிறார். தம் குடும்ப உறுப்பினரான 'இ' என்பவரை அக் குதிரை மேல் ஏறிச் செல்வதற்கு 'ஆ' இசைவளிக்கிறார். 'இ' கவனத்துடன் ஏறிச்செல்கிறார்; ஆனால் தற்செயலாக அக் குதிரை விழுந்து காயமடைகிறது. அக் குதிரைக்கு ஏற்பட்ட காயத்திற்காக 'அ' வுக்குச் சரியீடு செய்வதற்கு 'ஆ' கடப்பாடுடையவராவார்.

(ஆ) காசிக்குச் செல்வதற்கென்ற வெளிப்படை நோக்கத்துடன் 'ஆ' என்பவரிடமிருந்து, கல்கத்தாவிலே ஒரு குதிரையை 'அ' என்பவர் வாடகைக்கு அமர்த்துகிறார். உரிய கவனத்துடன் 'அ' ஏறிச் செல்கிறார், ஆனால் காசிக்குச் செல்வதற்குப் பதில் கட்டாக் செல்கிறார். தற்செயலாக அக் குதிரை விழுந்து காயமடைகிறது. அக்குதிரைக்கு ஏற்பட்ட காயத்திற்காக 'ஆ' வுக்குச் சரியீடு செய்வதற்கு 'அ' கடப்பாடுடையவராவார்.

ஒப்படையம் செய்குநரின் இசைவுடன் அவருடைய பொருள்களை

155. ஒப்படையம்பெறுநர், ஒப்படையம்செய்குநரின் இசைவுடன், தம் சொந்தப் பொருள்களோடு ஒப்படையம் செய்குநருடைய பொருள்களையும் கலப்பாரானால், அவ்வாறு

ஒப்படையம் பெறுநரின் பொருளுடன்கலப்பதன் விளைவு.

உண்டான கலவையில், ஒப்படையம் செய்குநரும் ஒப்படையம் பெறுநரும் அவரவர் பங்குகளின் விகிதப்படி உரித்தம் உடையவராவார்கள்.

பொருள்கள் பிரித் தெடுக்க முடிகிற வையாயிருக்கிற போது ஒப்படையம் செய்குநரின் இசைவில்லாமல் உண்டான கலவையின் விளைவு.

156. ஒப்படையம் பெறுநர், ஒப்படையம் செய்குநரின் இசைவில்லாமல் தம் சொந்தப் பொருள்களோடு ஒப்படையம் செய்குநருடைய பொருள்களைக் கலப்பாரானால், மற்றும் அந் தப் பொருள்கள் பிரித்தெடுக்கக்கூடியனவாக அல்லது பகுக்கக் கூடியனவாகஇருக்குமானால், அந்தப் பொருள்களின் பேரிலுள்ள சொத்துரிமை அந்தந்தத் தரப்பினர்களிடமே இருக்கும்; ஆனால் பிரித்தெடுப்பதற்காக அல்லது பகுப்பதற்காக ஆகும் செலவையும் அந்தக் கலவையினால் உண்டாகும் எந்தச் சேதத்தையும் ஒப்படையம் பெறுநர் பொறுத்துக்கொள்ளக் கட்டுப்பட்டவராவார்.

எடுத்துக்காட்டு

ஒரு குறிப்பிட்ட அடையாளம் இடப்பட்ட 100 பொதிப் பஞ்சை 'ஆ' என்பவரிடம் 'அ' என்பவர் ஒப்படையம் செய்கிறார். 'அ'வின் இசைவில்லாமல், அந்த 100 பொதிகளுடன் வேறு அடையாளம் கொண்ட தமக்குச் சொந்தமான மற்றப் பொதிகளைக் கலந்துவிடுகிறார். 'அ', தம்முடைய 100 பொதிகளைத் திரும்பிப் பெற உரிமையுடையவராவார். மற்றும், பொதிகளைப் பிரித்தெடுப்பதற்கு ஆகும் செலவு எல்லாவற்றையும் இடையுறு வேறு சேதத்தையும் 'ஆ' பொறுத்துக் கொள்ளக் கட்டுப்பட்டவராவார்.

பொருள்கள் பிரித்து எடுக்க முடியா தனவாய் இருக் கும்போது ஒப் படையம் செய்கு நரின் இசைவு இல்லாமல் உண் டான கலவையின் விளைவு.

157. ஒப்படையம் பெறுநர், ஒப்படையம் செய்குநரின் இசைவில்லாமல்தம்சொந்தப்பொருள்களோடு ஒப்படையம்செய் குநருடைய பொருள்களை, ஒப்படையம் செய்யப்பட்ட பொருள் களை பிற பொருள்களிலிருந்து பிரித்தெடுத்துத் திரும்பவும் ஒப்புவிக்க முடியாத முறையில் கலந்து விடுகிறார் என்றால், பொருள்களின் இழப்புக்காக ஒப்படையம் பெறுநரால் சரியீடு செய்யப்படுவதற்கு ஒப்படையம் செய்குநர் உரிமை உடையவ ராவார்.

எடுத்துக்காட்டு

ரூ. 45 மதிப்புடைய, கேப் (caps) மாவுப் பீப்பாய் ஒன்றை 'அ' என்பவர் 'ஆ' என்பவரிடம் ஒப்படையம் செய்கிறார். 'அ'வின் இசைவில்லாமல் அந்த மாவை ஒரு பீப்பாய் ரூ. 25 மட்டுமே மதிப்புடைய தமக்குச் சொந்தமான நாட்டு மாவுடன் 'ஆ' கலந்து விடுகிறார். 'அ' அவரது மாவை இழந்ததற்காக 'ஆ' அவருக்குச் சரியீடு செய்ய வேண்டும்.

இன்றியமையாச் செலவுகள் ஒப்படையம் செய்குநரால் ஈடு செய்யப்படுதல்.

158. ஒப்படையவரைக் கட்டுகளின்படி ஒப்படையம் செய்கு நருக்காக ஒப்படையம் பெறுநர் பொருள்களை வைத்திருக்க வேண்டியோ எடுத்துச்செல்ல வேண்டியோ அவை பொறுத்து வேலை செய்ய வேண்டியோ இருக்குமிடத்தும் ஒப்படையம் பெறுநர் ஊதியம் எதுவும் பெற வேண்டியிராதிருக்குமிடத்தும் ஒப்படையம் செய்குநர் ஒப்படையம் பெறுநருக்கு அவர் ஒப்படையத்தின் பொருட்டுச் செய்யும்படி நேர்ந்த இன்றியமை யாச் செலவுகளை ஈடு செய்தல் வேண்டும்.

கைம்மாறின்றி இரவல் கொடுக்கப் பட்ட பொருள் களை மீண்டும் ஒப்படைத்தல்.

159. ஒரு பொருளைப் பயன்படுத்துவதற்காக இரவல் கொடுத்தவர், குறித்துரைக்கப்பட்ட ஒரு காலத்திற்கென அல்லது நோக்கத்திற்கென அவர் அதை இரவல் கொடுத்திருந்த போதிலும், அந்த இரவல் கைம்மாறின்றியிருக்குமானால், அப் பொருளைத் திருப்பித் தர வேண்டுமென்று எந்த நேரத் திலும் வேண்டுறுத்தலாம். ஆனால், குறித்துரைக்கப்பட்ட காலத்திற்கென அல்லது நோக்கத்திற்கென கொடுக்கப்பட்ட அத்தகைய இரவலை நம்பி இரவல் பெறுநர் ஒத்துக் கொண்ட

காலத்துக்கு முன்னதாகவே இரவல் பொருளைத் திருப்பித் தருவதானது, அந்த இரவலினின்றும் அவரால் உள்ளபடியே பெறப்பட்ட நன்மையைவிட அதிகமான இழப்பை அவருக்கு ஏற்படுத்தும் முறையில் செயற்பட்டிருக்கிறாரானால், இரவல்தருநர், திருப்பித் தருதலைக் கட்டாயப்படுத்துகிறாரென்றால், அவ்வாறு ஏற்பட்ட இழப்பு அவ்வாறு பெறப்பட்ட நன்மையைவிட எவ்வளவு அதிகமாக உள்ளதோ அவ்வளவு தொகைக்கு இரவல் பெறுநருக்கு ஈட்டுறுதி செய்தல் வேண்டும்.

காலம் முடிவடைந்ததன்பேரில் அல்லது நோக்கம் நிறைவேறியதன் பேரில் ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களைத் திருப்பிக் கொடுத்தல்.

160. ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களை அவை எவ்வளவு காலத்திற்கென ஒப்படையம் செய்யப்பட்டனவோ அந்தக் காலம் முடிவடைந்தவுடனே அல்லது எந்த நோக்கத்திற்காக அவை ஒப்படையம் செய்யப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறியவுடனே கோரப்படாமலேயே திருப்பித் தர வேண்டியது அல்லது ஒப்படையம் செய்குநரின் பணிப்புரைகளின்படி ஒப்புவிக்கவேண்டியது ஒப்படையம் பெறுநரது கடமையாகும்.

பொருள்கள் உரிய காலத்தில் திருப்பித் தரப்படாதபோது ஒப்படையம் பெறுநரின் பொறுப்பு.

161. ஒப்படையம் பெறுநரின் தவறுகையால் பொருள்கள் உரிய காலத்தில் திருப்பித்தரப்படவில்லை, ஒப்புவிக்கப்படவில்லை அல்லது தர முனையப்படவில்லை என்றால், அப்பொருள்களின் இழப்பு, அழிவு அல்லது சீர்கேடு எதற்கும் அந்தக் காலத்திலிருந்து அவர் ஒப்படையம் செய்குநருக்குப் பொறுப்பாளி ஆவார்.

கைம்மாறில்லாத ஒப்படையம் இறப்பால் முடிவுறுதல்.

162. கைம்மாறில்லாத ஒப்படையமானது, ஒப்படையம் செய்குநர் அல்லது ஒப்படையம் பெறுநர் இருவரில் ஒருவருடைய இறப்பால் முடிவுறுகிறது.

ஒப்படையம்செய்யப்பட்ட பொருள்களிலிருந்து வரும் பெருக்கம் அல்லது ஆதாயத்துக்கு ஒப்படையம் செய்குநர் உரிமையுடையவராவார்.

163. மாறான ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில், ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களிலிருந்து வந்தடையலாகும் பெருக்கம் அல்லது ஆதாயம் எதனையும் ஒப்படையம் செய்குநரிடம் அல்லது அவருடைய பணிப்புரைகளின்படி ஒப்புவிக்க ஒப்படையம் பெறுநர் கட்டுப்பட்டவராவார்.

எடுத்துக்காட்டு

'ஆ' என்பவரின் பாதுகாப்பில் ஒரு பசுவைப் பேணி வருவதற்காக 'அ' என்பவர் விட்டு வைக்கிறார். அந்தப் பசு கன்று ஒன்றை ஈனுகின்றது. 'அ'விடம் பசுவோடு கன்றையும் ஒப்புவிக்க 'ஆ' கட்டுப்பட்டவராவார்.

ஒப்படையம்பெறுநருக்கு ஒப்படையம் செய்குநரின் பொறுப்பு.

164. ஒப்படையம் செய்வதற்கோ, ஒப்படையம் செய்த பொருள்களைத் திரும்பவும் பெறுவதற்கோ, அப்பொருள்கள் பொறுத்து பணிப்புரையிடுவதற்கோ ஒப்படையம் செய்குநர் உரிமையற்றவராயிருந்தார் என்ற காரணத்தால், ஒப்படையம் பெறுநருக்கு ஏற்படலாகும் இழப்பு எதற்கும் ஒப்படையம் செய்குநர், ஒப்படையம் பெறுநருக்குப் பொறுப்பாளி ஆவார்.

கூட்டுச் சொந்தக்காரர் பலரால் செய்யப்படும் ஒப்படையம்,

165. பொருள்களின் கூட்டுச் சொந்தக்காரர்கள் பலர் அவற்றை ஒப்படையம் செய்தால், மாறான உடன்பாடு எதுவும் இல்லாதிருக்கையில், ஒப்படையம் பெறுநர் அந்தப் பொருள்களை, அவர்கள் எல்லாருடைய இசைவுமில்லாமலே, கூட்டுச் சொந்தக்காரர் ஒருவரிடம் அல்லது அவரது பணிப்புரைகளின்படி, திரும்பவும் ஒப்புவிக்கலாம்.

166. ஒப்படையம்செய்குநருக்குப் பொருள்களில் உரிமை மூலம் (Title) எதுவும் இல்லாதிருந்து, ஒப்படையம் பெறுநர் நல்லெண்ணத்துடன் அவற்றைத் திரும்பவும்ஒப்படையம்செய்குநரிடமே அல்லது அவரது பணிப்புரைகளின்படி ஒப்புவிப்பாரானால், அவ்விதம் ஒப்புவித்தல் பொறுத்து சொந்தக்காரருக்கு அவர் பொறுப்பாளி ஆகமாட்டார்.

உரிமைமூலமற்றவரான ஒப்படையம்செய்குநரிடம் திருப்பி ஒப்புவிப்பதன்பேரில் ஒப்படையம்பெறுநர் பொறுப்பாளி ஆகமாட்டார்.

167. ஒப்படையம்செய்குநர் அல்லாத வேறு ஆள் ஒருவர் ஒப்படையம் செய்த பொருள்களின்மீது உரிமை கொண்டாடினால், அப் பொருள்களை ஒப்படையம்செய்குநரிடம் ஒப்புவித்தலை நிறுத்துவதற்காகவும் அப் பொருள்களுக்கான உரிமை மூலத்தைத் தீர்மானிப்பதற்காகவும் அவர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களின் மீது உரிமைகோருன் மூன்றாமவரின் உரிமை.

168. பொருள்களைக் கண்டெடுத்தவருக்கு, அப் பொருள்களைப் பாதுகாத்து வைத்ததற்கும் சொந்தக்காரரைக் கண்டுபிடித்ததற்கும் தாமே விரும்பித் தாம் பட்ட இடர்ப்பாட்டுக்கும், செலவுக்கும் சரியீடு பெறுவதற்காகச் சொந்தக்காரர்மீது வழக்கிடுவதற்கு உரிமை எதுவும் கிடையாது; ஆனால் அத்தகைய சரியீட்டை அவர் பெறும் வரையில் சொந்தக்காரருக்கு எதிராக அப் பொருள்களை நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்; மேலும் காணாமற்போன பொருள்களைத் திருப்பித் தருவதற்காகச் சொந்தக்காரர் குறிப்பிட்ட ஒரு வெகுமதியைத் தருவதாக முற்பாடு செய்திருக்குமிடத்து, கண்டெடுத்தவர் அத்தகைய வெகுமதிக்காக வழக்கிடலாம்; அதோடு அதைப் பெறும்வரையில், அப் பொருள்களை அவர் நிறுத்திவைத்துக்கொள்ளலாம்.

பொருள்களைக் கண்டெடுத்தவருடைய உரிமை முற்பாடு செய்யப்பட்டகுறிப்பிட்ட வெகுமதிக்காக வழக்கிடலாம்.

169. பொதுவான விற்பனைப் பொருளாக உள்ள ஒரு பொருள் காணாமற் போகும்போது, தகவான முயற்சியுடன் அதன் சொந்தக்காரரைக் கண்டுபிடிக்க முடியாது என்றால், அல்லது கோரியதன் பேரில் அதனைக் கண்டெடுத்தவருடைய சட்டப்படியான செலவுகளைச் செலுத்த அவர் மறுப்பாரானால்,—

பொதுவாக விலைக்குக்கிடைக்கும் பொருளைக் கண்டெடுத்தவர் எப்போது விற்கலாம்.

(1) அப் பொருள் அழிந்து விடக்கூடிய அல்லது அதன் மதிப்பில் பெரும் பகுதியை இழந்துவிடக்கூடிய இடரில் இருக்கும்போது, அல்லது

(2) கண்டெடுக்கப்பட்ட பொருளைப் பொறுத்து, கண்டெடுத்தவருடைய சட்டப்படியுள்ள செலவுகள், அப் பொருளின் மதிப்பில் மூன்றிலிரண்டு பங்காக இருக்கும்போது

கண்டெடுத்தவர் அதனை விற்கலாம்.

170. ஒப்படையத்தின் நோக்கத்திற்கு ஏற்ப, ஒப்படையம் பெறுநர், ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்கள் பொறுத்து உழைப்பு அல்லது திறமையைப் பயன்படுத்துதலை உள்ளடக்கிய பணி எதனையும் செய்திருக்குமிடத்து, மாறான ஒப்பந்தம் இல்லாதிருக்கையில், அவற்றைப் பொறுத்து அவர் செய்துள்ள பணிகளுக்காக அதற்குரிய ஊதியத்தை அவர் பெறுகிற வரையில், அத்தகைய பொருள்களை நிறுத்திவைத்துக் கொள்ளும் உரிமை அவருக்குண்டு.

ஒப்படையம்பெறுநருக்குள்ள குறிப்பிட்ட பற்றுரிமை.

எடுத்துக்காட்டுகள்.

(அ) பட்டை தீட்டுவதற்காக 'ஆ' என்ற நகை வணிகரிடம் பட்டை தீட்டப்படாத ஒரு வைரத்தை 'அ' என்பவர் ஒப்புவிக்கிறார். அது அவ்வாறே செய்யப்படுகிறது. அவர் செய்திருக்கிற பணிகளுக்கான பணம் அவருக்குச் செலுத்தப்படும் வரையில் அந்த வைரக் கல்லை நிறுத்தி வைத்துக்கொள்ள 'ஆ' உரிமை உடையவராவார்.

(ஆ). ‘அ’ என்பவர் ஒரு ‘மேல்சட்டை (coat) தைப்பதற்கு ‘ஆ’ என்ற தையற்காரரிடம் துணியைத் தருகிறார். தைத்து முடித்தவுடன் மேற்சட்டையைத் தருவதற்கும், கூலிப் பணத்தைச் செலுத்துவதற்கு ‘அ’வுக்கு மூன்று திங்கள் தவணை அளிப்பதற்கும், ‘ஆ’, ‘அ’ வுக்கு வாக்குறுதி தருகிறார். தமக்குப் பணம் கொடுக்கப்படும் வரையில் மேற்சட்டையினை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு ‘ஆ’ உரிமையுடையவரல்லர்.

வங்கியர்கள், தரகு வணிகர்கள், கப்பல் சரக்கு-மேடைக்குரியவர்கள், வழக்கறிஞர்கள், காப்பீட்டுத் தரகர்கள் ஆகியோரது பொதுப்படைப் பற்றுரிமை.

171. வங்கியர்கள், தரகுவணிகர்கள், கப்பல் சரக்கு மேடைக்குரியவர்கள், ஓர் உயர் நீதிமன்றத்து வழக்கறிஞர்கள், காப்பீட்டுத் தரகர்கள் ஆகியோர், மாறான ஒப்பந்தம் ஒன்று இல்லாதிருக்கையில், பொதுப்படையான கணக்கு நிலுவைக்காகத் தம்மிடம் ஒப்படையம் செய்யப்பட்ட எந்தப் பொருள்களையும் பிணையமாக நிறுத்தி வைத்துக்கொள்ளலாம்; ஆனால் தம்மிடம் ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களை அத்தகைய நிலுவைக்காகப் பிணையமாக நிறுத்தி வைத்துக்கொள்ளும் உரிமை, அந்தப்படிக்கு வெளிப்படை ஒப்பந்தம் இருந்தாலன்றி, வேறு ஆட்கள் எவருக்கும் கிடையாது.

அடகுகள் என்ற ஒப்படையங்கள்

‘அடகு’, ‘அடகு வைக்குநர்’ ‘அடகு பெறுநர்’ ஆகியவற்றுக்குப் பொருள் வரையறை.

172. ஒரு கடனைச் செலுத்துவதற்கு அல்லது ஒரு வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குப் பிணையமாகப் பொருள்களை ஒப்படையம் செய்தல் ‘‘அடகு’’ என்று வழங்கப்படும்; இந்த நேர்வில், ஒப்படையம்செய்குநர், ‘‘அடகுவைக்குநர்’’ (Pawnor) என்று வழங்கப்படுவார். ஒப்படையம்பெறுநர் ‘‘அடகுபெறுநர்’’ (Pawnee) என்று வழங்கப்படுவார்.

அடகு பெறுநருக்குள்ள நிறுத்திவைத்துக் கொள்ளும் உரிமை.

173. கடனைச் செலுத்துவதற்காக அல்லது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக மட்டுமல்லாமல், கடனுக்கான வட்டிக்காகவும் அடகுப் பொருள்களைத் தம் உடைமையில் வைத்திருப்பது அல்லது அவற்றைப் பாதுகாப்பது பொறுத்துத் தாம் செய்யும்படி நேர்ந்த எல்லா இன்றியமையாச் செலவுகளுக்காகவும் அடகுப்பொருள்களை அடகுபெறுநர் நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்.

எந்தக் கடன் அல்லது வாக்குறுதிக்காகப் பொருள்கள் அடகு வைக்கப்பட்டனவோ, அந்தக் கடன் அல்லது வாக்குறுதி அல்லாத வேறு கடன் அல்லது வாக்குறுதிக்காக அடகு பெறுநர்நிறுத்திவைத்துக் கொள்ளுதல் ஆகாது. பிந்திய கடன் கொடுப்புகள் பற்றிய துணிபு.

174. எந்தக் கடன் அல்லது வாக்குறுதிக்காக பொருள்கள் அடகு வைக்கப்பட்டனவோ அந்தக் கடன் அல்லது வாக்குறுதி அல்லாத வேறு கடன் அல்லது வாக்குறுதி எதற்காகவும் அடகுப் பொருள்களை அடகுபெறுநர் நிறுத்தி வைத்துக் கொள்ளுதல் அந்தப்படிக்கு ஓர் ஒப்பந்தம் இல்லாதிருக்கையில், ஆகாது; ஆனால், மாறானது எதுவும் இல்லாதிருக்கையில், அடகுபெறுநரால் செய்யப்பட்ட பிந்திய கடன்கொடுப்புகள் பொறுத்து அத்தகைய ஒப்பந்தம் இருப்பதாகத் துணிபு கொள்ளுதல் வேண்டும்.

இயல்பிகந்த செலவுகள் குறித்து அடகு பெறுநருக்குள்ள உரிமை.

175. அடகுப் பொருள்களைப் பாதுகாப்பதற்காகத் தாம் உற்ற இயல்பிகந்த செலவுகளை அடகுவைக்குநரிடமிருந்து பெறுவதற்கு அடகுபெறுநர் உரிமையுடையவராவார்.

அடகு வைக்குநர் தவறுகை செய்யுமிடத்து அடகு பெறுநருக்குள்ள உரிமை.

176. பொருள்கள் எந்தக் கடன் அல்லது வாக்குறுதியைப் பொறுத்து அடகுவைக்கப்பட்டனவோ, அந்தக் கடனை அல்லது அந்த வாக்குறுதியை உடன்படுகைக் காலத்தில் செலுத்துவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அடகுவைக்குநர் தவறுகை செய்வாரானால் அந்தக் கடன் அல்லது வாக்குறுதியின் பேரில் அடகுவைக்குநருக்கெதிராக அடகுபெறுநர் உரிமைவழக்குக் கொணர்வதோடு அடகுப் பொருள்களைப் பக்கச் சார்பான

பிணையமாகவும் நிறுத்திவைத்துக்கொள்ளலாம்; அல்லது விற்பனைக்காகத் தகவான அறிவிப்பை அடகுவைக்குநருக்குக் கொடுத்ததன் பேரில் அவர் அடகுப் பொருளை விற்றுவிடலாம்.

அத்தகைய விற்பனையில் கிடைக்கும் தொகையானது, கடன் அல்லது வாக்குறுதி பொறுத்துக் கொடுபடவேண்டிய தொகைக்குக் குறைவாக இருக்குமானால், அடகுவைக்குநர் அந்தக் குறைவுத் தொகையைச் செலுத்துவதற்கு பின்னும் கடப்பாடுடையவராயிருப்பார். அந்த விற்பனையில் கிடைக்கும் தொகை அவ்வாறு கொடுபடவேண்டிய தொகைக்கும் அதிகமாக இருக்குமானால், அடகு பெறுநர் அந்த மிகைத் தொகையை அடகு வைக்குநருக்குச் செலுத்துதல் வேண்டும்.

177. எந்தக் கடன் அல்லது வாக்குறுதிக்காக அடகு வைக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் கடனைச் செலுத்துவதற்கு அல்லது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு, ஒரு காலம் உடன்படுகை செய்யப்பட்டிருந்து, அந்த உடன்படுகைக் காலத்தில் கடனைச் செலுத்துவதில் அல்லது வாக்குறுதியை நிறைவேற்றுவதில் அடகுவைக்குநர் தவறுகை செய்வாரானால், அதன் பின்பு அடகுப் பொருள்கள் உள்ளபடியே விற்பனை செய்வதற்கு முன் எந்தச் சமயத்திலும் அவற்றை அவர் மீட்டுக் கொள்ளலாம்; ஆனால் அந்த நேர்வில் அவரது தவறுகையால் ஏற்பட்டிருக்கிற செலவுகள் எவற்றையும் கூடுதலாகச் செலுத்துதல் வேண்டும்.

தவறுகை செய்யும் அடகுவைக்குநருக்குள்ள மீட்புரிமை.

[1][178. சொந்தக்காரரது இசைவுடன், ஒரு வணிக முகவர் பொருள்களை அல்லது பொருள்களுக்குரிய உரிமை மூல ஆவணங்களைத் தம் உடைமையில் வைத்திருக்குமிடத்து, வணிக முகவர் வழக்கமான வணிக நடைமுறையில் செயற்படுகின்றபோது அவர் வைக்கும் அடகு எதுவும், அதைச் செய்வதற்கு அப் பொருள்களின் சொந்தக்காரரால் அவருக்கு வெளிப்படையாக அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படியே செல்லுபடியாதல் வேண்டும். ஆனால் அடகுபெறுநர் நல்ல எண்ணத்தோடு செயற்படுதலும், மற்றும் அடகுவைக்குநருக்கு அடகு வைப்பதற்கு அதிகாரம் இல்லை என்று அடகுவைக்கும் காலத்தில் அடகுபெறுநருக்குத் தெரிந்திராதிருத்தலும் வேண்டும்.

வணிக முகவரால் வைக்கப்படும் அடகு.

விளக்கம்.—இந்தப் பிரிவில் 'வணிக முகவர்' மற்றும் 'உரிமைமூல ஆவணங்கள்' என்ற சொற்றொடர்கள் 1930 ஆம் ஆண்டு இந்தியச் சரக்குகள் விற்பனைச் சட்டத்தில் அவற்றிற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருள்களையே கொண்டிருத்தல் வேண்டும். 3/1930

178 அ. அடகுவைக்குநர், 19 ஆம் பிரிவு அல்லது 19 அ பிரிவின்படியான செல்லாததாக்கத்தக்க ஓர் ஒப்பந்தத்தின்படி தாம் அடகுவைத்த பொருள்களின் உடைமையைப் பெற்றிருந்து, ஆனால், அடகுவைத்த காலத்தில் அந்த ஒப்பந்தமானது அறவு செய்யப்படாமல் இருக்கும்போது அடகுபெறுநர் அந்தப் பொருள்களின்மீது சரியான, உரிமைமூலத்தைப் பெறுகிறார்; ஆனால் அவர் நல்லெண்ணத்தோடும் அடகுவைக்குநரின் உரிமை மூலத்திலுள்ள குறைபாடு தெரிந்திராமலும் செயற்பட்டிருத்தல் வேண்டும்.]

செல்லாததாக்கத் தக்க ஒப்பந்தத்தின்படி உடைமை பெற்றிருக்கிற ஆளால் வைக்கப்படும் அடகு.

179. ஓர் ஆள் தாம் எந்தப் பொருள்களில் ஒரு வரம்புடை உரித்தத்தை மட்டுமே கொண்டிருக்கிறாரோ அந்தப் பொருள்களை அடகுவைக்குமிடத்து, அந்த உரித்தத்தின் அளவுக்கு அந்த அடகு செல்லுபடியாகிறது.

அடகுவைக்குநர் ஒரு வரம்புடை உரித்தத்தை மட்டும் கொண்டிருக்குமிடத்து, அடகு.

---

1. அ பிரிவுகள் 1930 ஆம் ஆண்டு 4 ஆம் சட்டத்தின் 178 ஆம் மற்றும் 178 2 ஆம் பிரிவினால் முதன்முதலிலிருந்த 178 ஆம் பிரிவுக்குப் பதிலாக அமைக்கப்பட்டன.

தீங்கிழைப்பவர்களுக்கெதிராக ஒப்படையம் பெறுநர்களால் அல்லது ஒப்படையம் செய்குநர்களால் தொடரப்படும் உரிமை வழக்குகள்

தீங்கிழைப்பவருக்கெதிராக ஒப்படையம் செய்குநரால் அல்லது ஒப்படையம் பெறுநரால் உரிமை வழக்கு.

180. ஒப்படையம் செய்யப்பட்ட பொருள்களை ஒப்படையம் பெறுநர் பயன்படுத்துவதை அல்லது உடைமையில் கொண்டிருப்பதை மூன்றாமவர் சட்ட முரணாக இழக்கச் செய்தால் அல்லது அவற்றிற்கு ஏதாவது கேடு செய்தால், ஒப்படையம் எதுவும் செய்யப்படாதிருக்கும் நேர்வில், அவற்றின் சொந்தக்காரர் எந்தத் தீர்வழிகளைப்பயன்படுத்திக் கொள்வாரோ அந்தத் தீர்வழிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஒப்படையம் பெறுநர் உரிமை உடையவராகிறார்; மேலும் அத்தகைய இழப்புக்கு அல்லது கேட்டிற்கு மூன்றாமவருக்கெதிராக ஒப்படையம் செய்குநர் அல்லது ஒப்படையம்பெறுநர் இருவரில் எவரும் உரிமைவழக்கொன்றைக் கொணரலாம்.

அத்தகைய உரிமைவழக்குகள்மூலம் பெற்ற உய்தி அல்லது சரியீட்டைப் பங்கீடு செய்தல்.

181. அத்தகைய உரிமைவழக்கெதிலும், உய்தியாக (Relief) அல்லது சரியீடாகப் பெறப்பட்ட எதுவும் ஒப்படையம் பெறுநருக்கும் ஒப்படையம்செய்குநருக்குமிடையில் அவரவர் உரித்தங்களுக்கு ஏற்ப, பங்கீடு செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் X.

முகவாண்மை

முகவர்களின் அமர்த்துகையும் அதிகாரமும்

''முகவர்'' ''முதல்வர்'' ஆகியவற்றுக்குப் பொருள்வரையறை.

182. ''முகவர்'' என்பவர், மற்றொருவருக்காகச் செயல் எதையும் செய்வதற்காக அல்லது மூன்றாமவர்களோடுள்ள நடவடிக்கைகளில் மற்றொருவருக்காகச் சார்பாண்மை செய்வதற்கு அமர்த்தப்பட்டிருக்கிற ஓர் ஆள் ஆவார். எந்த ஆளுக்காக அத்தகைய செயல் எதுவும் செய்யப்படுகிறதோ அல்லது அவ்வாறு சார்பாண்மை செய்யப்படுகிறதோ அந்த ஆள் ''முதல்வர்'' என வழங்கப்படுவார்.

முகவரை யார் அமர்த்தலாம்.

183. எந்தச் சட்டத்திற்கு ஒருவர் உட்பட்டிருக்கிறாரோ அந்தச் சட்டத்தின்படி உரிய வயதடைந்த நிலையினராயிருக்கிறவரும் சீர்மனமுடையவராயிருக்கிறவருமான ஆள் எவரும் முகவர் ஒருவரை அமர்த்தலாம்.

யார் முகவராக இருக்கலாம்.

184. முதல்வருக்கும் மூன்றாமவர்களுக்கும் இடையே எந்த ஆளும் முகவராக ஆகலாம்; ஆனால், உரிய வயதடைந்த நிலையினராக இல்லாதவரும் சீர்மனமில்லாதவருமான ஆள் எவரும் அவருடைய முதல்வருக்குப் பொறுப்பாக இருக்கும் வகையில் அதன் பொருட்டு இதில் அடங்கியுள்ள வகைமுறைகளின்படி முகவராக முடியாது.

மறுபயன் தேவையில்லை.

185. முகவாண்மை ஒன்றை ஏற்படுத்துவதற்கு மறுபயன் எதுவும் தேவையில்லை.

முகவரின் அதிகாரம் வெளிப்படையாகஇயம்பப்படலாம் அல்லது உட்கிடையாக இருக்கலாம்.

186. முகவர் ஒருவருடைய அதிகாரம் வெளிப்படையாக இயம்பப்படலாம் அல்லது உட்கிடையாக இருக்கலாம்.

வெளிப்படையான அதிகாரத்துக்கும் உட்கிடையான அதிகாரத்துக்கும் பொருள் வரையறை.

187. ஓர் அதிகாரமானது மொழியப்பட்ட அல்லது எழுதப்பட்ட சொற்களால் அளிக்கப்படும்போது அது வெளிப்படையானது என்று சொல்லப்படுகிறது; ஓர் அதிகாரமானது சூழ்நிலைகளிலிருந்து ஊகிக்கப்படவேண்டியதாயிருக்கும்போது அது உட்கிடையானது என்று சொல்லப்படுகிறது; மற்றும் மொழியப்பட்ட அல்லது எழுதப்பட்ட பொருள்கள் அல்லது நடவடிக்கையின் இயல்பான நடைமுறைகள், நேர்வின் சூழ்நிலைகளாகக் கருதப்படலாம்.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவர் செரம்பூரில் ஒரு கடையைச் சொந்தமாக வைத்திருக்கிறார். தாம் கல்கத்தாவில் வசித்துக் கொண்டு அந்தக் கடையை எப்போதாவது அவர் பார்வையிட்டு வருகிறார். அந்தக் கடை 'ஆ' என்பவரால் மேலாண்மை செய்யப்படுகிறது. மேலும் அந்தக் கடைக்காக 'அ'வின் பெயரில் 'இ'யிடமிருந்து பொருள்கள் அனுப்பும்படி ஆணையிடுவதும் 'அ'வின் பணத்திலிருந்து 'அ'வுக்குத் தெரிந்தே அவற்றுக்குப் பணம் செலுத்துவதும் 'ஆ'வுக்குப் பழக்கமாயிருக்கிறது. அந்தக் கடைக்காகப் பொருள்களை அனுப்பும்படி 'அ'வின் பெயரில் 'ஆ', 'இ'க்குக் ஆணையிட 'ஆ', 'ஆ'விடமிருந்து ஓர் உட்கிடை அதிகாரம் கொண்டவராயிருக்கிறார்.

முகவருடைய அதிகாரத்தின் அளாவுகை.

188. ஒரு செயலைச் செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற முகவர் ஒருவர் அந்தச் செயலைச் செய்வதற்கு தேவைப்படுகிற சட்டப்படியுள்ள ஒவ்வொன்றையும் செய்வதற்கு அதிகாரம் உடையவரா இருக்கிறார்.

தொழில் ஒன்றை நடத்துவதற்கு அதிகாரம் பெற்றிருக்கிற முகவர் ஒருவர், அந்த நோக்கத்திற்குத் தேவைப்படுகிற, அல்லது அந்தத் தொழில் நடத்துகையில் வழக்கமாக செய்யப்படுகிற, சட்டப்படியுள்ள ஒவ்வொன்றையும் செய்வதற்கு அதிகாரம் உடையவராயிருக்கிறார்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) லண்டனில் வசித்து வருகிற 'ஆ' என்பவர் தமக்குக் கொடுபட வேண்டிய கடன் ஒன்றை பம்பாயில் வசூலிப்பதற்காக 'அ' என்பவரை அமர்த்துகிறார். 'அ' அந்தக் கடனை வசூலிக்கும் பொருட்டுத் தேவைப்படுகிற சட்ட நடவடிக்கை எதையும் மேற்கொள்ளலாம். மேலும் அக் கடனுக்கு அவர் செல்லுபடியாகும் ஒரு விடுவிப்பை அளிக்கலாம்.

(ஆ). 'அ' என்பவர் தம்முடைய கப்பல் கட்டுகிற தொழிலை நடத்துவதற்கு 'ஆ' என்பவரைத் தம் முகவராக அமர்த்துகிறார். அந்தத் தொழிலை நடத்தும் பொருட்டு 'ஆ' மரத்தையும் பிற பொருட்களையும் விலைக்கு வாங்கலாம்; வேலையாட்களைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளலாம்.

நெருக்கடி நிலையில் முகவரின் அதிகாரம்.

189. நெருக்கடி நிலையொன்றில், தம்முடைய முதல்வரை இழப்பிலிருந்து காப்பாற்றும் பொருட்டு, இயல்பாகவே அறிவார்ந்த ஆள் ஒருவர் அவருடைய சொந்தக் காரியத்தில் ஒத்த சூழ்நிலைகளில் எச் செயல்களைச் செய்வாரோ அச் செயல்கள் எல்லாவற்றையும் செய்வதற்கு முகவர் ஒருவருக்கு அதிகாரமுண்டு.

எடுத்துக்காட்டுகள்.

(அ) விற்பனை முகவர் ஒருவர், பொருள்கள் பழுது பார்க்கப்படுவது தேவையானால் அவ்வாறு செய்யலாம்.

(ஆ) கட்டாக்கிலிருக்கும் 'இ' என்பவருக்கு உடனடியாக அனுப்ப வேண்டுமென்ற பணிப்புரையோடு 'அ' என்பவர் கல்கத்தாவிலிருக்கும் 'ஆ' என்பவருக்கு உணவுப் பொருள்களை அனுப்பி வைக்கிறார். அவை கட்டாக் பயணத்தின்போது கெட்டுப்போகக் கூடியவையாயிருக்குமானால், அந்த உணவுப் பொருள்களை 'ஆ' கல்கத்தாவில் விற்றுவிடலாம்.

உள்முகவர்கள்

முகவர் எப்பொழுது ஒப்படைவு செய்ய முடியாது.

190. முகவர் ஒருவர் தாமே நிறைவேற்றுவதாக வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ மேற்கொண்ட செயல்களை நிறைவேற்றுவதற்கு, வழக்கமான வாணிக வழக்கத்தின்படி உள்முகவர் ஒருவர் அமர்த்தப்படலாம் என்றோ, அல்லது அந்த முகவாண்மையின் தன்மை காரணமாக உள்முகவர் ஒருவர் அமர்த்தப்படுதல் வேண்டும் என்றோ இருந்தாலன்றி, மற்றொருவரைச் சட்டப்படி அமர்த்தமுடியாது.

''உள்முகவர்'' என்பதற்குப் பொருள்வரையறை.

191. முதல் முகவரால் முகவாண்மைக்கான தொழிலில் அமர்த்தப்பட்டு அவருடைய ஆளுகையின்கீழ் செயற்படுகிற ஓர் ஆள் உள்முகவராவார்.

முறையாக அமர்த்தப்பட்டஉள் முகவர் முதல்வரின் சார்பாளராக இருத்தல்.

192. உள்முகவர் ஒருவர் முறையாக அமர்த்தப்படுமிடத்து, மூன்றாமவர்கள் பொறுத்தவரையில் அந்த உள்முகவர் முதல்வரின் சார்பாளராவார். மேலும் அவர் முதன் முதலிலேயே முதல்வரால் அமர்த்தப்பட்ட ஒரு முகவராய் இருந்தாற் போன்றே அவருடைய செயல்களுக்கு அந்த முதல்வர் கட்டுப்பட்டவராகவும் பொறுப்பாளியாகவும் இருப்பார்.

உள்முகவனுக்காக முகவர் பொறுப்பு.

உள்முகவரின் செயல்களுக்கு முகவர் முதல்வருக்குப் பொறுப்பாளியாவார்.

உள்முகவர், மோசடி செய்துள்ள அல்லது வேண்டுமென்றே தீங்கு விளைவித்துள்ள நேர்வுகளில் தவிர, அவருடைய செயல்களுக்காக முகவருக்குப் பொறுப்பாளியாவார்; ஆனால் முதல்வருக்கு அன்று. உள்முகவரின் பொறுப்பு.

193. அமர்த்துவதற்கு அதிகாரமில்லாமலேயே, முகவர் ஒருவர், ஆள் ஒருவரை ஓர் உள்முகவராகச் செயல்புரிவதற்கு அமர்த்தியிருக்குமிடத்து, ஒரு முகவரிடத்து ஒரு முதல்வர் கொண்டிருக்கிற உறவை அத்தகைய ஆளைப் பொறுத்து, அந்த முகவர் கொண்டிருப்பார்; மேலும் அந்த முகவர் அவருடைய செயல்களுக்காக முதல்வர், மூன்றாமவர்கள் ஆகிய இருவருக்குமே பொறுப்பாளியாயிருப்பார்; அவ்வாறு அமர்த்தப்பட்ட ஆள் முதல்வரின் சார்பாளரும் அல்லர்; அந்த ஆளின் செயல்களுக்காக அந்த முதல்வர் பொறுப்பாளியுமல்லர்; மேலும் அந்த ஆளும் முதல்வருக்குப் பொறுப்பாளி அல்லர். அதிகாரமில்லாமல் அமர்த்தப்பட்ட உள்முகவருக்காக முகவர் பொறுப்பு.

194. முகவாண்மைக்கான தொழிலில் முதல்வருக்காகச் செயல்புரிய மற்றோர் ஆளை அமர்த்துவதற்கு வெளிப்படையான அல்லது உட்கிடையான அதிகாரத்தைக் கொண்டிருக்கும் முகவர் ஒருவர் அவ்வாறே மற்றோர் ஆளை அமர்த்தியிருக்குமிடத்து, அத்தகைய ஆள் ஓர் உள்முகவராகமாட்டார்; ஆனால் அந்த முகவாண்மைக்கான தொழிலில் எவ்வளவு பகுதி அவரிடம் ஒப்படைக்கப்படுகிறதோ அவ்வளவு பகுதிக்கு அவர் முதல்வருடைய முகவராக இருப்பார். முதல்வருக்கும் முகவாண்மைக்கான தொழிலில் செயல் புரிவதற்கு முகவரால் உரியவாறு அமர்த்தப்பட்ட ஆளுக்குமிடையேயுள்ள உறவு.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் அவருடைய வழக்குரைஞராகிய (Solicitor) 'ஆ' என்பவரைத் தம்முடைய சொத்தினை ஏலத்தில் விற்பதற்கும் அதன் பொருட்டு ஏலம் நடத்துநர் ஒருவரை அமர்த்துவதற்கும் பணிக்கிறார். அந்த விற்பனையை நடத்துவதற்கு 'ஆ', ஏலம் நடத்துநரான 'இ' என்பவரை அமர்த்துகிறார். 'இ' ஓர் உள்முகவராகமாட்டார். ஆனால், அந்த விற்பனையை நடத்துவதற்காக 'அ'வுடைய முகவராவார்.

(ஆ). 'அ' என்பவர் கல்கத்தாவிலிருக்கும் ஒரு வணிகரான 'ஆ' என்பவருக்கு 'இ' வகையார் நிறுமத்தால், 'அ'வுக்குக் கொடுபட வேண்டிய பணங்களை வசூலிப்பதற்கு அதிகாரமளிக்கிறார். 'ஆ' பணத்தை வசூலிப்பதற்காக 'ஈ' என்ற ஒரு வழக்குரைஞரை 'இ' வகையார் நிறுமத்துக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏவுரை செய்கிறார். 'ஈ' ஓர் உள்முகவராகமாட்டார்; ஆனால் அவர் 'அ'வுக்கு ஒரு வழக்குரைஞராவார்.

195. முகவர் ஒருவர், அவருடைய முதல்வருக்காக அத்தகைய முகவரைத் தெரிந்தெடுப்பதில் இயல்பாகவே அறிவார்ந்த ஒரு மனிதர் அவருடைய சொந்தக் காரியத்தில் செலுத்தும் அதே அளவு உளத்தேர்வைச் செலுத்தக் கட்டுப்பட்டவராவார்; மேலும் இதை அவர் செய்வாரானால் அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட முகவருடைய செயல்களுக்காக அல்லது கவனக்குறைவுக்காக முதல்வருக்கு அவர் பொறுப்பாளியல்லர். அத்தகைய ஆளை அமர்த்துவதில் முகவருக்குள்ள கடமை.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் ஒரு வணிகரான 'ஆ' என்பவரைத் தமக்காக ஒரு கப்பலை விலைக்கு வாங்கும்படி ஏவுரை செய்கிறார். 'அ'வுக்காகக் கப்பல் ஒன்றைத் தெரிந்தெடுப்பதற்குப் பேர்பெற்ற ஒரு கப்பல் ஆய்வாளரை (சர்வேயரை) 'ஆ' அமர்த்துகிறார். அந்த ஆய்வாளர் கவனக்குறைவுடன் தெரிந்தெடுப்புச் செய்கிறார். மற்றும் அந்தக் கப்பல் கடலில் செலுத்தப்படுவதற்கு உதவாதது என்று தெரிய வருகிறது. அது கடலில் அழிந்துபடுகிறது. 'அ'வுக்கு 'ஆ' பொறுப்பாளியல்லர்; ஆனால் ஆய்வாளரே பொறுப்பாளி ஆவார்.

(ஆ). ‘அ’ என்பவர் விற்பனைக்காக ‘ஆ’ என்கிற வணிகர் ஒருவருக்குப் பொருள்களை அனுப்புகிறார். ‘ஆ’ காலப் போக்கில் நம்பிக்கைக்கு உரியவரான ஏலம் நடத்துநர் ஒருவரை ‘அ’வின் பொருள்களை விற்பதற்காக அமர்த்துகிறார். மேலும் அந்த ஏலம் நடத்துநர் அந்த விற்றுமுதலைப் பெறுவதற்கும் இசைவளிக்கிறார். பிறகு அந்த ஏலம் நடத்துநர் அந்த விற்றுமுதலுக்குக் கணக்குக் கொடுக்காமலேயே நொடித்துப் போனவராக ஆகிவிடுகிறார். ‘அ’வுக்கு அந்த விற்றுமுதலுக்கு ‘ஆ’ பொறுப்பாளி அல்லர்.

ஏற்றுறுதி செய்தல்

ஆள் ஒருவருக்காக அவருடைய அதிகாரமில்லாமல் செய்யப்படும் செயல்கள் குறித்து அவருக்குள்ள உரிமை. ஏற்றுறுதி செய்தலின் விளைவு.

196. ஓர் ஆளால் மற்றொருவர் சார்பாக ஆனால் அவருக்குத் தெரியாமல் அல்லது அவருடைய அதிகாரமில்லாமல் செயல்கள் செய்யப்படுமிடத்து, அந்தச் செயல்களை அவர் ஏற்றுறுதி செய்ய அல்லது ஏற்க மறுக்க தேர்வு செய்யலாம். அவர் அவற்றை ஏற்றுறுதி செய்வாரானால், அதே விளைவுகள் அவை அவருடைய அதிகாரத்தின் பேரில் செய்யப்பட்டிருந்தாற் போன்றே பின்தொடரும்.

ஏற்றுறுதி செய்தலானது வெளிப்படையாக இயம்பப்படலாம் அல்லது உட்கிடையானதாக இருக்கலாம்.

197. ஏற்றுறுதி செய்தலானது வெளிப்படையாக இயம்பப்படலாம் அல்லது எந்த ஆளின் சார்பாகச் செயல்கள் செய்யப்படுகின்றனவோ அந்த ஆளின் நடத்தையில் உட்கிடையாக இருக்கலாம்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). ‘அ’ என்பவர், அதிகாரமில்லாமலேயே, ‘ஆ’ என்பவருக்காகப் பொருள்களை விலைக்கு வாங்குகிறார். பிற்பாடு ‘ஆ’ தம் சொந்த வகையில் அவற்றை ‘இ’ என்பவருக்கு விற்கிறார்; ‘ஆ’வின் நடத்தையில் அவருக்காக ‘அ’ செய்த கொள்வினைக்காக ஏற்றுறுதி செய்தல் உட்கிடையாக இருக்கிறது.

(ஆ). ‘அ’ என்பவர், ‘ஆ’ என்பவருடைய பணத்தை, ‘ஆ’வுடைய அதிகாரமில்லாமலேயே ‘இ’ என்பவருக்குக் கடன் கொடுக்கிறார், பிற்பாடு அந்தப் பணத்தின்மீதான வட்டியை ‘இ’யிடமிருந்து ‘ஆ’ பெற்றுக்கொள்கிறார். ‘ஆ’வின் நடத்தையில் அந்தக் கடனுக்காக ஏற்றுறுதி செய்தல் உட்கிடையாக இருக்கிறது.

செல்லுபடியாகும் ஏற்றுறுதி செய்தலுக்குத் தேவையான அறிவுறுகை.

198. நேர்வின் உண்மைவிவரங்களைப் பற்றி முக்கியமான கூறுகளில் குறைபாடான அறிவுறுகை உள்ள ஆள் ஒருவர் செல்லுபடியாகும் ஏற்றுறுதி செய்தல் எதனையும் செய்ய முடியாது.

ஒரு நடவடிக்கையின் பகுதியாக அமைகிற அதிகாரம் பெறாத செயலை ஏற்றுறுதி செய்வதன் விளைவு.

199. தமது சார்பாகச் செய்யப்பட்ட அதிகாரம்பெறாத செயல் எதையும் ஏற்றுறுதி செய்கிற ஆள் ஒருவர், அந்தச் செயல் எந்த நடவடிக்கையின் பகுதியாக அமைகிறதோ அந்த நடவடிக்கை முழுவதையும் ஏற்றுறுதி செய்பவராகிறார்.

அதிகாரம் பெறாத செயலை ஏற்றுறுதி செய்வதானது மூன்றாமவருக்குக் கேடு விளைவிக்க முடியாது.

200. ஓர் ஆளால், மற்றொருவரின் சார்பாக அந்த மற்றைய ஆளின் அதிகாரமின்றிச் செய்யப்பட்ட எந்த ஒரு செயலானது அதிகாரத்துடன் செய்யப்பட்டால் மூன்றாமவர் ஒருவரை இழப்பீடு செய்தலுக்கு உட்படுத்துகிற அல்லது மூன்றாமவர் ஒருவரின் உரிமை அல்லது உரித்தம் எதனையும் முடிவுறுத்துகிற விளைவைக் கொண்டிருக்குமோ அந்தச் செயல், ஏற்றுறுதி செய்தலின் மூலம் அத்தகைய விளைவைக் கொண்டிருக்குமாறு செய்ய முடியாது.

எடுத்துக்காட்டுகள்.

(அ). ‘அ’ என்பவர் ‘ஆ’ என்பவரின் சார்பாக ‘இ’ என்பவரிடமிருந்து அவர் உடைமையிலிருக்கிற ‘ஆ’வின் சொத்தான அசையும் பொருள் ஒன்றை ஒப்புவிக்கவேண்டுமென்று அதற்காக ‘ஆ’வினால் அதிகாரமளிக்கப்படாமலேயே, கோருகிறார். இந்தக் கோரிக்கை ‘இ’யை அவர் ஒப்புவிக்க மறுப்பதற்காக இழப்பீட்டுக்கு உள்ளாக்குகிற வகையில் ‘ஆ’வினால் ஏற்றுறுதி செய்யப்பட முடியாது.

(ஆ). 'அ' என்பவர் 'ஆ' என்பவரிடமிருந்து மூன்று திங்கள் அறிவிப்பின் பேரில் முடிவுறுத்தத்தக்க குத்தகை ஒன்றைக் கொண்டிருக்கிறார். அதிகாரம் பெறாத 'இ' என்கிற ஆள் முடிவுறுத்துவதற்கான அறிவிப்பை 'அ'வுக்குக் கொடுக்கிறார். 'அ'வைக் கட்டுப்படுத்துகிற வகையில் அந்த அறிவிப்பு 'ஆ'வினால் ஏற்றுறுதி செய்யப்பட முடியாது.

அதிகாரத்தைப் பின்னறவு செய்தல்

201. ஒரு முகவாண்மையானது, முதல்வர், அவர் அளித்த அதிகாரத்தைப் பின்னறவு செய்வதால், அல்லது முகவர் முகவாண்மைக்கான தொழிலைத் துறந்துவிடுவதால், அல்லது முகவாண்மைக்கான தொழில் முழுமையுறுவதால், அல்லது முதல்வர் அல்லது முகவர் இருவரில் எவரும் இறந்துபோவதால் அல்லது மனச்சீர்கேடு உறுவதால் அல்லது நொடித்துப்போன கடன்பெறுநர்களது உய்திக்காக அப்போதைக்கு நடைமுறையிலுள்ள சட்டம் ஏதொன்றின் வகைமுறைகளின்படியும் முதல்வர் நொடித்துப்போனவர் என நீதிமுறைத் தீர்ப்பளிக்கப் பெறுவதால், முடிவுறுத்தப்படுகிறது. முகவாண்மையை முடிவுறுத்துதல்.

202. முகவரானவர், முகவாண்மையின் நுதல் பொருளாக (subject—matter) அமையும் சொத்தில் தாமே ஓர் உரித்தத்தைக் கொண்டிருக்குமிடத்து, அந்த முகவாண்மையானது, ஒரு வெளிப்படையான ஒப்பந்தம் இல்லாதிருக்கையில், அத்தகைய உரித்தத்துக்கு ஊறு உண்டாக்கும் வகையில் முடிவுறுத்தப்படமுடியாது. நுதல் பொருளில் முகவர் ஓர் உரித்தத்தைக் கொண்டிருக்குமிடத்து முகவாண்மையை முடிவுறுத்துதல்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு 'அ'வுடைய நிலத்தை விற்பதற்கும் அந்த விற்று முதலிலிருந்து 'அ'விடமிருந்து அவருக்குக் கொடுபட வேண்டிய கடனுக்காகத் தொகையை எடுத்துக் கொள்வதற்கும் அதிகாரம் அளிக்கிறார். இந்த அதிகாரத்தை 'அ' பின்னறவு செய்ய முடியாது. மேலும் அது அவரது பித்துநிலை அல்லது இறப்பு காரணமாக முடிவுறுத்தப்படவும் முடியாது.

(ஆ). 'அ' என்பவர் 1,000 பொதிப் பஞ்சை அந்தப் பஞ்சின் பேரில் கடன் கொடுப்புகள் செய்திருக்கிற 'ஆ'வுக்கு அனுப்பி 'ஆ' அந்தப் பஞ்சை விற்று அந்த விலையிலிருந்து அவருடைய கடன் கொடுப்புகளுக்கான தொகையை அவரே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார். 'அ' இந்த அதிகாரத்தைப் பின்னறவு செய்ய முடியாது. மேலும் அது அவரது பித்துநிலை அல்லது இறப்பு காரணமாக முடிவுறுத்தப்படுவதும் இல்லை.

203. முதல்வரானவர், முந்திய கடைசிப் பிரிவினால் வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருக்கிறவாறல்லாமல், அவருடைய முகவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரத்தை, அந்த அதிகாரம் முதல்வரைக் கட்டுப்படுத்தும் வகையில் செலுத்தப்படுவதற்கு முன்பு எந்த நேரத்திலும், பின்னறவு செய்யலாம். முகவரின் அதிகாரத்தை முதல்வர் எப்போது பின்னறவு செய்யலாம்.

204. முதல்வர், அவருடைய முகவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை, அந்த அதிகாரம் பகுதி செலுத்தப்பட்டுவிட்ட பின்பு, முகவாண்மையில் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கிற செயல்களிலிருந்து எழுகிற செயல்களையும் கடமைப் பொறுப்புகளையும் பொறுத்த அளவுக்கு பின்னறவு செய்ய முடியாது. அதிகாரம் பகுதி செலுத்தப்பட்டுவிட்டிருக்குமிடத்துப் பின்னறவு செய்தல்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு 'அ'வின் கணக்கில் 1,000 பொதிப் பஞ்சை விலைக்கு வாங்குவதற்கும் 'ஆ'வின் கைவசமிருக்கும் 'அ'வின் பணத்திலிருந்து அதற்கான பணத்தைச் செலுத்துவதற்கும் அதிகாரமளிக்கிறார். 'ஆ' 1,000 பொதிப் பஞ்சை அதன் விலைக்காகத் தம்மைச் சொந்த முறையில் கடப்பாடுடையவராக ஆக்கிக் கொள்ளும் வகையில் தம்முடைய பெயரிலேயே விலைக்கு வாங்குகிறார். அந்தப் பஞ்சுக்கான விலையைச் செலுத்துதல் பொறுத்த அளவுக்கு 'அ', 'ஆ'வின் அதிகாரத்தைப் பின்னறவு செய்ய முடியாது.

(ஆ). ‘அ’ என்பவர் ‘ஆ’ என்பவருக்கு ‘அ’வின் கணக்கில் 1,000 பொதிப் பஞ்சை விலைக்கு வாங்குவதற்கும் ‘ஆ’வின் கைவசமிருக்கும் ‘அ’வின் பணத்திலிருந்து அதற்கான பணத்தைச் செலுத்துவதற்கும் அதிகாரமளிக்கிறார். ‘ஆ’ 1,000 பொதிப் பஞ்சை அதன் விலைக்காகத் தம்மைச் சொந்த முறையில் கடப்பாடுடையவராக ஆக்கிக் கொள்ளாத வகையில் ‘அ’வின் பெயரில் விலைக்கு வாங்குகிறார். அந்தப் பஞ்சுக்கான விலையைச் செலுத்துவதற்காக ‘ஆ’வுடைய அதிகாரத்தை ‘அ’ பின்னறவு செய்ய முடியும்.

முதல்வரால்பின்னறைவு செய்யப்படுதலுக்கான அல்லது முகவரால் துறந்து விடப்படுதலுக்கான சரியீடு.

205. முகவாண்மையானது காலஅளவு எதற்கும் தொடர்ந்திருத்தல் வேண்டுமென்று வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தம் ஒன்று இருக்குமிடத்து, போதுமான காரணமில்லாமல் முகவாண்மையை முன்னதாகப் பின்னறவு செய்தல் அல்லது துறந்துவிடுதல் எதற்காகவும் முதல்வர் முகவருக்கோ, அல்லது, நிலவரத்திற்கேற்ப, முகவர் முதல்வருக்கோ சரியீடு செய்தல்வேண்டும்.

பின்னறவு செய்தலுக்கு அல்லது துறந்து விடுதலுக்கு அறிவிப்பு.

206. அத்தகைய பின்னறவு செய்தலுக்கு அல்லது துறந்து விடுதலுக்குத் தகவான அறிவிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும். இல்லையெனில், அதனால் முதல்வருக்கோ அல்லது நிலவரத்திற்கேற்ப, முகவருக்கோ விளைகிற சேதத்திற்கு ஒருவர் மற்றையவருக்கு ஈடுசெய்தல் வேண்டும்.

பின்னறவு செய்தலும் துறந்து விடுதலும் வெளிப்படையாக இயம்பப்படலாம் அல்லது உட்கிடையாக இருக்கலாம்.

207. பின்னறவு செய்தலும் துறந்து விடுதலும் வெளிப்படையாக இயம்பப்படலாம் அல்லது முறையே, முதல்வரின் அல்லது முகவரின் நடத்தையில் உட்கிடையாக இருக்கலாம்.

எடுத்துக்காட்டு.

‘அ’ என்பவர் தம்முடைய வீட்டை வாடகைக்கு விடுவதற்கு ‘ஆ’ என்பவருக்கு அதிகாரமளிக்கிறார். பிற்பாடு ‘அ’ தாமே அதை வாடகைக்கு விடுகிறார். இது ‘ஆ’வின் அதிகாரத்தை உட்கிடையாக பின்னறவு செய்தலாகும்.

முகவருடைய அதிகாரத்தின் முடிவுறுத்தம் முகவரைப் பொறுத்தும் மூன்றாமவர்களைப் பொறுத்தும் எப்போது நடைமுறைக்கு வரும்.

208. முகவர் ஒருவருடைய அதிகாரத்தின் முடிவுறுத்தமானது முகவரைப் பொறுத்தவரை அது அவருக்குத் தெரியவருமுன்பு அல்லது மூன்றாமவர்கள் பொறுத்தவரை அது அவர்களுக்குத் தெரியவருமுன்பு நடைமுறைக்கு வராது.

எடுத்துக்காட்டுகள்.

(அ). ‘அ’ என்பவர் தமக்காகப் பொருள்களை விற்குமாறு ‘ஆ’ என்பவரைப் பணிப்பதோடு அந்தப் பொருள்களின் மூலமாகக் கிடைக்கும் விலையில் நூற்றுக்கு ஐந்து விழுக்காடு தரகு தருவதாக உடன்படுகிறார். பிற்பாடு ‘அ’ கடிதம் மூலமாக ‘ஆ’வின் அதிகாரத்தைப் பின்னறவு செய்றார். ‘ஆ’ கடிதம் அனுப்பப்பட்ட பின்பு, ஆனால் அதை அவர் பெறுவதற்கு முன்பு, பொருள்களை 100 ரூபாய்க்கு விற்று விடுகிறார். விற்பனை ‘அ’வைக் கட்டுப்படுத்தும்; மற்றும் ‘ஆ’ தமது தரகாக ஐந்து ரூபாய் பெற உரிமையுடையவராவார்.

(ஆ). சென்னையிலிருக்கும் ‘அ’ என்பவர் பம்பாயிலுள்ள ஒரு பண்டகசாலையில் கிடக்கிற பஞ்சில் ஓரளவைத் தமக்காக விற்றுத் தருமாறு கடிதம் மூலமாக ‘ஆ’ என்பவரைப் பணிக்கிறார். பிற்பாடு, விற்பதற்காகக் கொடுத்த தமது அதிகாரத்தை அவர் கடிதம் மூலமாகப் பின்னறவு செய்வதோடு அந்தப் பஞ்சை சென்னைக்கு அனுப்பும்படி ‘ஆ’வைப் பணிக்கிறார். முதல் கடிதத்தைப்பற்றி அறிந்திருக்கிறவரும் ஆனால் இரண்டாவதைப்பற்றி அறிந்திராதவருமான ‘இ’ என்பவருடன் ‘ஆ’, இரண்டாவது கடிதத்தைப் பெற்றுக் கொண்டபின்பு, அவருக்கு அந்தப் பஞ்சை விற்பதற்காக ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். ‘இ’ ‘ஆ’வுக்குப் பணத்தைச் செலுத்துகிறார். அப் பணத்துடன் ‘ஆ’ தலைமறைவாகிவிடுகிறார். ‘இ’வின் செலுத்தம் ‘அ’வுக்கு எதிராகச் செல்லுபடியாகும்.

(இ). 'அ' என்பவர் தம் முகவராகிய 'ஆ' என்பவரை 'இ' என்பவருக்குக் குறிப்பிட்ட பணத்தைச் செலுத்துமாறு பணிக்கிறார். 'அ' இறக்கிறார். மற்றும் அவருடைய உயிலுக்கு 'ஈ' என்பவர் உயில் மெய்ப்பிதழ் ஒன்று பெறுகிறார். 'அ' வின் இறப்புக்குப் பின்பு, ஆனால் அதைப்பற்றிக் கேள்விப்படும் முன்பு, 'ஆ', 'இ' க்குப் பணத்தைச் செலுத்தி விடுகிறார். அந்தச் செலுத்தம் நிறைவேற்றுநரான 'ஈ' க்கு எதிராகச் செல்லுபடியாகும்.

முதல்வரின் இறப்பு அல்லது பித்துநிலைகாரணமாக முகவாண்மை முடிவுறுத்தப் பட்டதன் பேரில் முகவரின் கடமை.

209. முதல்வர் இறந்து விட்டதால் அல்லது மனச்சீர் கேடுற்றவராக ஆகிவிட்டதால் முகவாண்மை முடிவுறுத்தப்படுகிறபோது, முகவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் உரித்தங்களை அவருடைய கடந்த கால முதல்வரின் சார்பாளர்களின் சார்பாகப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் தகவான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அந்த முகவர் கட்டுப்பட்டவராவார்.

உள்முகவருடைய அதிகாரம் முடிவுறுத்தப் படுதல்.

210. ஒரு முகவருடைய அதிகாரத்தின் முடிவுறுத்தமானது, (முகவருடைய அதிகாரம் முடிவுறுத்தப்படுதல் பற்றி இதில் அடங்கியுள்ள விதிகளுக்கு உட்பட்டு) அவரால் அமர்த்தப்பட்ட எல்லா உள்முகவர்களுடைய அதிகாரத்தின் முடிவுறுத்தத்தையும் விளைவிக்கும்.

முதல்வர் பொறுத்து முகவருக்குள்ள கடமை

முதல்வரின் தொழிலை நடத்துவதில் முகவரின் கடமை.

211. தம் முதல்வரின் தொழிலை, அந்த முதல்வரால் கொடுக்கப்பட்ட பணிப்புரைகளின்படி அல்லது அத்தகைய பணிப்புரைகள் எவையும் இல்லாதிருக்கையில் அத்தகைய தொழிலை நடத்துகின்ற இடத்திலே அதே வகைத் தொழிலை நடத்துவதில் நிலவிவரும் வழக்கத்தின்படி நடத்தி வருவதற்கு முகவர் கட்டுப்பட்டவராவார். வேறுவகையாக முகவர் செயற்படுகிறபோது, இழப்பு ஏதாவது ஏற்படுமானால், தம் முதல்வருக்கு அதை ஈடுசெய்தல் வேண்டும்; மேலும் ஆதாயம் எதுவும் கிடைத்தால் அதற்கு அவர் கணக்குக் கொடுத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) கைவசமிருக்கலாகும் பணங்களை அப்போதைக்கப்போது வட்டிக்கு முதலீடு செய்கிற வழக்கமுள்ள ஒரு தொழிலை 'ஆ' என்பவருக்காக நடத்தி வருவதற்காக அமர்த்தப்பட்ட 'அ' என்னும் முகவர், அத்தகைய முதலீடு செய்யாதுவிட்டுவிடுகிறார். அத்தகைய முதலீடுகளினால் வழக்கமாகப் பெறப்பெறும் வட்டியை 'ஆ' வுக்கு 'அ' ஈடுசெய்தல் வேண்டும்.

(ஆ) கடனுக்கு விற்கிற வழக்கமில்லாத தம்முடைய ஒரு தொழிலில் 'ஆ' என்கிற தரகர் 'இ' என்பவரின் நாணயம் மிக உயர்ந்திருந்த காலத்திலே 'இ'க்கு 'அ' என்பவரின் பொருள்களைக் கடனுக்கு விற்றுவிடுகிறார். பணத்தைச் செலுத்துவதற்கு முன்'இ' நொடித்துப்போனவராக ஆகிவிடுகிறார். 'அ' வுக்கு ஏற்பட்ட இழப்பை 'ஆ' ஈடுசெய்தல் வேண்டும்.

முகவரிடம் இருக்க வேண்டிய திறமையும் முயற்சியும்.

212. ஒத்த தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆட்கள் பொதுவாக எவ்வளவு திறமை கொண்டிருப்பார்களோ அவ்வளவு திறமையுடன் ஒரு முகவர், அவரது திறமையின்மை முதல்வருக்குத் தெரிந்திருக்கிறது என்றாலன்றி, முகவாண்மைக்கான தொழிலை நடத்தக் கட்டுப்பட்டவராவார். முகவரானவர் தகவான முயற்சியுடன் செயல்படவும், தம்மிடமுள்ள திறமையைப் பயன்படுத்தவும், தம்முடைய சொந்தக் கவன்க்குறைவு, திறமையின்மை அல்லது முறைகேடான நடத்தையின்நேரடி விளைவுகளைப் பொறுத்துத் தம் முதல்வருக்குச் சரியீடுசெய்யவும் எப்போதும் கட்டுப்பட்டவராவார். ஆனால்

அத்தகைய கவனக்குறைவு, திறமையின்மை அல்லது முறை கேடான நடத்தையினால் நேரடியான முறையில் அல்லாமலோ அல்லது சேய்மைத் தொடர்புமுறையிலோ விளைவிக்கப்பட்ட இழப்பு அல்லது சேதம் பொறுத்துக் கட்டுப்பட்டவரல்லர்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) கல்கத்தாவிலிருக்கும் 'அ' என்கிற ஒரு வணிகர் லண்டனில் 'ஆ' என்கிற ஒரு முகவரைக் கொண்டிருக்கிறார். 'அ' வுக்கு அனுப்பப் பட வேண்டுமென்ற ஆணைகளுடன் 'அ' வின் கணக்கில் ஒரு பணத் தொகை 'ஆ'விடம் செலுத்தப்படுகிறது. 'ஆ' அந்தப் பணத்தை நீண்ட காலம் நிறுத்தி வைத்துக்கொள்கிறார். 'அ' அந்தப் பணம் கிடைக்கப் பெறாததன் விளைவாக, 'அ' நொடித்துப்போனவராக ஆகிவிடுகிறார். அந்தப் பணத்துக்கும், அது செலுத்தப்பட்டிருக்கவேண்டிய நாளிலிருந்து வழக்கமான விகிதப்படி வட்டிக்கும் மேற்கொண்டு எந்த நேரடி இழப் புக்கும், எடுத்துக்காட்டாக, நாணய மாற்றுவீத மாறுதலால் ஏற்படும் இழப் புக்கும், 'ஆ' கடப்பாடுடையவராவார்; ஆனால் மேற்கொண்டு எதற்கும் அன்று.

(ஆ) கடனுக்கு விற்க அதிகாரமுடைய 'அ' என்கிற ஒரு பொருள் விற்பனை முகவர், 'ஆ' என்பவரின் செல்தீர்திறம் (solvency) பற்றி உரிய மற்றும் வழக்கமான விசாரணைகளைச் செய்யாமல், 'ஆ' வுக்குக் கடனுக்கு விற்கிறார். 'ஆ' அத்தகைய விற்பனையின்போது நொடித்துப்போனவராயிருக்கிறார். அதன்மூலம் உற்ற எந்த இழப்புப் பொறுத்தும் 'அ' தம் முதல்வருக்குச் சரியீடு செய்தல் வேண்டும்.

(இ) ஒரு கப்பலைப் பொறுத்து ஒரு காப்பீடு செய்ய 'ஆ' என் பவரால் அமர்த்தப்பட்ட 'அ' என்கிற ஒரு காப்பீட்டுத் தரகர், காப்பீட்டு ஆவணத்தில் வழக்கமான வரைக்கட்டுக் கூறுகள் புகுத்தப்பட்டிருக்கின் றனவா என்று பார்க்காமல் விட்டுவிடுகிறார். பிற்பாடு அந்தக் கப்பல் இழக்கப்படுகிறது. வரைக்கட்டுக் கூறுகள் விடுபட்டதன் விளைவாகக் கப்பற் காப்புறுதி அளித்தவர்களிடமிருந்து எதுவும் வசூலிக்கப்படமுடியவில்லை. 'ஆ' வுக்கு அந்த இழப்பை 'அ' ஈடு செய்யக் கட்டுப்பட்டவராவார்.

(ஈ) ஒரு குறிப்பிட்ட கப்பலின் மூலமாக 100 பொதிப் பஞ்சை அனுப்புமாறு, இங்கிலாந்திலிருக்கும் 'அ' என்கிற வணிகர், முகவாண்மையை ஏற்றுக்கொண்டுள்ள பம்பாயிலிருக்கும் 'ஆ' என்கிற தம் முகவரைப் பணிக் கிறார். பஞ்சை அனுப்புவது தம் அதிகாரத்தில் இருந்தும், 'ஆ' அவ்வாறு செய்யாது விடுகிறார். கப்பல் நல்லபடியாக (safely) இங்கிலாந்தை வந்தடைகிறது. அது வந்து சேர்ந்தவுடனே பஞ்சின் விலை உயர்ந்துவிடுகிறது. 'அ' வுக்குக் கப்பல் வந்து சேர்ந்த பொழுது அந்த 100 பொதியினால் அவர் பெற்றிருக்கலாகும் ஆதாயத்துக்கு ஈடுசெய்ய 'ஆ' கட்டுப்பட்டவராவார். ஆனால் பிந்திய விலை உயர்வினால் அவர் பெற்றிருக்கலாகும் எந்த ஆதாயத்துக்கும் அன்று.

முகவரின் கணக்குகள்.

213. கோரப்படும்போது, முகவர் தம் முதல்வருக்கு முறையான கணக்குகளைத் தரக் கட்டுப்பட்டவராவார்.

முதல்வருடன் செய்தித்தொடர்பு வைத்துக் கொள்வது முகவரின் கடமை.

214. இடர்ப்பாடான நேர்வுகளில் தம் முதல்வருடன் செய்தித் தொடர்பு வைத்துக் கொள்வதிலும் அவருடைய ஏவுரைகளைப் பெறமுனைவதிலும் தகவுள்ள எல்லா முயற்சி களையும் எடுப்பது முகவர் ஒருவருடைய கடமையாகும்.

முகவாண்மைக்கான தொழிலில் முதல்வரின் இசைவில்லாமல் தம் சொந்தப் பொறுப்பில் முகவர் தொழில் புரியும்போது முதல்வரின் உரிமை.

215. ஒரு முகவர், முதலிலேயே, தம் முதல்வரது இசை வைப் பெறாமலும், தொழில் பற்றிய பொருள் குறித்துத் தாம் அறிந்துகொண்டிருக்கிற எல்லா முக்கிய விவரங்களையும் அவ ருக்குத் தெரிவிக்காமலும், முகவாண்மைக்கான தொழிலில் தம் சொந்தப் பொறுப்பில் நடவடிக்கை மேற்கொண்டால் முதல்வர் அந்த நடவடிக்கையை மறுதலிக்கலாம், முக்கியமான உண்மை விவரம் எதுவும் தமக்குத் தெரியாதபடி நேர்மையற்ற முறை யில் முகவரால் மறைக்கப் பட்டிருக்கிறது, அல்லது முகவரின் நடவடிக்கைகள் தமக்கு நன்மை பயக்காதனவையாக இருக்கின்றன என்பதை நேர்வு மெய்ப்பித்துக் காட்டுமானால்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) தமது நிலச் சொத்தை விற்கும்படி 'அ' என்பவர் 'ஆ' என்பவரைப் பணிக்கிறார். 'ஆ' அந்தச் சொத்தைத் தமக்காகவே 'இ' என்பவர் பேரில் விலைக்கு வாங்கிக்கொள்கிறார். 'ஆ' தமக்காகவே அந்தச்சொத்தை விலைக்கு வாங்கிக் கொண்டார் என்பதைக் கண்டுபிடித்ததன்பேரில், 'ஆ' முக்கியமான உண்மை விவரம் எதையும் நேர்மையற்ற முறையில் மறைத்திருக்கிறார் என்று அல்லது அந்த விற்பனை தமக்கு நன்மை பயக்காதது என்று 'அ' நிலைநாட்ட முடியுமானால் அந்த விற்பனையை அவர் மறுதலிக்கலாம்.

(ஆ). 'அ' என்பவர் தம் நிலச் சொத்தை விற்கும்படி 'ஆ' என்பவரைப் பணிக்கிறார். அதனை விற்பதற்கு முன் அந்த நிலச் சொத்தைப் பார்வையிட்டபோது 'அ' அறிந்திராத சுரங்கம் ஒன்று இருப்பதாக 'ஆ' கண்டுபிடிக்கிறார். அந்த நிலச் சொத்தைத் தாமே விலைக்கு வாங்கிக் கொள்ள விரும்புவதாக 'அ'வுக்கு 'ஆ' தெரிவிக்கிறார். ஆனால் கனிப்பொருளைத் தாம் கண்டுபிடித்ததை மறைத்துவிடுகிறார். அந்தக்கனிப்பொருள் இருப்பதை அறியாது நிலச்சொத்தை விலைக்கு வாங்கிக்கொள்ள 'அ' இசைவளிக்கிறார். 'ஆ' அந்த நிலச் சொத்தினை விலைக்கு வாங்கியபோதே அந்தக் கனிப்பொருள் இருப்பதை 'ஆ' அறிந்திருந்தார் என்பதை 'அ' கண்டு பிடித்ததன்பேரில் 'அ' தம்முடைய தெரிவின்பேரில் அந்த விற்பனையை மறுதலிக்கலாம் அல்லது ஏற்றுக்கொள்ளலாம்.

216. தம்முடைய முதல்வருக்குத் தெரியாமல், முகவர் ஒருவர் முகவாண்மைக்கான தொழிலில், தம் முதல்வருக்காக அல்லாமல், தம் சொந்தப் பொறுப்பில் தொழில்புரிவாரானால், அந்த நடவடிக்கைகளிலிருந்து உண்டாகியிருக்கலாகும் நன்மை எதையும் அந்த முகவரிடமிருந்து கோருவதற்கு முதல்வர் உரிமையுடையவராவார். முகவாண்மைக்கான தொழிலில் தம் சொந்தப் பொறுப்பில் தொழில் புரிகிற முகவரால் அடையப்பெற்ற நன்மைக்கு முதல்வரின் உரிமை.

எடுத்துக்காட்டு.

'அ' என்பவர் தமக்கு ஒரு குறிப்பிட்ட வீட்டை விலைக்கு வாங்கும்படி, தம் முகவராகிய 'ஆ' என்பவரைப் பணிக்கிறார். அந்த வீட்டை விலைக்கு வாங்கமுடியாது என்று 'அ' விடம் சொல்லிவிட்டு 'ஆ'வே அதைத் தமக்கு விலைக்கு வாங்கிக் கொள்கிறார். அந்த வீட்டை 'ஆ' விலைக்கு வாங்கிக் கொண்டார் என்பதைக் கண்டு பிடித்ததன்பேரில் 'ஆ' வாங்கிய விலைக்கே அதைத் தமக்கு விற்கும்படி 'ஆ' வை, 'அ' கட்டாயப்படுத்தலாம்.

217. முகவாண்மைக்கான தொழிலில் முதல்வருக்காகப் பெறப்பட்ட தொகைகள் எவற்றிலிருந்தும், அத்தகைய தொழில் நடத்துகையில் தாம் செலுத்திய முன்பணம் அல்லது உரிய முறையில் செய்யும்படி நேர்ந்த செலவுகள், மேலும், முகவராகச் செயற்படுவதற்காகத் தமக்குக் கொடுக்கப்படத் தக்கதாகலாகும் ஊதியம் ஆகியவை தொடர்பாகத் தமக்குக் கொடுபடவேண்டிய பணங்களை எல்லாம் முகவர் நிறுத்திவைத்துக்கொள்ளலாம். முதல்வருக்காகப் பெறப்பட்ட தொகைகளிலிருந்து நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு முகவரின் உரிமை.

218. அத்தகைய கழிவுகளுக்குட்பட்டுத் தம் முதல்வருக்காகப் பெறப்பட்ட எல்லாத் தொகைகளையும் முகவருக்குச் செலுத்துவதற்கு முகவர் கட்டுப்பட்டிருக்கிறார். முதல்வருக்காகப் பெறப்பட்ட தொகைகளைச் செலுத்துவதற்கு முகவரின் கடமை.

219. தனி ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில், செயல் எதையும் புரிவதற்கான செலுத்தம் அந்தச் செயல் முடிவடையும் வரையில், முகவருக்குக் கொடுபடவேண்டியதாயிராது; ஆனால், விற்பனைக்காகத் தமக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் முழுவதும் விற்கப்படாமலிருந்தாலும், அல்லது விற்பனையானது உள்ளபடியே முடிவடையாமலிருந்தாலும் விற்கப்பட்ட பொருள்களுக்காகத் தம்மால் பெறப்பட்ட பணத்தை முகவர் நிறுத்தி வைத்துக்கொள்ளலாம். முகவரின் ஊதியம் எப்போது கொடுபடவேண்டியதாகிறது.

முறைகேடாகநடத்தப்பட்ட தொழிலுக்கு ஊதியம் பெற முகவருக்கு உரிமை இல்லை.

220. முகவாண்மைத் தொழிலில் முறைகேடாக நடந்திருக்கிற ஒரு முகவருக்கு அந்தத் தொழிலில் முறைகேடாக நடத்தப்பட்ட பகுதி பொறுத்து ஊதியம்எதுவும்பெற உரிமை இல்லை.

எடுத்துக்காட்டுகள்.

(அ) ரூபாய் 1,00,000த்தை 'இ' என்பவரிடமிருந்து வசூலித்து, அதை நல்ல பிணையத்தின்பேரில் முதலீடு செய்யும்படி 'ஆ' என்பவரை 'அ' என்பவர் அமர்த்துகிறார். அந்த ரூபாய் 1,00,000த்தை 'ஆ' வசூலித்து ரூபாய்90,000-த்தை நல்ல பிணையத்தின்பேரில் முதலீடு செய்கிறார். ஆனால் ரூபாய் 10,000த்தை கெட்டதெனத் தாம் அறிந்திருக்கவேண்டிய பிணையத்தின் பேரில் முதலீடு செய்கிறார். அதனால் 'அ' ரூபாய் 2,000-த்தை இழக்கிறார். ரூபாய் 1,00,000த்தை வசூல் செய்ததற்கும், ரூபாய் 90,000த்தை முதலீடு செய்ததற்கும் ஊதியம் பெறும் உரிமை 'ஆ' வுக்கு உண்டு. ரூபாய் 10,000த்தை முதலீடு செய்ததற்காக எதுவும் பெற அவருக்கு உரிமை இல்லை. மேலும் 'ஆ' வுக்கு ரூபாய் 2,000த்தை ஈடுசெய்தல் வேண்டும்.

(ஆ). 'இ' என்பவரிடமிருந்து ரூபாய் 1,000த்தை வசூலிப்பதற்காக 'ஆ' என்பவரை 'அ' என்பவர் அமர்த்துகிறார். 'ஆ' வின் முறைகேடான நடத்தையினால் அந்தப் பணம் வசூலாகவில்லை. தமது பணிகளுக்காக எந்த ஊதியமும் பெறும் உரிமை 'ஆ' வுக்கு இல்லை. மேலும் இழப்பை ஈடு செய்தல் வேண்டும்.

முதல்வரின் சொத்தின்மீது முகவருக்குள்ள பற்றுரிமை.

221. ஒரு முகவர் மாறான ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில், தாம் பெற்றிருக்கிற முதல்வருடைய பொருள்கள், வரைதாள்கள் (Papers), வேறு சொத்து—அது அசையும் சொத்தாயினும் சரி, அசையாச் சொத்தாயினும் சரி—ஆகியவற்றை, அவை பொறுத்த தரகு, செலவுகள், பணிகள் ஆகியவற்றுக்காக அவருக்குக் கொடுபடவேண்டிய தொகை செலுத்தப்படும் வரையில் அல்லது அவருக்குக் கணக்குத் தீர்க்கப்படும் வரையில், நிறுத்திவைத்துக்கொள்ள உரிமையுடையவராவார்.

முகவரைப் பொறுத்து முதல்வருக்குள்ள கடமை

சட்டப்படியுள்ள செயல்களின் விளைவுகள் பொறுத்துமுகவர் ஈட்டுறுதி செய்யப் படுதல் வேண்டும்.

222. ஒரு முகவரை வேலைக்கு அமர்த்தியவர், அத்தகைய முகவர் தமக்குஅளிக்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துகையில், அவர் செய்த சட்டப்படியுள்ள செயல்கள் அனைத்தின் விளைவுகளும் பொறுத்து அவருக்கு ஈட்டுறுதி செய்யக் கட்டுப்பட்டவர் ஆவார்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) கல்கத்தாவிலிருக்கும் 'அ' என்பவரின் ஏவுரைகளின்படி சிங்கப்பூரிலிருக்கும் 'ஆ' என்பவர் குறிப்பிட்ட பொருள்களை 'இ' என்பவருக்கு ஒப்புவிக்க அவருடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'ஆ' வுக்கு 'அ' பொருள்களை அனுப்பவில்லை. ஒப்பந்த மீறுகைக்காக 'இ', 'ஆ' மீது வழக்கிடுகிறார். அந்த உரிமைவழக்கைப் பற்றி 'ஆ' 'அ' வுக்குத் தெரிவிக்கிறார். அந்த உரிமைவழக்கில் எதிர்வழக்காடும்படி 'அ' அவருக்கு அதிகாரம் அளிக்கிறார். 'ஆ' எதிர்வழக்காடி அதனால் இழப்பீடும் செலவுத்தொகையும் செலுத்தக் கட்டாயப் படுத்தப்படுகிறார்; மேலும் செலவுகளையும் செய்ய நேரிடுகின்றது. அத்தகைய இழப்பீடு, செலவுத்தொகைகள், செலவுகள் ஆகியவற்றுக்காக 'ஆ' வுக்கு 'அ' கடப்பாடுடையவராவார்.

(ஆ) கல்கத்தாவிலுள்ள 'ஆ' என்கிற தரகர், அங்குள்ள வணிகரான 'அ' என்பவரின் ஆணைகளின்படி 'அ' வுக்காக, பத்துப் பீப்பாய் எண்ணெய் விலைக்கு வாங்க 'இ' என்பவருடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். பிற்பாடு 'அ' எண்ணெயைப் பெற்றுக் கொள்ள மறுக்கிறார்: மற்றும் 'இ', 'ஆ' வின் மீது வழக்கிடுகிறார். இதை 'ஆ', 'அ' வுக்குத் தெரிவிக்கிறார். ஒப்பந்தத்தை முற்றிலும் 'அ' மறுதலிக்கிறார். 'ஆ' எதிர் வழக்காடுகிறார். ஆனால் வெற்றியடையவில்லை. ஆகவே இழப்பீட்டையும் செலவுத்தொகையையும் 'ஆ' செலுத்த

வேண்டியதாகிறது. மேலும் செலவுகளையும் செய்ய நேரிடுகிறது. அத்தகைய இழப்பீடு, செலவுத்தொகைகள், செலவுகள் ஆகியவற்றுக்காக 'ஆ' வுக்கு 'அ' கடப்பாடுடையவராவார்.

நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களின் விளைவுகளின்மீது முகவர் ஈட்டுறுதி செய்யப்படுதல் வேண்டும்.

223. ஒரு செயலைச் செய்வதற்கு ஓர் ஆள் மற்றொருவரை அமர்த்தி அந்த முகவரும் நல்லெண்ணத்துடன் அச் செயலைச் செய்யுமிடத்து, அது மூன்றாமவரின் உரிமைகளுக்குக் கேடு ஒன்றை உண்டாக்குகிறபோதிலும், அச் செயலின் விளைவுகளின்மீது வேலைக்கு அமர்த்தியவர் முகவருக்கு ஈட்டுறுதி செய்யக் கடப்பாடுடையவராவார்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) தீர்ப்பாணை பெறுநரும் 'ஆ' என்பவரின் பொருள்களின்மீது நிறைவேற்று நடவடிக்கைக்கு உரிமையுடையவருமான 'அ' என்பவர் நீதிமன்ற அலுவலரைக் குறிப்பிட்ட பொருள்களை, அவை 'ஆ'வின் பொருள்கள் என்று எடுத்துரைத்துக் கைப்பற்றும்படி கோருகிறார். அந்த அலுவலர் அப்பொருள்களைக் கைப்பற்றுகிறார்; ஆனால் அப்பொருள்களின் உண்மையான சொந்தக்காரரான 'இ' என்பவரால் வழக்கிடப்படுகிறார். 'அ'வின் பணிப்புரைகளுக்குப் பணிந்ததன் விளைவாக 'இ' வுக்குச் செலுத்தும்படி அந்த அலுவலர் கட்டாயப்படுத்தப்பட்ட தொகைக்காக அவருக்கு ஈட்டுறுதி செய்ய 'அ' கடப்பாடுடையவராவார்.

(ஆ) 'அ' என்பவரின் உடைமையிலுள்ள பொருள்களை 'அ'வின் வேண்டுதலின் பேரில் 'ஆ' என்பவர் விற்கிறார். அந்தப் பொருள்களை விற்பனை செய்வதற்கு 'அ'வுக்கு எந்த உரிமையும் கிடையாது. 'ஆ' வுக்கு இது தெரியாது. மற்றும் 'ஆ' விற்றுமுதலை 'அ'விடம் கொடுத்து விடுகிறார். பிற்பாடு அந்தப் பொருள்களின் உண்மையான சொந்தக்காரரான 'இ' என்பவர் 'ஆ' வின் மீது வழக்கிட்டு அப்பொருள்களின் மதிப்புத் தொகையையும் செலவுத்தொகையையும் வசூலிக்கிறார். 'இ' க்குக் கட்டாயமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்ட தொகைக்கும் 'ஆ'வின் சொந்தச் செலவிற்கும் 'ஆ' வுக்கு ஈட்டுறுதி செய்ய 'அ' கடப்பாடுடையவராவார்.

ஒரு குற்றமுறு செயலைச் செய்வதற்காக முகவரை வேலைக்கு அமர்த்தியவருக்குக் கடப்பாடின்மை.

224. ஒரு குற்றமுறு செயலைச் செய்வதற்கு ஓர் ஆள் மற்றொருவரை அமர்த்துகிறவிடத்து, வேலைக்கு அமர்த்தியவர் அந்தச் செயலின் விளைவுகள் பொறுத்து ஒன்று வெளிப்படையான வாக்குறுதியின் பேரிலோ, உட்கிடையான வாக்குறுதியின் பேரிலோ, அந்த முகவருக்கு ஈட்டுறுதி செய்யக் கடப்பாடுடையவரல்லர்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'இ' என்பவரை அடிப்பதற்காக 'ஆ' என்பவரை 'அ' என்பவர் அமர்த்துகிறார். அச் செயலால் ஏற்படும் எல்லா விளைவுகளையும் பொறுத்து 'ஆ'வுக்கு ஈட்டுறுதி செய்ய அவர் உடன்படுகிறார். அதன் பேரில் 'அ' 'இ'யை அடிக்கிறார். அவ்வாறு செய்ததற்காக 'ஆ' 'இ'க்கு இழப்பீடு செலுத்த வேண்டியதாகிறது. அந்த இழப்பீட்டுக்கு 'ஆ'வுக்கு ஈட்டுறுதி செய்ய 'அ' கடப்பாடுடையவரல்லர்.

(ஆ). 'அ' என்பவரின் வேண்டுகோளின் பேரில் ஒரு செய்தித்தாளின் உரிமையாளரான 'ஆ' என்பவர் அந்தச் செய்தித்தாளில், 'இ' என்பவரைப் பற்றி எழுத்து வழி அவதூறு ஒன்றை வெளியிடுகிறார். அந்த வெளியீட்டின் விளைவுகள் பொறுத்தும், அவை குறித்த ஏதேனும் நடவடிக்கையின் எல்லாச் செலவுத்தொகைகளுக்கும், இழப்பீட்டுக்கும், 'ஆ'வுக்கு ஈட்டுறுதி செய்ய 'அ' உடன்படுகிறார். 'ஆ', 'இ'யினால் வழக்கிடப்படுகிறார். அதனால் 'ஆ' இழப்பீடு கொடுக்க வேண்டியதாகிறது. மேலும் வேறு செலவுகளையும் அவர் செய்ய நேரிடுகிறது. ஈட்டுறுதியின் பேரில் 'ஆ'வுக்கு 'அ' கடப்பாடுடையவரல்லர்.

முதல்வரின் கவனக்குறைவால் விளையும் கேட்டிற்காக முவருக்குச் சரியீடு.

225. முதல்வரின் கவனக்குறைவால் அல்லது திறமையின்மையால், அவருடைய முகவருக்கு விளையும் கேடு பொறுத்து அத்தகைய முகவருக்கு முதல்வர் சரியீடு செய்தல் வேண்டும்

எடுத்துக்காட்டு.

ஒரு வீட்டினைக் கட்டுவதற்குக் கொத்தனாராக 'ஆ' என்பவரை 'அ' என்பவர் அமர்த்துகிறார். அவரே சாரத்தைக் கட்டுகிறார். அந்தச் சாரம் திறமை இன்றிக் கட்டப்படுகின்றது. அதன் விளைவாக 'ஆ' காயமடைகிறார். 'ஆ'வுக்கு 'அ' சரியீடு செய்தல் வேண்டும்.

மூன்றாமவர்களுடன் செய்யப்படும் ஒப்பந்தங்களின் மீது முகவாண்மை உண்டாக்கும் விளைவு

முகவரின் ஒப்பந்தங்களை நிறைவேற்றுதலும் அவற்றின் விளைவுகளும்.

226. ஒரு முகவர் மூலம் செய்துகொண்ட ஒப்பந்தங்களும், ஒரு முகவரால் செய்யப்பட்ட செயல்களிலிருந்து எழும் கடமைப் பொறுப்புகளும், அந்த ஒப்பந்தங்களையும் அந்தச் செயல்களையும் முதல்வர் தாமே செய்திருந்தாற்போன்ற அதே முறையில் நிறைவேற்றப்படலாம்; மற்றும் அவை அதே சட்ட விளைவுகளைக் கொண்டிருக்கும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'ஆ' என்பவரிடமிருந்து பொருள்களை அவர் அப் பொருள்களின் விற்பனைக்கான முகவர் என்று அறிந்தே, ஆனால் முதல்வர் யார் என்பதை அறியாது, 'அ' என்பவர் விலைக்கு வாங்குகிறார். 'ஆ'வின் முதல்வரே அப் பொருள்களுக்கான விலையை 'அ'விடமிருந்து கோருவதற்கு உரிமையுடைய ஆளாவார். மற்றும் முதல்வரால் தொடரப்படும் வழக்கில், அந்தக் கோரிக்கைக்கு எதிராக 'ஆ'விடமிருந்து தமக்குக் கொடுபட வேண்டிய கடனை 'அ' எதிர்க்கட்டுச் செய்ய முடியாது.

(ஆ). 'ஆ' என்பவரின் முகவரும் அவர் பொருட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரமுடையவருமான 'அ' என்பவர் 'இ' என்பவரிடமிருந்து 'ஆ'வுக்குக் கொடுபட வேண்டிய ஒரு பணத் தொகையைப் பெற்றுக்கொள்கிறார். அந்தத் தொகையை 'ஆ'வுக்குச் செலுத்த வேண்டிய கடமைப் பொறுப்பிலிருந்து 'இ' விடுவிக்கப்படுகிறார்.

முகவர் அதிகாரத்திற்கும் மிகையாகச் செய்யும் போது, முதல்வர் எந்த அளவுக்குக் கட்டுப்படுவார்.

227. ஒரு முகவர் தாம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதற்கு அதிகமாகச் செய்யும்போதும், அவர் செய்ததில் அவரது அதிகாரத்திற்குள் அடங்கும் பகுதியானது, அவரது அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட பகுதியிலிருந்து பிரிக்கப்பட முடியும் என்றிருக்கும் போதும் அவர் செய்ததில் எவ்வளவு அவரது அதிகாரத்திற்குள் இருக்கிறதோ அவ்வளவு மட்டுமே அவரையும் அவருடைய முதல்வரையும் பொறுத்தமட்டில் கட்டுப்படுத்துவதாயிருக்கும்.

எடுத்துக்காட்டு.

ஒரு கப்பலுக்கும், பொருள்களுக்கும் சொந்தக்காரரான 'அ' என்பவர் அக் கப்பலின் மீது ரூபாய் 4,000க்குக் காப்பீடு பெறுமாறு 'ஆ' என்பவருக்கு அதிகாரமளிக்கிறார். அந்தக் கப்பலின் மீது ரூபாய் 4,000க்கு ஒரு காப்பீட்டு ஆவணத்தையும் பொருள்களின் மீது அதே தொகைக்கு மற்றொன்றையும் 'ஆ' பெறுகிறார். கப்பலின் மீதுள்ள காப்பீட்டு ஆவணத்துக்கான தவணைக் கட்டணத்தைச் செலுத்த 'அ' கட்டுப்பட்டு இருக்கிறார். ஆனால் அப் பொருள்களின் மீதுள்ள காப்பீட்டு ஆவணத்துக்கான தவணைக் கட்டணத்தையன்று.

முகவரின் அதிகாரத்திற்கும் மிகையாகச் செய்தது பிரிக்கப்பட முடியாதபோது, முதல்வர் கட்டுப்பட்டவரல்லர்.

228. ஒரு முகவர் தாம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதை விட அதிகமாக செய்கிறவிடத்தும், அவர் செய்ததில் அவரது அதிகாரத்துக்குட்பட்ட பகுதியானது, அவரது அதிகார வீச்சுக்கு அப்பாற்பட்டு அவர் செய்வதானது அதிகார வீச்சுக்குள் இருப்பதிலிருந்து பிரிக்கப்பட முடியாதிருக்குமிடத்தும், அந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முதல்வர் கட்டுப்பட்டவரல்லர்.

எடுத்துக்காட்டு.

தமக்காக 500 செம்மறி ஆடுகளை விலைக்கு வாங்கும்படி 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு அதிகாரமளிக்கிறார். 'ஆ' 500 செம்மறி ஆடுகளையும் 200 செம்மறி ஆட்டுக் குட்டிகளையும் ஒரு மொத்தத் தொகையான ரூபாய் 6,000க்கு விலைக்கு வாங்குகிறார். இந்த நடவடிக்கை முழுவதையுமே 'அ' மறுதலிக்கலாம்.

229. முகவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவிப்பு அல்லது முகவரால் பெறப்பட்ட தகவல் எதுவும், அது முதல்வருக்காக அவரால் நடத்தப்பட்ட தொழில் நடப்பு முறையில் கொடுக்கப்பட்டு அல்லது பெறப்பட்டு இருக்குமானால், அது, அந்த முதல்வரையும் மூன்றாமவர்களையும் பொறுத்தமட்டில், முதல்வருக்குக் கொடுக்கப்பட்டிருந்ததுபோன்ற அல்லது, முதல்வரால் பெறப்பட்டிருந்தது போன்ற அதே சட்ட விளைவுகளைக் கொண்டிருக்கும். முகவருக்குக் கொடுக்கப்பட்ட அறிவிப்பின் விளைவுகள்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) குறிப்பிட்ட பொருள்களின் சொந்தக்காரராகப் பார்வைக்குத் தென்படுகிற 'இ' என்பவரிடமிருந்து அப்பொருள்களை விலைக்கு வாங்குவதற்காக 'அ' என்பவர் 'ஆ' என்பவரால் அமர்த்தப்பட்டு, அவ்வாறே அவற்றை விலைக்கு வாங்குகிறார். விற்பனைக்காகப் பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருந்தபோது, அப் பொருள்கள் உண்மையிலேயே 'ஈ' என்பவருக்குச் சொந்தமானவை என்பதை 'அ' அறிந்து கொள்கிறார். ஆனால் அந்த உண்மை விவரம் 'ஆ' வுக்குத் தெரியாது. 'இ', 'ஆ' வுக்குக் கொடுக்க வேண்டிய கடனைப் பொருள்களுக்குரிய விலைக்கு எதிராக எதிர்க்கட்டுச் செய்யும் உரிமை 'அ' வுக்குக் கிடையாது.

(ஆ) பொருள்களின் சொந்தக்காரராகப் பார்வைக்குத் தென்படுகிற 'இ' என்பவரிடமிருந்து அப்பொருள்களை விலைக்கு வாங்குவதற்காக 'அ' என்பவர் 'ஆ' என்பவரால் அமர்த்தப்படுகிறார். 'அ' அவ்வாறு அமர்த்தப்படுவதற்கு முன்பு 'இ'யின் பணியாளராக இருந்தார். அப்போது அந்தப் பொருள்கள் உண்மையிலேயே 'ஈ' என்பவருக்குச் சொந்தமானவை என்பதை 'அ' அறிந்திருந்தார். ஆனால் 'ஆ'வுக்கு அந்தச் செய்தி தெரியாது. இதைத் தம் முகவர் அறிந்திருந்த போதிலும் 'ஆ'வுக்கு 'இ' கொடுக்க வேண்டிய கடனை அப் பொருள்களின் விலைக்கு எதிராக 'ஆ' எதிர்க்கட்டுச் செய்யலாம்.

230. அந்தப்படிக்கு ஒப்பந்தம் எதுவும் இல்லாதிருக்கையில், ஒரு முகவர் தம் முதல்வருக்காகத் தம்மால் செய்யப்பட்ட ஒப்பந்தங்களைத் தம் சொந்த முறையில் நிறைவேற்ற முடியாது என்பதோடு அவர் தம் சொந்த முறையில் அவற்றால் கட்டுப்பட்டிருக்கவும் மாட்டார். முகவர், முதல்வரின் சார்பாகச் செய்துகொண்ட ஒப்பந்தங்களை, தம் சொந்த முறையில் நிறைவேற்றவோ அவற்றால் கட்டுப் படுத்தப்படவோ முடியாது.

பின்வரும் நேர்வுகளில் அத்தகைய ஒப்பந்தம் ஒன்று இருப்பதாகத் துணிபுகொள்ளுதல் வேண்டும் :— மாறான ஒப்பந்தம் இருப்பதாகத் துணிபு கொள்ளுதல்.

(1) வெளிநாட்டில் குடியிருக்கிற ஒரு வணிகருக்காக, பொருள்களை விற்கவோ, வாங்கவோ ஒரு முகவரால் ஒப்பந்தம் செய்யப்படுமிடத்து ;

(2) தம் முதல்வரின் பெயரை ஒரு முகவர் வெளிப்படுத்தாதவிடத்து ;

(3) பெயர் வெளிப்படுத்தப்பட்டிருந்தபோதிலும், முதல்வர் வழக்கிடப்பட முடியாதவிடத்து.

231. ஒரு முகவரானவர், அவர் ஒரு முகவர் என்பதை அறியாதவராயிருப்பதோடு முகவர் என்று எண்ணுவதற்குக் காரணம் கொண்டிராதவராயுமுள்ள ஓர் ஆளுடன் ஓர் பெயர் வெளிப் படுத்தப்படாத முகவரால் செய்யப்பட்ட

ஓர் ஒப்பந்தத்தின் தரப்பினர் களுடைய உரிமைகள்.

ஒப்பந்தம் செய்து கொள்கிறாரென்றால், அவருடைய முதல்வர் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி கோரலாம் ; ஆனால், ஒப்பந்தம் செய்து கொள்ளும் மற்றைய தரப்பினர், அந்த முகவரே முதல்வராய் இருந்தால் அந்த முகவருக்கெதிராக எந்த உரிமைகளை அவர் பெற்றிருந்திருப்பாரோ, அதேஉரிமை களை அந்த முதல்வருக்கெதிராகப் பெற்றிருப்பார்.

ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன்பே, முதல்வர் தம்மை வெளிப்படுத்திக்கொண்டால், ஒப்பந்தம் செய்துகொள்ளும் மற்றைய தரப்பினர் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுக்க லாம், ஒப்பந்தத்தில் முதல்வர் யார் என்பதை அவர் அறிந் திருந்தாலோ, அல்லது அந்த முகவரானவர் ஒரு முதல்வர் அல்லர் என்பதை அவர் அறிந்திருந்தாலோ, அவர் அந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டிருக்கமாட்டார் என்று அவர் காட்ட முடியுமானால்.

முதல்வர் என்று கருதப்பட்ட முக வருடன் செய்து கொண்ட ஒப்பந் தத்தை நிறை வேற்றுதல்.

232. ஒருவர் மற்றொருவருடன், அந்த மற்றையவர் ஒரு முகவர் என்பதை அறியாமல் அல்லது முகவரென்று எண்ணு வதற்குத் தகவான காரணம் பெற்றிராமல் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளுமிடத்து, முதல்வரானவர், அவர் அந்த ஒப்பந் தத்தை நிறைவேற்றும்படி கோருவாரானால், அந்த முகவருக் கும் ஒப்பந்தத்தில் மற்றைய தரப்பினருக்கும் இடையே இருந்துவரும் உரிமைகளுக்கும் கடமைப்பொறுப்புகளுக்கும் உட்பட்டு மட்டுமே அத்தகைய நிறைவேற்றுகையைப் பெற முடியும்.

எடுத்துக்காட்டு.

'ஆ' என்பவருக்கு ரூபாய் 500 கொடுக்க வேண்டிய 'அ' என் பவர் 'ஆ' வுக்கு ரூபாய் 1,000 மதிப்புடைய அரிசியை விற்கிறார். இந்த நடவடிக்கையில் 'இ' என்பவரின் முகவராக 'அ' செயற்படுகிறார். ஆனால் நிலைமை இத்தகையது என்று 'ஆ' அறியவுமில்லை, அறிவதற்குத் தகவான காரணங்களும் அவருக்கு இல்லை. 'அ'வின் கடனை எதிர்க்கட்டுச் செய்ய அவருக்கு இசைவளிக்காமல் 'ஆ' அரிசியை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று 'இ' கட்டாயப்படுத்த முடியாது.

சொந்த முறை யில் கடப்பாடு டையவரான முக ருடன் நடவடிக் கை வைத்துக் கொள்கிற ஆளுக் குள்ள உரிமை.

233. ஒரு முகவர் தம் சொந்த முறையில் கடப்பாடுடையவ ராயிருக்கும் நிலைகளில், அவரோடு நடவடிக்கை வைத்துக் கொள்ளும் ஓர் ஆள், அவரையோ அல்லது அவருடைய முதல்வரையோ, அல்லது அவர்கள் இருவரையுமோ கடப் பாடுடையவராக ஆக்கலாம்.

எடுத்துக்காட்டு.

'ஆ' என்பவருக்கு 100 பொதிப் பஞ்சை விற்க அவருடன் 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்; பிற்பாடு அவர் 'ஆ', 'இ' என்பவரின் முகவராகச் செயற்பட்டார் என்பதை அறிந்து கொள்கிறார். பஞ்சின் விலைக்காக 'ஆ' மீதோ, 'இ' மீதோ அல்லது இருவர் மீதுமோ 'அ' வழக்கிடலாம்.

முதல்வர்மட்டுமே அல்லது முகவர் மட்டுமேதனித்துக் கடப்பாடுடைய வராக்கப்படுவார் என்ற நம்பிக்கையின் பேரில் முகவர் அல்லது முதல் வரைச் செயற் படும்படி தூண்டு வதன் விளைவு.

234. ஒரு முகவரோடு ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிற ஓர் ஆள், முதல்வர் மட்டுமே கடப்பாடுடையவராக ஆக்கப்படு வார் என்ற நம்பிக்கையின் பேரில் செயற்படும்படி அந்த முக வரைத் தூண்டுகிறார் என்றால், அல்லது முகவர் மட்டுமே கடப் பாடுடையவராக ஆக்கப்படுவார் என்ற நம்பிக்கையின் பேரில் செயற்படும்படி முதல்வரைத் தூண்டுகிறார் என்றால், பிற்பாடு, முறையே முகவரை அல்லது முதல்வரைக் கடப்பாடுடையவராக அவர் ஆக்கமுடியாது.

235. தாம் மற்றொருவருடைய அதிகாரமளிக்கப்பட்ட முகவர் எனப் பொய்யாக எடுத்துரைக்கிறவரும், அதன்மூலம் அத்தகைய முகவர் என்ற முறையில் தம்மோடு நடவடிக்கை வைத்துக்கொள்ள ஒரு மூன்றாமவரைத் தூண்டுகிறவருமான ஓர் ஆள், அவரை வேலைக்கு அமர்த்தியவராகச் சொல்லப் பட்டவர் அவருடைய செயல்களை ஏற்றுறுதி செய்யவில்லை என்றால், அந்த நடவடிக்கையால் அந்த மூன்றாமவர் உற்றிருக் கிற இழப்பு அல்லது சேதம் எதனையும் பொறுத்து அவருக்குச் சரியீடு செய்யக் கடப்பாடுடையவராவார்.

முகவரெனப் பாசாங்கு செய்து செயற்படுபவரின் கடப்பாடு.

236. எந்த ஆளுடன் ஒரு முகவர் என்ற தன்மையில் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டிருக்கிறதோ அந்த ஆள் முகவராக அல்லாமல் தம் சொந்தப் பொறுப்பில் உண்மையில் செயற்பட்டிருந்தாரென்றால், அதன் நிறைவேற்றுகையைக் கோருவதற்கு அவர் உரிமை உடையவர் ஆகார்.

முகவர் என்று பொய்யாக ஒப்பந்தம் செய்து கொள்ளும் ஆள் நிறைவேற்றுகைக்கு உரிமையுடையவர் ஆகார்.

237. அதிகாரமின்றி ஒரு முகவர் தம் முதல்வரின் சார்பாகச் செயல்களைச் செய்திருக்கிறபோது அல்லது மூன்றாமவர் களுக்குக் கடமைப்பொறுப்புகளை ஏற்றிருக்கும்போது, அத்தகைய செயல்களும் கடமைப்பொறுப்புகளும் அந்த முகவரது அதிகாரத்தின் வீச்சுக்குட்பட்டவை என ஒரு முதல்வர் தம் சொற்களால் அல்லது நடத்தையால் அந்த மூன்றாமவர்களை நம்புமாறு தூண்டியிருந்தால், அத்தகைய செயல்களுக்கு, அல்லது கடமைப்பொறுப்புகளுக்கு அந்த முதல்வர் கட்டுப்பட்ட வர் ஆவார்.

முகவருடைய அதிகாரம்பெறாத செயல்களை அதிகாரம் பெற்றவை என்ற நம்பிக்கையைத் தூண்டுகிற முதல்வருடைய கடப்பாடு.

எடுத்துக்காட்டுகள்.

(அ). 'அ' என்பவர் விற்பனைக்காக 'ஆ' என்பவருக்குப் பொருள் களை அனுப்புகிறார். மேலும், ஒரு குறிக்கப்பட்ட விலைக்குக் குறைத்து விற்கக் கூடாது என்று ஏவுரைகள் செய்கிறார். 'ஆ' வுக்குக் கிடைத்த ஏவுரைகளை அறியாத 'இ' என்பவர் குறிக்கப்பட்ட விலைக்கும் குறைவான விலைக்கு அந்தப் பொருள்களை வாங்க 'ஆ' வுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். 'அ' அந்த ஒப்பந்தத்தால் கட்டுப் பட்டவராவார்.

(ஆ) வெற்று மேற்குறிப்புச் செய்யப்பட்ட (endorsed in blank) செலாவணிச் சீட்டுக்களை 'ஆ' என்பவரிடம் 'அ' என்பவர் ஒப்படைக் கிறார். 'அ' விடமிருந்து கிடைத்த தனிப்பட்ட ஆணைகளை மீறி 'ஆ' அவற்றை 'இ' என்பவருக்கு விற்று விடுகிறார். இந்த விற்பனை செல்லும்.

238. தங்களுடைய முதல்வர்களுக்காக தங்களுடைய தொழில் நடப்பு முறையில் செயற்படுகையில் முகவர்களால் செய்யப்பட்ட திரித்துக்கூறுகைகள் அல்லது மோசடிகள், முதல் வர்களாலே செய்யப்பட்டிருந்தாற்போன்றே அதே விளைவை அந்த முகவர்கள் செய்த உடன்பாடுகளின்மீது உண்டாக்கும்; ஆனால், முகவர்களது அதிகாரத்துக்குள் வராத பொருள் களில் அந்த முகவர்களால் செய்யப்பட்ட திரித்துக் கூறுகைகள் அல்லது மோசடிகள் அவர்களுடைய முதல்வர்களை ஊறுபடுத்தா.

முகவர் செய்த திரித்துக் கூறுகை அல்லது மோசடியானது, உடன்பாட்டின்மீது உண்டாக்கும் விளைவு.

எடுத்துக்காட்டுகள்.

(அ) பொருள்களை விற்பதற்காக 'ஆ' என்பவரின் முகவராக இருக்கும் 'அ' என்பவர் திரித்துக்கூறுகை ஒன்றின் மூலம் அவற்றை விலைக்கு வாங்கிக் கொள்ளும்படி 'இ' என்பவரைத் தூண்டுகிறார். அவ்வாறு திரித்துக்கூறும்படி 'ஆ'வினால் அவருக்கு அதிகாரம் அளிக்கப் பெறவில்லை. 'ஆ', 'இ' ஆகியோரிடையேயுள்ள இந்த ஒப்பந்தமானது 'இ'யின் தெரிவின் பேரில் செல்லாததாக்கத்தக்கதாகும்.

(ஆ). 'ஆ' என்பவரின் கப்பலுக்குத் தலைவரான 'அ' என்பவர் கப்பற்சரக்குப் பட்டிகளில், அவற்றில் குறிப்பிடப்பட்ட பொருள்களைக் கப்பலில் பெற்றுக் கொள்ளாமலே கையொப்பம் இடுகிறார். சரக்கனுப்புநராகப் பாசாங்கு செய்பவருக்கும் 'ஆ'வுக்கும் இடையே, அந்தக் கப்பற் சரக்குப் பட்டிகள் செல்லாதவையாகும்.

அத்தியாயம் XI.—(கூட்டாண்மை பற்றி.) *1932* ஆம் ஆண்டு இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் *73* ஆம் பிரிவினாலும் II ஆம் இணைப்புப் பட்டியலினாலும் நீத்தறவு செய்யப்பட்டது.

இணைப்புப்பட்டியல்—(செய்சட்டங்கள் நீத்தறவு செய்யப்பட்டன.) *1914* ஆம் ஆண்டு நீத்தறவு செய்தல் மற்றும் திருத்துதல் சட்டத்தின் *3* ஆம் பிரிவினாலும் II ஆம் இணைப்புப்பட்டியலினாலும் நீத்தறவு செய்யப்பட்டன.